(i) (0, 0), (3, 4), (0, 8) மற்றும் $(-3, 4)$ (ii) $(-4, -7)$, $(-1, 2)$, (8, 5) மற்றும் $(5, -4)$

(iii) (1, 0), (5, 3), (2, 7) மற்றும் $(-2, 4)$ (iv) $(2, -3)$, (6, 5), $(-2, 1)$ மற்றும் $(-6, -7)$

(v) (15, 20), $(-3, 12)$, $(-11, -6)$ மற்றும் (7, 2)

8. வரிசையில் அமைந்த கீழ்காணும் புள்ளிகள் ஒரு சதுரத்தை அமைக்குமா எனக் காண்க.

(i) $(0, -1)$, (2, 1), (0, 3) மற்றும் $(-2, 1)$ (ii) (5, 2), (1, 5), $(-2, 1)$ மற்றும் $(2, -2)$

(iii) (3, 2), (0, 5), $(-3, 2)$ மற்றும் $(0, -1)$ (iv) (12, 9), $(20, -6)$, $(5, -14)$ மற்றும் $(-3, 1)$

(v) $(-1, 2)$, (1, 0), (3, 2) மற்றும் (1, 4)

9. வரிசையில் அமைந்த கீழ்காணும் புள்ளிகள் ஒரு செவ்வகத்தை அமைக்குமா எனக் காண்க.

(i) (8, 3), $(0, -1)$, $(-2, 3)$ மற்றும் (6, 7) (ii) $(-1, 1)$, (0, 0), (3, 3) மற்றும் (2, 4)

(iii) $(-3, 0)$, $(1, -2)$, (5, 6) மற்றும் (1, 8)

10. $(x, 7)$ மற்றும் (1, 15) என்ற புள்ளிகளுக்கு இடைப்பட்டத் தொலைவு 10 எனில், x-ன் மதிப்புகளைக் காண்க.

11. (4, 1) என்ற புள்ளி, $(-10, 6)$ மற்றும் $(9, -13)$ என்ற புள்ளிகளிலிருந்து சமதூரத்தில் உள்ளது எனக் காட்டுக.

12. (x, y) என்ற புள்ளி, (2, 3) மற்றும் $(-6, -5)$ என்ற புள்ளிகளிலிருந்து சமதூரத்தில் அமைந்தால், $x + y + 3 = 0$ எனக் காட்டுக.

13. $(2, -6)$ மற்றும் $(2, y)$ என்ற புள்ளிகளுக்கு இடைப்பட்டத் தொலைவு 4 எனில், y-ன் மதிப்புகளைக் காண்க.

14. கீழ்க்காணும் புள்ளிகளை உச்சிகளாகக் கொண்ட முக்கோணங்களின் சுற்றளவுகளைக் காண்க. (i) (0, 8), (6, 0) மற்றும் ஆதிப்புள்ளி ; (ii) (9, 3), $(1, -3)$ மற்றும் ஆதிப்புள்ளி.

15. $(-5, 2)$, $(9, -2)$ என்ற புள்ளிகளுக்கு சம தூரத்தில் உள்ள புள்ளி y-அச்சின் மீது அமைந்தால் அப்புள்ளியை காண்க. (குறிப்பு : y-அச்சின் மேல் உள்ள ஒரு புள்ளியின் x-அச்சுதூரம் பூச்சியம் ஆகும்)

16. $(-5, 6)$ என்ற புள்ளி வழி செல்லும் ஒரு வட்டத்தின் மையம் $(3, 2)$ எனில், அதன் ஆரத்தைக் காண்க.

17. ஆதிப்புள்ளியை மையமாகவும், ஆரம் 5 அலகுகள் ஆகவும் உள்ள ஒரு வட்டத்தின் மேல் $(0, -5)$ $(4, 3)$ மற்றும் $(-4, -3)$ என்ற புள்ளிகள் அமையும் என நிரூபிக்க.

18. படம் 5.20-ல், AB என்பது $A(4,3)$ என்ற புள்ளியில் இருந்து x-அச்சுக்கு வரையப்பட்ட செங்குத்து கோடு மற்றும் $PA = PB$ எனில், B என்ற புள்ளியின் அச்சுத்தூரங்களைக் காண்க.



படம் 5.20

19. $A(2, 0)$, $B(5, -5)$, $C(8, 0)$ மற்றும் $D(5, 5)$ என்ற வரிசையில் எடுத்துக் கொள்ளப்பட்ட புள்ளிகள் ஒரு சாய்சதுரத்தின் உச்சிப்புள்ளிகள் எனில், அதன் பரப்பளவைக் காண்க. (குறிப்பு : சாய்சதுரத்தின் பரப்பு $= \frac{1}{2}d_1 d_2$)

20. $(1, 5)$ $(5, 8)$ மற்றும் $(13, 14)$ என்ற புள்ளிகளை உச்சிகளாக கொண்டு ஒரு முக்கோணம் வரைய முடியுமா? காரணம் கூறவும்.

21. ஒரு வட்டத்தின் மையம் ஆதிப்புள்ளி மற்றும் ஆரம் 17 அலகுகள் எனில், அவ்வட்டத்தின் மேல் அமைந்த ஆனால் அச்சுகளின் மேல் அமையாத நான்கு புள்ளிகளைக் காண்க. (குறிப்பு : 8, 15, 17 என்பவை பிதாகரஸ் செங்கோண முக்கோண எண்களாகும்)

22. $(3, 1)$, $(2, 2)$ மற்றும் $(1, 1)$ என்ற புள்ளிகளை உச்சிகளாக கொண்ட ஒரு முக்கோணத்தின் சுற்று வட்ட மையம் $(2, 1)$ எனக் காட்டுக.

23. $(1, 0)$, $(0, -1)$ மற்றும் $\left(\frac{-1}{2}, \frac{\sqrt{3}}{2}\right)$ என்ற புள்ளிகளை உச்சிகளாக கொண்ட ஒரு முக்கோணத்தின் சுற்று வட்ட மையம் ஆதிப்புள்ளி எனக் காட்டுக.

24. வரிசையில் அமைந்த $A(6, 1)$, $B(8, 2)$, $C(9, 4)$ மற்றும் $D(p, 3)$ என்ற புள்ளிகள் ஒரு இணைகரத்தின் உச்சிப்புள்ளிகளானால், தொலைவு சூத்திரத்தைப் பயன்படுத்தி, p-ன் மதிப்பைக் காண்க.

25. ஒரு வட்டத்தின் மையம் ஆதிப்புள்ளி மற்றும் ஆரம் 10 அலகுகள் என்க. இவ்வட்டம் கார்டீசியன் அச்சுக்களை வெட்டும் புள்ளிகளின் அச்சுத்தொலைவுகளைக் காண்க. மேலும் அவ்வாறான ஏதேனும் இரண்டு புள்ளிகளுக்கு இடைப்பட்டத் தொலைவைக் காண்க.

நினைவில் கொள்க

- ஒரு தளத்தில் ஒரு புள்ளியை குறிக்க ஒன்றுக்கொன்று செங்குத்தாக வெட்டிக் கொள்ளும் இரு கோடுகள் தேவை. செவ்வக அச்சுத்தூர முறையில் அவ்விரு கோடுகளில் ஒன்று கிடைக்கோடாகவும் மற்றொன்று குத்துக் கோடாகவும் இருக்கும்.
- இவ்விரண்டு கிடை மற்றும் குத்துக்கோடுகள் கார்டீசியன் தளத்தின் அச்சுகள் என்று அழைக்கப்படும். (x-அச்சு மற்றும் y-அச்சு)
- x-அச்சு மற்றும் y-அச்சு வெட்டிக் கொள்ளும் புள்ளி $(0, 0)$ ஆதிப்புள்ளி ஆகும்.
- எந்த ஒரு புள்ளிக்கும் y-அச்சிற்கும் இடையிலான தொலைவு x-அச்சுத்தூரம் அல்லது x-தொலைவு என்றும், புள்ளிக்கும் x-அச்சிற்கும் இடையிலான தொலைவு y-அச்சுத்தூரம் அல்லது y-தொலைவு என்றும் அழைக்கப்படும்.
- x-அச்சின் மேல் உள்ள ஒரு புள்ளியின் y அச்சுத்தூரம் பூச்சியம் ஆகும்.
- y-அச்சின் மேல் உள்ள ஒரு புள்ளியின் x அச்சுத்தூரம் பூச்சியம் ஆகும்.
- ஒரு கிடைக்கோட்டின் மேல் உள்ள புள்ளிகளின் y அச்சுத்தூரங்கள் சமமாக இருக்கும்.
- ஒரு குத்துக்கோட்டின் மேல் உள்ள புள்ளிகளின் x அச்சுத்தூரங்கள் சமமாக இருக்கும்.
- x-அச்சின் மேல் உள்ள இரு புள்ளிகளின் x-அச்சுத்தூரங்கள் x_1 மற்றும் x_2 எனில், அவைகளுக்கு இடையிலான தொலைவு $|x_1 - x_2|$ ஆகும்.
- y-அச்சின் மேல் உள்ள இரு புள்ளிகளின் y-அச்சுத்தூரங்கள் y_1 மற்றும் y_2 எனில், அவைகளுக்கு இடையிலான தொலைவு $|y_1 - y_2|$ ஆகும்.
- (x_1, y_1) மற்றும் ஆதிப்புள்ளிக்கும் இடையிலான தொலைவு $\sqrt{x_1^2 + y_1^2}$ ஆகும்.
- (x_1, y_1) மற்றும் (x_2, y_2) என்ற புள்ளிகளுக்கு இடையிலான தொலைவு $\sqrt{(x_2 - x_1)^2 + (y_2 - y_1)^2}$ ஆகும்.

6 முக்கோணவியல்

There is perhaps nothing which so occupies the middle position of mathematics as trigonometry.

– J.F. HERBART

முதன்மைக் குறிக்கோள்கள்

- முக்கோணவியல் விகிதங்களை அறிதல்
- நிரப்புக் கோணங்களின் முக்கோணவியல் விகிதங்களை அறிதல்
- முக்கோணவியல் அட்டவணையைப் பயன்படுத்துதல்

6.1 அறிமுகம்

முக்கோணவியலின் ஆங்கில மொழியாக்கமான ***Trigonometry*** என்ற சொல் கிரேக்க மொழியிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் முக்கோணத்தின் அளவுகள் என்பதாகும். ஆரம்ப காலங்களில் முக்கோணத்தின் பக்கங்களுக்கும், அதன் கோணங்களுக்கும் இடையே உள்ள தொடர்பினை அறிய முக்கோணவியல் பயன்பட்டது. *ஹிப்பார்க்கஸ் (Hipparchus)* எனும் கிரேக்க வானவியல் மற்றும் கணித வல்லுநர் முதன் முதலில் முக்கோணவியல் விகித அட்டவணையை கட்டமைத்து, முக்கோணவியலின் முன்னேற்றத்திற்கு வித்திட்டார். எனவே, இவர் *முக்கோணவியலின் தந்தை* என அழைக்கப்படுகிறார். முக்கோணவியலானது தற்காலத்தில் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வரும் பல பயன்பாடுகளை உள்ளடக்கிய மிகப்பழமையான கணித யுக்தியாகும். பண்டைக்காலங்களில் நிலஅளவை மற்றும் வானவியலில் கோணங்கள் மற்றும் தூரங்கள் அளவிட செங்கோண முக்கோணவியலை பயன்படுத்தினர். கப்பல் பயணத்தின் போது வழி காணவும், வான்வெளியில் கோள்களின் இயங்கு பாதைகள் மற்றும் அதிர்வுகளை (ஒலி அலைகள், கிடார் கம்பியின் அதிர்வுகள்) காணவும் முக்கோணவியல் பயன்படுத்தப்படுகிறது.

6.2 முக்கோணவியல் விகிதங்கள்

6.2.1 கோணம் *(Angle)*

நாம் இப்பாடப்பிரிவை கோணத்தின் வரையறையை அறிவதன் மூலம் தொடங்குவோம். இவ்வரையறை பல்வேறு விதிகளை உள்ளடக்கியது ஆகும்.

ஆரியபட்டா

(A.D. 476 – 550)

நாம் இப்போது *sine* எனும் குறியீட்டை எவ்வாறு பயன்படுத்துகிறோமோ, அதே பொருளில் முதன் முதலில் உபயோகித்தவர் ஆரியபட்டா *(Aryabhatta)*. கி. பி 500-ல் அவர் எழுதிய ஆரியபட்டியம் எனும் கணித நூலில் *sine* எனும் குறியீடு காணப்படுகிறது. ஆரியபட்டர் இந்தியாவின் மிகச்சிறந்த முற்கால கணித மேதைகளில் முதன்மையானவர். இவர் பீகார் மாநிலம் பாட்னாவில் உள்ள பாடலிபுத்திரம் எனும் இடத்தில் வாழ்ந்தவர் ஆவர். இவர் கி.பி 476 ஆம் ஆண்டு மார்ச் 21 மேச சங்கராந்தி அன்று பிறந்தார். இவர் தனது 23-வது வயதில் வானவியல் பற்றி குறைந்தபட்சம் ஆரியபட்டா, ஆரியபட்டா சித்தாந்தா எனும் இரு நூல்களை எழுதினார். இதில் ஆரியபட்டா எனும் நூல் கணிதம் மற்றும் வானவியலைப் பற்றியது.

முக்கிய கருத்து **கோணம்**

இருபரிமாண தளத்தில் திசையிட்ட இரு கோட்டுப் பகுதிகளுக்கு இடைப்பட்ட பகுதி கோணம் எனப்படும். கோணம் ஆரம்பிக்கும் பகுதி கோணத்தின் தொடக்கப்பக்கம் எனவும் அது முடியும் பகுதி முடிவுப்பக்கம் எனவும் அழைக்கப்படும். திசையிட்ட இரு கோட்டுப் பகுதிகள் ஆரம்பிக்கும் புள்ளி கோணத்தின் உச்சி எனப்படும்.

படம் 6.1 ஆனது கோணத்திற்கான வரைபட உதாரணமாகும்.

இங்கு O-வைப் பொறுத்து கதிர் OA ஆனது OB வரை சுழற்றப்படுவதால் கோணம் AOB உருவாகிறது. இதனை $\angle AOB$ எனக் குறிப்போம். இங்கு OA என்பது தொடக்கப்பக்கம் எனவும், OB என்பது முடிவுப்பக்கம் எனவும் மற்றும் O என்பது அக்கோணத்தின் உச்சி எனவும் அழைக்கப்படுகிறது. நாம் கோணங்களைக் குறிக்க θ, α, β போன்ற கிரேக்க எழுத்துக்களைப் பயன்படுத்துகிறோம்.



படம் 6.1

ஒரு கோணத்தின் அளவை பாகை என்ற அலகால் குறிக்கிறோம். இது கி.மு 1000 ஆம் ஆண்டிற்கு முன்பே பாபிலோனியர்களால் பயன்படுத்தப்பட்டது. ஒரு பாகை (1° என குறியிடுவோம்) என்பது ஒரு சுழற்சியில் உண்டாகும் கோணத்தின் $\frac{1}{360}$ மடங்கு ஆகும்.

6.2.2 பிதாகரஸ் தேற்றம் (*Pythagoras Theorem*)

ஒரு செங்கோண முக்கோணத்தின் தெரியாத பக்க அளவைக் காண பிதாகரஸ் தேற்றம் பயன்படுகிறது.

பிதாகரஸ் தேற்றம்: ஒரு செங்கோண முக்கோணத்தில் கர்ணத்தின் மீது வரையப்படும் சதுரத்தின் பரப்பளவானது, மற்ற இரண்டு பக்கங்களின் மீது வரையப்படும் சதுரங்களின் பரப்பளவுகளின் கூடுதலுக்கு சமம்.

பிதாகரஸ் தேற்றம் முக்கோணவியல் கருத்துக்களை மேம்படுத்தவும், பல கணக்குகளுக்கு **தீர்வு** காணவும் பயன்படுகிறது.

6.2.3 முக்கோணவியல் விகிதங்கள் (*Trigonometric Ratios*)

படம் 6.2-ல் உள்ள செங்கோண முக்கோணத்தின் மூன்று பக்கங்கள் கோணம் θ-விற்கு எங்ஙனம் தொடர்பு பெற்று அமைந்துள்ளது எனக் காண்போம்.

- செங்கோணத்திற்கு நேர் எதிரே அமைந்துள்ள பக்கம் கர்ணம் எனப்படும். இது செங்கோண முக்கோணத்தின் மிக நீளமான பக்கம் ஆகும்.
- கோணம் θ விற்கு நேர் எதிரே அமைந்துள்ள பக்கம் எதிர்ப்பக்கம் ஆகும்.
- θ விற்கு அருகிலுள்ள கர்ணம் அல்லாத பக்கம் அடுத்துள்ள பக்கம் ஆகும்.



படம் 6.2

வடிவொத்த செங்கோண முக்கோணங்களை அடிப்படையாக கொண்டே முக்கோணவியல் விகிதங்கள் *(Trigonometrical Ratios)* முதலில் உருவாக்கப்பட்டது. பொதுவான குறுங்கோணத்தைக் கொண்ட எல்லா செங்கோண முக்கோணங்களும் வடிவொத்தவை ஆகும். கீழ்க்காணும் செங்கோண முக்கோணங்களின் குறுங்கோணங்கள் ஒரே அளவினை உடையதாகும்.



எனவே, மேற்காணும் முக்கோணங்களில் ஒத்த பக்கங்களின் விகிதங்கள் சமமாகும்.

எடுத்துக்காட்டாக, $\frac{AD}{OA} = \frac{BE}{OB} = \frac{CF}{OC}$; $\frac{OD}{OA} = \frac{OE}{OB} = \frac{OF}{OC}$

இம்முக்கோணங்களின் பக்கங்களின் விகிதங்கள் θ-ன் அளவைப் பொறுத்து அமைகிறதே தவிர குறிப்பிட்ட எந்த ஒரு செங்கோண முக்கோணத்தைப் பொறுத்தும் அமைவதில்லை. இதன் மூலம் நாம் ஆறு முக்கோணவியல் விகிதங்களைப் பெறுகிறோம். இந்த விகிதங்களுக்கு வெகுகாலத்திற்கு முன்பே பெயரிட்டுள்ளனர்.

$\frac{\text{எதிர்ப்பக்கம்}}{\text{கர்ணம்}}$ என்ற விகிதம் கோணம் θ-வின் *sine* என அழைக்கப்படுகிறது. மேலும் இது $\sin\theta$ எனக் குறிப்பிடப்படுகிறது.

$\frac{\text{அடுத்துள்ள பக்கம்}}{\text{கர்ணம்}}$ என்ற விகிதம் கோணம் θ-வின் *cosine* என அழைக்கப்படுகிறது. மேலும் இது $\cos\theta$ எனக் குறிப்பிடப்படுகிறது.

$\frac{\text{எதிர்ப்பக்கம்}}{\text{அடுத்துள்ள பக்கம்}}$ என்ற விகிதம் கோணம் θ-வின் *tangent* என அழைக்கப்படுகிறது. மேலும் இது $\tan\theta$ எனக் குறிப்பிடப்படுகிறது.

$\frac{\text{கர்ணம்}}{\text{எதிர்ப்பக்கம்}}$ என்ற விகிதம் கோணம் θ-வின் *cosecant* என அழைக்கப்படுகிறது. மேலும் இது $\operatorname{cosec}\theta$ எனக் குறிப்பிடப்படுகிறது.

$\frac{\text{கர்ணம்}}{\text{அடுத்துள்ள பக்கம்}}$ என்ற விகிதம் கோணம் θ-வின் *secant* என அழைக்கப்படுகிறது. மேலும் இது $\sec\theta$ எனக் குறிப்பிடப்படுகிறது.

$\frac{\text{அடுத்துள்ள பக்கம்}}{\text{எதிர்ப்பக்கம்}}$ என்ற விகிதம் கோணம் θ-வின் *cotangent* என அழைக்கப்படுகிறது. மேலும் இது $\cot\theta$ எனக் குறிப்பிடப்படுகிறது.

முக்கிய கருத்து **முக்கோணவியல் விகிதங்கள்**

செங்கோண முக்கோணத்தில் θ ஒரு குறுங்கோணம் என்க. கோணம் θ-வைப் பொறுத்து ஆறு முக்கோணவியல் விகிதங்கள் பின்வருமாறு

$$\sin\theta = \frac{\text{எதிர்ப்பக்கம்}}{\text{கர்ணம்}} \qquad \operatorname{cosec}\theta = \frac{\text{கர்ணம்}}{\text{எதிர்ப்பக்கம்}}$$

$$\cos\theta = \frac{\text{அடுத்துள்ள பக்கம்}}{\text{கர்ணம்}} \qquad \sec\theta = \frac{\text{கர்ணம்}}{\text{அடுத்துள்ள பக்கம்}}$$

$$\tan\theta = \frac{\text{எதிர்ப்பக்கம்}}{\text{அடுத்துள்ள பக்கம்}} \qquad \cot\theta = \frac{\text{அடுத்துள்ள பக்கம்}}{\text{எதிர்ப்பக்கம்}}$$

தலைகீழ் தொடர்புகள்

$\operatorname{cosec}\theta$, $\sec\theta$ மற்றும் $\cot\theta$ ஆகிய முக்கோணவியல் விகிதங்கள் முறையே $\sin\theta$, $\cos\theta$ மற்றும் $\tan\theta$ ஆகியவற்றின் தலைகீழ் விகிதங்கள் ஆகும்.

$$\sin\theta = \frac{1}{\operatorname{cosec}\theta} \qquad \cos\theta = \frac{1}{\sec\theta} \qquad \tan\theta = \frac{1}{\cot\theta}$$

$$\operatorname{cosec}\theta = \frac{1}{\sin\theta} \qquad \sec\theta = \frac{1}{\cos\theta} \qquad \cot\theta = \frac{1}{\tan\theta}$$

குறிப்புரை

1. அடிப்படை விகிதங்களாகிய $\sin\theta$, $\cos\theta$ மற்றும் $\tan\theta$ ஆகியன $\tan\theta = \frac{\sin\theta}{\cos\theta}$ என்பதன் மூலம் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன.
2. குறுங்கோணம் θ ன் முக்கோணவியல் விகிதங்களைக் கணக்கிட, கோணம் θ வை கொண்ட எவ்வித செங்கோண முக்கோணத்தையும் பயன்படுத்தலாம்.
3. முக்கோணவியல் விகிதங்கள் பக்கங்களின் விகிதங்களாக வரையறுக்கப்பட்டுள்ளதால் முக்கோணவியல் விகிதங்கள் அலகு அற்றது.

எடுத்துக்காட்டு 6.1

படத்தில் காணும் செங்கோண முக்கோணம் ABC-ல், கோணம் θ-வைப் பொறுத்து ஆறு முக்கோணவியல் விகிதங்களைக் காண்க.



படம் 6.3

தீர்வு படம் 6.3 லிருந்து, எதிர்ப்பக்கம் $BC = 3$, அடுத்துள்ள பக்கம் $AB = 4$, கர்ணம் $AC = 5$

$$\sin\theta = \frac{BC}{AC} = \frac{3}{5} \qquad \operatorname{cosec}\theta = \frac{AC}{BC} = \frac{5}{3}$$

$$\cos\theta = \frac{AB}{AC} = \frac{4}{5} \qquad \sec\theta = \frac{AC}{AB} = \frac{5}{4}$$

$$\tan\theta = \frac{BC}{AB} = \frac{3}{4} \qquad \cot\theta = \frac{AB}{BC} = \frac{4}{3}$$

எடுத்துக்காட்டு 6.2

படத்தில் காணும் செங்கோண முக்கோணம் PQR-ல், கோணம் θ-வைப் பொறுத்து ஆறு முக்கோணவியல் விகிதங்களைக் காண்க.



படம் 6.4

தீர்வு படம் 6.4-லிருந்து, எதிர்ப்பக்கம் $PQ = 5$, அடுத்துள்ள பக்கம் $PR = 12$, கர்ணம் $QR = 13$

$$\sin\theta = \frac{PQ}{RQ} = \frac{5}{13} \qquad \operatorname{cosec}\theta = \frac{RQ}{PQ} = \frac{13}{5}$$

$$\cos\theta = \frac{PR}{RQ} = \frac{12}{13} \qquad \sec\theta = \frac{RQ}{PR} = \frac{13}{12}$$

$$\tan\theta = \frac{PQ}{PR} = \frac{5}{12} \qquad \cot\theta = \frac{PR}{PQ} = \frac{12}{5}$$

எடுத்துக்காட்டு 6.3

படம் 6.5-லிருந்து, கோணம் θ-வின் ஆறு முக்கோணவியல் விகிதங்களைக் காண்க.



படம் 6.5

தீர்வு படம் 6.5-லிருந்து, $AC = 24$ மற்றும் $BC = 7$. பிதாகரஸ் தேற்றத்தின்படி,

$$AB^2 = BC^2 + CA^2 = 7^2 + 24^2 = 49 + 576 = 625$$

$$\therefore AB = \sqrt{625} = 25$$

நாம் இப்பொழுது மூன்று பக்கங்களின் அளவுகளைப் பயன்படுத்தி, கோணம் θ-வைப் பொறுத்து ஆறு முக்கோணவியல் விகிதங்களைக் காணலாம்

$$\sin\theta = \frac{BC}{AB} = \frac{7}{25} \qquad \operatorname{cosec}\theta = \frac{AB}{BC} = \frac{25}{7}$$

$$\cos\theta = \frac{AC}{AB} = \frac{24}{25} \qquad \sec\theta = \frac{AB}{AC} = \frac{25}{24}$$

$$\tan\theta = \frac{BC}{AC} = \frac{7}{24} \qquad \cot\theta = \frac{AC}{BC} = \frac{24}{7}$$

எடுத்துக்காட்டு 6.4

செங்கோண முக்கோணம் ABC-ல், B செங்கோணம் மற்றும் $15 \sin A = 12$ எனில், கோணம் A-ன் மற்ற ஐந்து முக்கோணவியல் விகிதங்களையும், கோணம் C-ன் ஆறு முக்கோணவியல் விகிதங்களையும் காண்க.



படம் 6.6

தீர்வு $15 \sin A = 12$ என கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, $\sin A = \frac{12}{15}$. $BC = 12$, $AC = 15$ மற்றும் B-ஐ செங்கோணமாக கொண்ட ΔABC ஐ (படம் 6.6) கருதுக. பிதாகரஸ் தேற்றத்தின்படி,

$$AC^2 = AB^2 + BC^2$$
$$15^2 = AB^2 + 12^2$$
$$AB^2 = 15^2 - 12^2 = 225 - 144 = 81$$
$$\therefore AB = \sqrt{81} = 9$$

நாம் இப்பொழுது மூன்று பக்கங்களின் அளவுகளைப் பயன்படுத்தி, கோணம் A மற்றும் C-ன் முக்கோணவியல் விகிதங்களைப் பின்வருமாறு காணலாம்.

$$\cos A = \frac{AB}{AC} = \frac{9}{15} = \frac{3}{5} \qquad \sin C = \frac{AB}{AC} = \frac{9}{15} = \frac{3}{5}$$
$$\tan A = \frac{BC}{AB} = \frac{12}{9} = \frac{4}{3} \qquad \cos C = \frac{BC}{AC} = \frac{12}{15} = \frac{4}{5}$$
$$\operatorname{cosec} A = \frac{AC}{BC} = \frac{15}{12} = \frac{5}{4} \qquad \tan C = \frac{AB}{BC} = \frac{9}{12} = \frac{3}{4}$$
$$\sec A = \frac{AC}{AB} = \frac{15}{9} = \frac{5}{3} \qquad \operatorname{cosec} C = \frac{AC}{AB} = \frac{15}{9} = \frac{5}{3}$$
$$\cot A = \frac{AB}{BC} = \frac{9}{12} = \frac{3}{4} \qquad \sec C = \frac{AC}{BC} = \frac{15}{12} = \frac{5}{4}$$
$$\cot C = \frac{BC}{AB} = \frac{12}{9} = \frac{4}{3}$$

எடுத்துக்காட்டு 6.5

$\triangle PQR$-ல், Q செங்கோணம், $PQ = 8$ மற்றும் $PR = 17$ எனில், கோணம் P-ன் ஆறு முக்கோணவியல் விகிதங்களைக் காண்க.

தீர்வு செங்கோண முக்கோணம் PQR-ல், Q செங்கோணம் (படம் 6.7ஐ பார்க்க), $PQ = 8$ மற்றும் $PR = 17$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. பிதாகரஸ் தேற்றத்தின்படி,

$$PR^2 = PQ^2 + QR^2$$
$$17^2 = 8^2 + QR^2$$
$$QR^2 = 17^2 - 8^2$$
$$= 289 - 64 = 225$$
$$\therefore \quad QR = \sqrt{225} = 15$$



படம் 6.7

நாம் இப்பொழுது மூன்று பக்கங்களின் அளவுகளைப் பயன்படுத்தி, கோணம் P-ன் ஆறு முக்கோணவியல் விகிதங்களைக் காணலாம்.

$$\sin P = \frac{RQ}{PR} = \frac{15}{17} \qquad \operatorname{cosec} P = \frac{PR}{RQ} = \frac{17}{15}$$
$$\cos P = \frac{PQ}{PR} = \frac{8}{17} \qquad \sec P = \frac{PR}{PQ} = \frac{17}{8}$$
$$\tan P = \frac{RQ}{PQ} = \frac{15}{8} \qquad \cot P = \frac{PQ}{RQ} = \frac{8}{15}$$

எடுத்துக்காட்டு 6.6

$\cos A = \dfrac{35}{37}$ எனில், $\dfrac{\sec A + \tan A}{\sec A - \tan A}$ வைக் காண்க.

தீர்வு $\cos A = \dfrac{35}{37}$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. $AB = 35$ மற்றும் $AC = 37$, $\angle B = 90^\circ$ கொண்ட செங்கோண முக்கோணம் ABC ஐக் (படம் 6.8) கருதுக. பிதாகரஸ் தேற்றத்தின்படி, நாம் பெறுவது

$$\begin{aligned} AC^2 &= AB^2 + BC^2 \\ 37^2 &= 35^2 + BC^2 \\ BC^2 &= 37^2 - 35^2 \\ &= 1369 - 1225 = 144 \\ \therefore BC &= \sqrt{144} = 12 \end{aligned}$$



படம் 6.8

$$\sec A = \frac{AC}{AB} = \frac{37}{35}, \qquad \tan A = \frac{BC}{AB} = \frac{12}{35}$$

எனவே, $\sec A + \tan A = \dfrac{37}{35} + \dfrac{12}{35} = \dfrac{49}{35}$, $\quad \sec A - \tan A = \dfrac{37}{35} - \dfrac{12}{35} = \dfrac{25}{35}$

$$\therefore \frac{\sec A + \tan A}{\sec A - \tan A} = \frac{\frac{49}{35}}{\frac{25}{35}} = \frac{49}{35} \times \frac{35}{25} = \frac{49}{25}$$

எடுத்துக்காட்டு 6.7

$\tan\theta = \dfrac{20}{21}$ எனில், $\dfrac{1 - \sin\theta + \cos\theta}{1 + \sin\theta + \cos\theta} = \dfrac{3}{7}$ என நிறுவுக.

தீர்வு $\tan\theta = \dfrac{20}{21}$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. $AB = 21$ மற்றும் $BC = 20$ அளவுகள் கொண்ட செங்கோண முக்கோணம் ABC-ஐ (படம் 6.9) கருதுக. பிதாகரஸ் தேற்றத்தின்படி, நாம் பெறுவது



படம் 6.9

$$AC^2 = AB^2 + BC^2 = 20^2 + 21^2 = 400 + 441 = 841.$$

$$\therefore AC = \sqrt{841} = 29.$$

$$\sin\theta = \frac{BC}{AC} = \frac{20}{29}, \qquad \cos\theta = \frac{AB}{AC} = \frac{21}{29}$$

$$1 - \sin\theta + \cos\theta = 1 - \frac{20}{29} + \frac{21}{29} = \frac{29 - 20 + 21}{29} = \frac{30}{29}$$

$$1 + \sin\theta + \cos\theta = 1 + \frac{20}{29} + \frac{21}{29} = \frac{29 + 20 + 21}{29} = \frac{70}{29}$$

$$\frac{1 - \sin\theta + \cos\theta}{1 + \sin\theta + \cos\theta} = \frac{\frac{30}{29}}{\frac{70}{29}} = \frac{30}{29} \times \frac{29}{70} = \frac{30}{70} = \frac{3}{7}$$

6.3 சில சிறப்பு கோணங்களின் முக்கோணவியல் விகிதங்கள்

சிலவகை சிறப்புக் கோணங்களான $30^\circ, 45^\circ$ மற்றும் 60°-ன் விகிதங்களைக் காண வடிவியல் முறையைப் பயன்படுத்தலாம்.

6.3.1 30° மற்றும் 60°–ன் முக்கோணவியல் விகிதங்கள்

$\triangle ABC$ என்பது a அலகு பக்க அளவு கொண்ட சமபக்க முக்கோணம் (படம் 6.10ஐ பார்க்க) என்க. $AD \perp BC$ ஐ வரைக. எனவே, D என்பது BC-ன் மையப்புள்ளி ஆகும். ஆதலால், $BD = DC = \frac{a}{2}$ மற்றும் $\angle BAD = \angle DAC = 30^\circ$. இப்போது, செங்கோண முக்கோணம் BDA-ல், $\angle BAD = 30^\circ$ மற்றும் $BD = \frac{a}{2}$. பிதாகரஸ் தேற்றத்தின்படி,



படம் 6.10

$$AB^2 = AD^2 + BD^2$$

$$a^2 = AD^2 + \left[\frac{a}{2}\right]^2$$

$$AD^2 = a^2 - \frac{a^2}{4} \quad = \frac{3a^2}{4}$$

$$\therefore AD = \frac{\sqrt{3}}{2}a$$

ஆகவே, செங்கோண முக்கோணம் BDA-ல் கோணம் 30°-ன் முக்கோணவியல் விகிதங்களை நாம் பின்வருமாறு காணலாம்.

$$\sin 30^\circ = \frac{BD}{AB} = \frac{\frac{a}{2}}{a} = \frac{1}{2} \qquad \operatorname{cosec} 30^\circ = \frac{1}{\sin 30^\circ} = 2$$

$$\cos 30^\circ = \frac{AD}{AB} = \frac{\frac{\sqrt{3}}{2}a}{a} = \frac{\sqrt{3}}{2} \qquad \sec 30^\circ = \frac{1}{\cos 30^\circ} = \frac{2}{\sqrt{3}}$$

$$\tan 30^\circ = \frac{BD}{AD} = \frac{\frac{a}{2}}{\frac{\sqrt{3}}{2}a} = \frac{1}{\sqrt{3}} \qquad \cot 30^\circ = \frac{1}{\tan 30^\circ} = \sqrt{3}$$

$\triangle BDA$-ல், $\angle ABD = 60^\circ$. எனவே, நாம் கோணம் 60°-க்கான முக்கோணவியல் விகிதங்களைப் பின்வருமாறு காணலாம்.

$$\sin 60^\circ = \frac{AD}{AB} = \frac{\frac{\sqrt{3}}{2}a}{a} = \frac{\sqrt{3}}{2} \qquad \operatorname{cosec} 60^\circ = \frac{1}{\sin 60^\circ} = \frac{2}{\sqrt{3}}$$

$$\cos 60^\circ = \frac{BD}{AB} = \frac{\frac{a}{2}}{a} = \frac{1}{2} \qquad \sec 60^\circ = \frac{1}{\cos 60^\circ} = 2$$

$$\tan 60^\circ = \frac{AD}{BD} = \frac{\frac{\sqrt{3}}{2}a}{\frac{a}{2}} = \sqrt{3} \qquad \cot 60^\circ = \frac{1}{\tan 60^\circ} = \frac{1}{\sqrt{3}}$$

6.3.2 45°–ன் முக்கோணவியல் விகிதங்கள்

ஒரு செங்கோண முக்கோணத்தில் ஒரு குறுங்கோணம் 45° எனில், மற்றொரு குறுங்கோணமும் 45° ஆகும். எனவே, அம்முக்கோணம் ஒரு இருசமபக்க செங்கோண முக்கோணமாகும். $\angle B = 90^\circ$ கொண்ட ஒரு இருசமபக்க முக்கோணம் ABC-ஐ கருதுக. இங்கு $\angle A = \angle C = 45^\circ$, எனவே, $AB = BC$.



படம் 6.11

$AB = BC = a$ என்க. பிதாகரஸ் தேற்றத்தின்படி,

$$AC^2 = AB^2 + BC^2$$

$$= a^2 + a^2 = 2a^2$$

$$\therefore AC = a\sqrt{2}$$

படம் 6.11-லிருந்து, கோணம் 45°-ன் முக்கோணவியல் விகிதங்கள் பின்வருமாறு

$$\sin 45^\circ = \frac{BC}{AC} = \frac{a}{a\sqrt{2}} = \frac{1}{\sqrt{2}} \qquad \operatorname{cosec} 45^\circ = \frac{1}{\sin 45^\circ} = \sqrt{2}$$

$$\cos 45^\circ = \frac{AB}{AC} = \frac{a}{a\sqrt{2}} = \frac{1}{\sqrt{2}} \qquad \sec 45^\circ = \frac{1}{\cos 45^\circ} = \sqrt{2}$$

$$\tan 45^\circ = \frac{BC}{AB} = \frac{a}{a} = 1 \qquad \cot 45^\circ = \frac{1}{\tan 45^\circ} = 1$$

6.3.3 0° மற்றும் 90°–ன் முக்கோணவியல் விகிதங்கள்

ஆதியை மையமாகவும் ஓரலகு ஆரமும் கொண்ட வட்டத்தை (படம் 6.12) கருதுக. $P(x, y)$ என்பது முதல் கால்பகுதியில் வட்டத்தின் மீதமைந்த ஏதேனும் ஒரு புள்ளி என்க.

P-யிலிருந்து x அச்சுக்கு செங்குத்துக்கோடு PQஐ வரைக. இது செங்கோண முக்கோணம் OQPஐ அமைக்கிறது. மேலும் $\angle POQ = \theta$ என்க. எனவே,



படம் 6.12

$$\sin\theta = \frac{PQ}{OP} = \frac{y}{1} = y \text{ (}P\text{-ன் } y \text{ அச்சுத்தொலைவு)}$$

$$\cos\theta = \frac{OQ}{OP} = \frac{x}{1} = x \text{ (}P\text{-ன் } x \text{ அச்சுத்தொலைவு)}$$

$$\tan\theta = \frac{PQ}{OQ} = \frac{y}{x}$$

OP ஆனது OA-வுடன் ஒன்றும்போது $\theta = 0^\circ$ ஆகும். A-ன் ஆயத்தொலைவுகள் $(1,0)$ என்பதால், நாம் பெறுவது

$\sin 0^\circ = 0$ (A-ன் y அச்சுத்தொலைவு)	$\operatorname{cosec} 0^\circ$ வரையறுக்கப்படவில்லை
$\cos 0^\circ = 1$ (A-ன் x அச்சுத்தொலைவு)	$\sec 0^\circ = 1$
$\tan 0^\circ = \frac{\sin 0^\circ}{\cos 0^\circ} = \frac{0}{1} = 0$	$\cot 0^\circ$ வரையறுக்கப்படவில்லை

OP ஆனது OB-யுடன் ஒன்றும் போது $\theta = 90^\circ$ ஆகும். B-ன் ஆயத்தொலைவுகள் $(0, 1)$ என்பதால், நாம் பெறுவது

$\sin 90^\circ = 1$ (B-ன் y அச்சுத்தொலைவு)	$\operatorname{cosec} 90^\circ = 1$
$\cos 90^\circ = 0$ (B-ன் x அச்சுத்தொலைவு)	$\sec 90^\circ$ வரையறுக்கப்படவில்லை
$\tan 90^\circ = \frac{\sin 90^\circ}{\cos 90^\circ} = \frac{1}{0}$ வரையறுக்கப்படவில்லை	$\cot 90^\circ = 0$

கோணம் $0^\circ, 30^\circ, 45^\circ, 60^\circ$ மற்றும் 90° ஆகிய கோணங்களுக்கான ஆறு முக்கோணவியல் விகிதங்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

கோணம் θ / விகிதம்	0°	30°	45°	60°	90°
$\sin\theta$	0	$\frac{1}{2}$	$\frac{1}{\sqrt{2}}$	$\frac{\sqrt{3}}{2}$	1
$\cos\theta$	1	$\frac{\sqrt{3}}{2}$	$\frac{1}{\sqrt{2}}$	$\frac{1}{2}$	0
$\tan\theta$	0	$\frac{1}{\sqrt{3}}$	1	$\sqrt{3}$	வரையறுக்கப் படவில்லை
$\operatorname{cosec}\theta$	வரையறுக்கப் படவில்லை	2	$\sqrt{2}$	$\frac{2}{\sqrt{3}}$	1
$\sec\theta$	1	$\frac{2}{\sqrt{3}}$	$\sqrt{2}$	2	வரையறுக்கப் படவில்லை
$\cot\theta$	வரையறுக்கப் படவில்லை	$\sqrt{3}$	1	$\frac{1}{\sqrt{3}}$	0

எடுத்துக்காட்டு 6.8

மதிப்புக் காண்க : $\sin^2 45^\circ + \tan^2 45^\circ + \cos^2 45^\circ$

தீர்வு $\sin 45^\circ = \frac{1}{\sqrt{2}}$, $\tan 45^\circ = 1$ மற்றும் $\cos 45^\circ = \frac{1}{\sqrt{2}}$ என நமக்குத் தெரியும்.

$$\therefore\ \sin^2 45^\circ + \tan^2 45^\circ + \cos^2 45^\circ = \left(\frac{1}{\sqrt{2}}\right)^2 + (1)^2 + \left(\frac{1}{\sqrt{2}}\right)^2$$

$$= \frac{1}{2} + 1 + \frac{1}{2} = 2$$

குறிப்பு $(\sin\theta)^2$ ஐ $\sin^2\theta$ என எழுதுவோம்.

எடுத்துக்காட்டு 6.9

மதிப்புக் காண்க : $\dfrac{12\cos^2 30^\circ - 2\tan^2 60^\circ}{4\sec^2 45^\circ}$

தீர்வு $\cos 30^\circ = \dfrac{\sqrt{3}}{2}$, $\tan 60^\circ = \sqrt{3}$ மற்றும் $\sec 45^\circ = \sqrt{2}$ என நமக்குத் தெரியும்.

$$\therefore\ \frac{12\cos^2 30^\circ - 2\tan^2 60^\circ}{4\sec^2 45^\circ} = \frac{\left(12\times\left(\frac{\sqrt{3}}{2}\right)^2\right) - (2\times(\sqrt{3})^2)}{4\times(\sqrt{2})^2}$$

$$= \frac{\left(12\times\frac{3}{4}\right) - (2\times 3)}{4\times 2}$$

$$= \frac{9-6}{8} = \frac{3}{8}$$

பயிற்சி 6.1

1. பின்வரும் படங்களிலிருந்து, கோணம் θ-வைப் பொறுத்து முக்கோணவியல் விகிதங்களைக் காண்க.



(i)



(ii)



(iii)



(iv)

2. பின்வருவனவற்றிலிருந்து மற்ற முக்கோணவியல் விகிதங்களைக் காண்க.

(i) $\sin A = \dfrac{9}{15}$ (ii) $\cos A = \dfrac{15}{17}$ (iii) $\tan P = \dfrac{5}{12}$

(iv) $\sec\theta = \dfrac{17}{8}$ (v) $\mathrm{cosec}\,\theta = \dfrac{61}{60}$ (vi) $\sin\theta = \dfrac{x}{y}$.

3. பின்வருவனவற்றில் θ-ன் மதிப்பைக் காண்க.

(i) $\sin\theta = \frac{1}{\sqrt{2}}$ (ii) $\sin\theta = 0$ (iii) $\tan\theta = \sqrt{3}$ (iv) $\cos\theta = \frac{\sqrt{3}}{2}$.

4. $\triangle ABC$-ல், B செங்கோணம், $AB = 10$ மற்றும் $AC = 26$ எனில், கோணம் A மற்றும் Cஐப் பொறுத்து ஆறு முக்கோணவியல் விகிதங்களைக் காண்க.

5. $5\cos\theta - 12\sin\theta = 0$ எனில், $\frac{\sin\theta + \cos\theta}{2\cos\theta - \sin\theta}$ மதிப்பைக் காண்க.

6. $29\cos\theta = 20$ எனில், $\sec^2\theta - \tan^2\theta$ மதிப்பைக் காண்க.

7. $\sec\theta = \frac{26}{10}$ எனில், $\frac{3\cos\theta + 4\sin\theta}{4\cos\theta - 2\sin\theta}$ மதிப்பைக் காண்க.

8. $\tan\theta = \frac{a}{b}$ எனில், $\sin^2\theta + \cos^2\theta$ மதிப்பைக் காண்க.

9. $\cot\theta = \frac{15}{8}$ எனில், $\frac{(1+\sin\theta)(1-\sin\theta)}{(1+\cos\theta)(1-\cos\theta)}$ மதிப்பைக் காண்க.

10. முக்கோணம் PQR-ல், Q செங்கோணம் மற்றும் $\tan P = \frac{1}{\sqrt{3}}$ எனில், பின்வருவனவற்றின் மதிப்பைக் காண்க.

(i) $\sin P\cos R + \cos P\sin R$ (ii) $\cos P\cos R - \sin P\sin R$.

11. $\sec\theta = \frac{13}{5}$ எனில், $\frac{2\sin\theta - 3\cos\theta}{4\sin\theta - 9\cos\theta} = 3$ என நிருபி.

12. $\sec A = \frac{17}{8}$ எனில், $1 - 2\sin^2 A = 2\cos^2 - 1$ என நிருபி.

13. மதிப்புக் காண்க :

(i) $\sin 45^\circ + \cos 45^\circ$

(ii) $\sin 60^\circ \tan 30^\circ$

(iii) $\frac{\tan 45^\circ}{\tan 30^\circ + \tan 60^\circ}$

(iv) $\cos^2 60^\circ \sin^2 30^\circ + \tan^2 30^\circ \cot^2 60^\circ$

(v) $6\cos^2 90^\circ + 3\sin^2 90^\circ + 4\tan^2 45^\circ$

(vi) $\frac{4\cot^2 60^\circ + \sec^2 30^\circ - 2\sin^2 45^\circ}{\sin^2 60^\circ + \cos^2 45^\circ}$

(vii) $\frac{\tan^2 60^\circ + 4\cos^2 45^\circ + 3\sec^2 30^\circ + 5\cos^2 90^\circ}{\operatorname{cosec} 30^\circ + \sec 60^\circ - \cot^2 30^\circ}$

(viii) $4(\sin^4 30^\circ + \cos^4 60^\circ) - 3(\cos^2 45^\circ - \sin^2 90^\circ)$.

14. பின்வருவனவற்றைச் சரிபார்க்க.

(i) $\sin^2 30^\circ + \cos^2 30^\circ = 1$

(ii) $1 + \tan^2 45^\circ = \sec^2 45^\circ$

(iii) $\cos 60^\circ = 1 - 2\sin^2 30^\circ = 2\cos^2 30^\circ - 1$

(iv) $\cos 90^\circ = 1 - 2\sin^2 45^\circ = 2\cos^2 45^\circ - 1$

(v) $\dfrac{\cos 60^\circ}{1+\sin 60^\circ} = \dfrac{1}{\sec 60^\circ + \tan 60^\circ}$

(vi) $\dfrac{1-\tan^2 60^\circ}{1+\tan^2 60^\circ} = 2\cos^2 60^\circ - 1$

(vii) $\dfrac{\sec 30^\circ + \tan 30^\circ}{\sec 30^\circ - \tan 30^\circ} = \dfrac{1+\sin 30^\circ}{1-\sin 30^\circ}$

(viii) $\tan^2 60^\circ - 2\tan^2 45^\circ - \cot^2 30^\circ + 2\sin^2 30^\circ + \frac{3}{4}\operatorname{cosec}^2 45^\circ = 0$

(ix) $4\cot^2 45^\circ - \sec^2 60^\circ + \sin^2 60^\circ + \cos^2 60^\circ = 1$

(x) $\sin 30^\circ \cos 60^\circ + \cos 30^\circ \sin 60^\circ = \sin 90^\circ$.

6.4 நிரப்புக் கோணங்களின் முக்கோணவியல் விகிதங்கள்
(Trigonometric Ratios for Complementary Angles)

இரண்டு குறுங்கோணங்களின் கூடுதல் 90° எனில் ஒன்று மற்றொன்றின் நிரப்புக் கோணமாகும். செங்கோண முக்கோணத்தில் இரண்டு குறுங்கோணங்களின் கூடுதல் 90°. எனவே, செங்கோண முக்கோணத்தில் உள்ள இரு குறுங்கோணங்களும் எப்பொழுதும் ஒன்றுக்கொன்று நிரப்புக் கோணங்களாகும்.

செங்கோண முக்கோணம் ABC–ல், B செங்கோணம் என்க (படம் 6.13ஐ பார்க்க). $\angle ACB = \theta$ எனில், $\angle BAC = 90^\circ - \theta$. ஆகவே, கோணங்கள் $\angle BAC$ மற்றும் $\angle ACB$ ஆகியவை ஒன்றுக்கொன்று நிரப்புக் கோணங்களாகும்.

கோணம் θ-விற்கான விகிதங்கள்

$$\left.\begin{aligned} \sin\theta &= \frac{AB}{AC} & \operatorname{cosec}\theta &= \frac{AC}{AB} \\ \cos\theta &= \frac{BC}{AC} & \sec\theta &= \frac{AC}{BC} \\ \tan\theta &= \frac{AB}{BC} & \cot\theta &= \frac{BC}{AB} \end{aligned}\right\} \quad (1)$$



படம் 6.13

இதே போன்று, கோணம் $(90^\circ - \theta)$-விற்கான விகிதங்கள்

$$\left.\begin{aligned} \sin(90^\circ-\theta) &= \frac{BC}{AC} & \operatorname{cosec}(90^\circ-\theta) &= \frac{AC}{BC} \\ \cos(90^\circ-\theta) &= \frac{AB}{AC} & \sec(90^\circ-\theta) &= \frac{AC}{AB} \\ \tan(90^\circ-\theta) &= \frac{BC}{AB} & \cot(90^\circ-\theta) &= \frac{AB}{BC} \end{aligned}\right\} (2)$$

(1) மற்றும் (2)-ல் உள்ள விகிதங்களை ஒப்பிட நாம் பெறுவது,

$$\begin{aligned} \sin\theta &= \frac{AB}{AC} = \cos(90^\circ-\theta) & \operatorname{cosec}\theta &= \frac{AC}{AB} = \sec(90^\circ-\theta) \\ \cos\theta &= \frac{BC}{AC} = \sin(90^\circ-\theta) & \sec\theta &= \frac{AC}{BC} = \operatorname{cosec}(90^\circ-\theta) \\ \tan\theta &= \frac{AB}{BC} = \cot(90^\circ-\theta) & \cot\theta &= \frac{BC}{AB} = \tan(90^\circ-\theta) \end{aligned}$$

முக்கிய கருத்து — நிரப்புக் கோணங்களின் முக்கோணவியல் விகிதங்கள்

செங்கோண முக்கோணத்தில் θ என்பது ஒரு குறுங்கோணம் எனில், நிரப்புக் கோணங்களுக்கான முக்கோணவியல் விகிதங்களின் முற்றொருமைகளை நாம் பின்வருமாறு பெறுகிறோம்.

$\sin\theta = \cos(90^\circ - \theta)$ $\quad$ $\operatorname{cosec}\theta = \sec(90^\circ - \theta)$

$\cos\theta = \sin(90^\circ - \theta)$ $\quad$ $\sec\theta = \operatorname{cosec}(90^\circ - \theta)$

$\tan\theta = \cot(90^\circ - \theta)$ $\quad$ $\cot\theta = \tan(90^\circ - \theta)$

எடுத்துக்காட்டு 6.10

மதிப்புக் காண்க : $\dfrac{\cos 56^\circ}{\sin 34^\circ}$

தீர்வு கோணங்கள் 56° மற்றும் 34° ஆகியவை ஒன்றுக்கொன்று நிரப்புக்கோணங்கள். ஆகவே, நிரப்புக் கோணங்களின் முக்கோணவியல் விகிதங்களைப் பயன்படுத்த, $\cos 56^\circ = \cos(90^\circ - 34^\circ) = \sin 34^\circ$. ஆகவே, $\dfrac{\cos 56^\circ}{\sin 34^\circ} = \dfrac{\sin 34^\circ}{\sin 34^\circ} = 1$

எடுத்துக்காட்டு 6.11

மதிப்புக் காண்க : $\dfrac{\tan 25^\circ}{\cot 65^\circ}$

தீர்வு $\tan 25^\circ = \tan(90^\circ - 65^\circ) = \cot 65^\circ$ என எழுதலாம். ஆகவே,

$$\frac{\tan 25^\circ}{\cot 65^\circ} = \frac{\cot 65^\circ}{\cot 65^\circ} = 1$$

எடுத்துக்காட்டு 6.12

மதிப்புக் காண்க : $\dfrac{\cos 65^\circ \sin 18^\circ \cos 58^\circ}{\cos 72^\circ \sin 25^\circ \sin 32^\circ}$

தீர்வு நிரப்புக் கோணங்களின் முக்கோணவியல் விகிதங்களைப் பயன்படுத்த, நாம் பெறுவது

$$\cos 65^\circ = \cos(90^\circ - 25^\circ) = \sin 25^\circ,$$
$$\sin 18^\circ = \sin(90^\circ - 72^\circ) = \cos 72^\circ$$
$$\cos 58^\circ = \cos(90^\circ - 32^\circ) = \sin 32^\circ.$$
$$\therefore \frac{\cos 65^\circ \sin 18^\circ \cos 58^\circ}{\cos 72^\circ \sin^\circ 25^\circ \sin 32^\circ} = \frac{\sin 25^\circ \cos 72^\circ \sin 32^\circ}{\cos 72^\circ \sin 25^\circ \sin 32^\circ} = 1$$

எடுத்துக்காட்டு 6.13

$\tan 35^\circ \tan 60^\circ \tan 55^\circ \tan 30^\circ = 1$ என நிறுவுக.

தீர்வு $\tan 35^\circ = \tan(90^\circ - 55^\circ) = \cot 55^\circ$,

$\tan 60^\circ = \tan(90^\circ - 30^\circ) = \cot 30^\circ$ என எழுதலாம்.

$$\therefore \tan 35^\circ \tan 60^\circ \tan 55^\circ \tan 30^\circ = \cot 55^\circ \cot 30^\circ \tan 55^\circ \tan 30^\circ$$
$$= \frac{1}{\tan 55^\circ} \times \frac{1}{\tan 30^\circ} \times \tan 55^\circ \times \tan 30^\circ = 1$$

எடுத்துக்காட்டு 6.14

$\operatorname{cosec} A = \sec 25^\circ$ எனில், A-ஐக் காண்க.

தீர்வு $\operatorname{cosec} A = \sec(90^\circ - A)$ என நமக்கு தெரியும். எனவே,

$$\sec(90^\circ - A) = \sec 25^\circ \implies 90^\circ - A = 25^\circ$$

$$\therefore\ A = 90^\circ - 25^\circ = 65^\circ$$

குறிப்பு

எடுத்துக்காட்டு 6.14-ன் தீர்வில், A-ன் மதிப்பைப் பெற இருபுறமும் sec-ஆல் வகுக்ககூடாது. மாறாக குறுங்கோணங்களின் முக்கோணவியல் விகிதங்களின் ஒருமைப் பண்பின் அடிப்படையில் A-ன் மதிப்பைக் கணக்கிடவேண்டும். அதாவது, α மற்றும் β ஆகியவை குறுங்கோணங்கள் எனில்,

$$\sin\alpha = \sin\beta \implies \alpha = \beta$$

$$\cos\alpha = \cos\beta \implies \alpha = \beta, \cdots$$

எடுத்துக்காட்டு 6.15

$\sin A = \cos 33^\circ$ எனில், A-ஐக் காண்க.

தீர்வு $\sin A = \cos(90^\circ - A)$ என நமக்குத் தெரியும். எனவே,

$$\cos(90^\circ - A) = \cos 33^\circ \implies 90^\circ - A = 33^\circ$$

$$\therefore\ A = 90^\circ - 33^\circ = 57^\circ$$

பயிற்சி 6.2

1. மதிப்புக் காண்க.

(i) $\dfrac{\sin 36^\circ}{\cos 54^\circ}$ (ii) $\dfrac{\operatorname{cosec} 10^\circ}{\sec 80^\circ}$ (iii) $\sin\theta\sec(90^\circ - \theta)$

(iv) $\dfrac{\sec 20^\circ}{\operatorname{cosec} 70^\circ}$ (v) $\dfrac{\sin 17^\circ}{\cos 73^\circ}$ (vi) $\dfrac{\tan 46^\circ}{\cot 44^\circ}$.

2. சுருக்குக.

(i) $\cos 38^\circ\cos 52^\circ - \sin 38^\circ\sin 52^\circ$ (ii) $\dfrac{\cos 80^\circ}{\sin 10^\circ} + \cos 59^\circ\operatorname{cosec} 31^\circ$

(iii) $\dfrac{\sin 36^\circ}{\cos 54^\circ} - \dfrac{\tan 54^\circ}{\cot 36^\circ}$ (iv) $3\dfrac{\tan 67^\circ}{\cot 23^\circ} + \dfrac{1}{2}\dfrac{\sin 42^\circ}{\cos 48^\circ} + \dfrac{5}{2}\dfrac{\operatorname{cosec} 61^\circ}{\sec 29^\circ}$

(v) $\dfrac{\cos 37^\circ}{\sin 53^\circ}\times\dfrac{\sin 18^\circ}{\cos 72^\circ}$ (vi) $2\dfrac{\sec(90^\circ - \theta)}{\operatorname{cosec}\theta} + 7\dfrac{\cos(90^\circ - \theta)}{\sin\theta}$

(vii) $\dfrac{\sec(90^\circ - \theta)}{\sin(90^\circ - \theta)}\times\dfrac{\cos\theta}{\tan(90^\circ - \theta)} - \sec\theta$ (viii) $\dfrac{\sin 35^\circ}{\cos 55^\circ} + \dfrac{\cos 55^\circ}{\sin 35^\circ} - 2\cos^2 60^\circ$

(ix) $\cot 12^\circ\cot 38^\circ\cot 52^\circ\cot 60^\circ\cot 78^\circ$.

3. பின்வருவனவற்றில் A-ன் மதிப்பைக் காண்க.

(i) $\sin A = \cos 30^\circ$ (ii) $\tan 49^\circ = \cot A$ (iii) $\tan A \tan 35^\circ = 1$

(iv) $\sec 35^\circ = \operatorname{cosec} A$ (v) $\operatorname{cosec} A \cos 43^\circ = 1$ (vi) $\sin 20^\circ \tan A \sec 70^\circ = \sqrt{3}$.

4. பின்வருவனவற்றை நிறுவுக.

(i) $\cos 48^\circ - \sin 42^\circ = 0$ (ii) $\cos 20^\circ \cos 70^\circ - \sin 70^\circ \sin 20^\circ = 0$

(iii) $\sin(90^\circ - \theta)\tan\theta = \sin\theta$ (iv) $\dfrac{\cos(90^\circ - \theta)\tan(90^\circ - \theta)}{\cos\theta} = 1$.

6.5 முக்கோணவியல் அட்டவணையைப் பயன்படுத்தும் முறை

நாம் இதுவரை 0°, 30°, 45°, 60° மற்றும் 90° ஆகியவற்றின் முக்கோணவியல் விகிதங்களைக் கணக்கீடு செய்தோம். செங்கோண முக்கோணத்தின் தீர்வைக் காண இவை அல்லாத மாறுபட்ட மற்ற குறுங்கோணங்களின் முக்கோணவியல் விகிதங்களும் நமக்குத் தேவைப்படுகிறது. அனைத்து குறுங்கோணங்களின் sine, cosine மற்றும் tangent–ன் தோராய மதிப்புகள் இப்புத்தகத்தின் பின்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

பாகையின் பின்னங்களை, ஒரு பாகை என்பதை 60 நிமிடங்களாகவும், ஒரு நிமிடம் என்பதை 60 வினாடிகளாகவும் பிரித்து எழுதுகிறோம். ஒரு நிமிடம் என்பது $1'$ எனவும் ஒரு வினாடி என்பது $1''$ எனவும் குறிக்கப்படுகிறது. ஆகவே,

$$1^\circ = 60' \text{ மற்றும் } 1' = 60''.$$

sine, cosine மற்றும் tangent-ன் 0° முதல் 90° வரையிலான அனைத்து கோணங்களின் மதிப்புகளும் $6'$ இடைவெளி அளவில் நான்கு தசம இடத் திருத்தமாக அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், முக்கோணவியல் அட்டவணை மூன்று பகுதிகளை உடையது.

(i) அட்டவணையில் இடது கோடியில் உள்ள நிரலில் பாகை 0° முதல் 90° வரை குறிப்பிடப்பட்டுள்ளது.

(ii) அட்டவணையில் அடுத்துள்ள பத்து நிரல்கள் முறையே $0'$, $6'$, $12'$, $18'$, $24'$, $30'$, $36'$, $42'$, $48'$ மற்றும் $54'$ என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

(iii) பொதுவித்தியாசம் *(Mean Difference)* என்ற தலைப்பின் கீழ் ஐந்து நிரல்கள் உள்ளன. அந்த ஐந்து நிரல்களுக்கு $1'$, $2'$, $3'$, $4'$ மற்றும் $5'$ என தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது.

கோணங்கள் sine, cosine மற்றும் tangent-ன் மதிப்புகள் (ii)ல் குறிப்பிட்டுள்ளவாறு $6'$-ன் மடங்குகளில் பத்து நிரல்களாக கொடுக்கப்பட்டுள்ளது. மற்ற நிமிடங்களில் கொடுக்கப்பட்ட கோணங்களின் மதிப்புகளைக் காண பொதுவித்தியாச அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள மதிப்புகளைக் கொண்டு சரிசெய்து கொள்ளவேண்டும்.

sine மற்றும் tangent அட்டணையில் மதிப்பைக் காணும்போது பொதுவித்தியாசத்தைக் கூட்ட வேண்டும், அதே சமயம் cosine அட்டணையில் பொதுவித்தியாசத்தைக் கழிக்க வேண்டும்.

எடுத்துக்காட்டு 6.16

$\sin 46^\circ 51'$**-ன் மதிப்பைக் காண்க.**

தீர்வு *sine* அட்டவணையிலிருந்து தேவையான பகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

	0′	6′	12′	18′	24′	30′	36′	42′	48′	54′	Mean Diff.				
	0.0°	0.1°	0.2°	0.3°	0.4°	0.5°	0.6°	0.7°	0.8°	0.9°	1	2	3	4	5
46°									0.7290				6		

$46^\circ 51' = 46^\circ 48' + 3'$ என எழுதுக. அட்டவணையிலிருந்து நாம் பெறுவது,

$$\sin 46^\circ 48' = 0.7290$$

$3'$-ன் பொது வித்தியாசம் $= 0.0006$

$\therefore \sin 46^\circ 51' = 0.7290 + 0.0006 = 0.7296$

எடுத்துக்காட்டு 6.17

$\cos 37^\circ 16'$**-ன் மதிப்பைக் காண்க.**

தீர்வு

	0′	6′	12′	18′	24′	30′	36′	42′	48′	54′	Mean Diff.				
	0.0°	0.1°	0.2°	0.3°	0.4°	0.5°	0.6°	0.7°	0.8°	0.9°	1	2	3	4	5
37°			0.7965											7	

$37^\circ 16' = 37^\circ 12' + 4'$ என எழுதுக. அட்டவணையிலிருந்து,

$$\cos 37^\circ 12' = 0.7965$$

$4'$-ன் பொது வித்தியாசம் $= 0.0007$

θ-ன் மதிப்பு 0°லிருந்து 90°-க்கு அதிகரிக்கும்போது $\cos\theta$-ன் மதிப்பு 1லிருந்து 0-க்கு குறைவதால், பொது வித்தியாசத்தைக் கழிக்க வேண்டும்.

$\therefore \cos 37^\circ 16' = 0.7965 - 0.0007 = 0.7958$

எடுத்துக்காட்டு 6.18

$\tan 25^\circ 15'$**-ன் மதிப்பைக் காண்க.**

தீர்வு

	0′	6′	12′	18′	24′	30′	36′	42′	48′	54′	Mean Diff.				
	0.0°	0.1°	0.2°	0.3°	0.4°	0.5°	0.6°	0.7°	0.8°	0.9°	1	2	3	4	5
25°			0.4706										11		

$25^\circ 15' = 25^\circ 12' + 3'$ என எழுதுக. அட்டவணையிலிருந்து,

$$\tan 25^\circ 12' \quad = 0.4706$$

$3'$-ன் பொது வித்தியாசம் $= 0.0011$

$\therefore\ \tan 25^\circ 15' = 0.4706 + 0.011 = 0.4717$

எடுத்துக்காட்டு 6.19

$\sin\theta = 0.0958$ **எனில், கோணம்** θ**-வைக் காண்க.**

தீர்வு 0.0958 -க்கு எதிராக sine அட்டவணையிலிருந்து, நாம் காணும் மதிப்பு $\sin 5^\circ 30'$.

$\Longrightarrow \sin 5^\circ 30' = \ 0.0958$

$\therefore\ \theta = 5^\circ 30'$

எடுத்துக்காட்டு 6.20

$\sin\theta = 0.0987$ **எனில், கோணம்** θ**-வைக் காண்க.**

தீர்வு sine அட்டவணையிலிருந்து, $\sin\theta = 0.0993$-க்கு ஒத்த θ-ன் மதிப்பு $5^\circ 42'$ மற்றும் 0.0006 க்கு எதிரான மதிப்பு $2'$. ஆகவே,

$\sin\theta = 0.0987 \ = 0.0993 - 0.0006$

$= \sin 5^\circ 42' - \ (2'$ன் பொது வித்தியாசம்)

$\sin\theta = \sin 5^\circ 40'$

$\therefore\ \theta = 5^\circ 40'$

எடுத்துக்காட்டு 6.21

$\tan\theta = 0.4040$ **எனில், கோணம்** θ**-ன் மதிப்பைக் காண்க.**

தீர்வு 0.4040 க்கு எதிராக tangent அட்டவணையிலிருந்து, நாம் காணும் மதிப்பு $\tan 22^\circ 0'$.

$\Longrightarrow \tan 22^\circ = 0.4040$

$\therefore\ \theta = 22^\circ$

எடுத்துக்காட்டு 6.22

சுருக்குக. $\sin 30^\circ 30' + \cos 5^\circ 33'$

தீர்வு sine அட்டவணையிலிருந்து, $\sin 30^\circ 30' = 0.5075$. cosine அட்டவணையிலிருந்து, $\cos 5^\circ 30' = 0.9954$ மற்றும் பொது வித்தியாசம் $3' = 0.0001$. ஆகவே,

$$\cos 5^\circ 33' = 0.9954 - 0.0001 = 0.9953$$

$$\therefore\ \sin 30^\circ 30' + \cos 5^\circ 33' = 0.5075 + 0.9953 = 1.5028$$

எடுத்துக்காட்டு 6.23

சுருக்குக. $\cos 70^\circ 12' + \tan 48^\circ 54'$

தீர்வு cosine மற்றும் tangent அட்டவணையிலிருந்து, நாம் காண்பது

$\cos 70^\circ 12' = 0.3387$

$\tan 48^\circ 54' = 1.1463$

$\therefore \cos 70^\circ 12' + \tan 48^\circ 54' = 0.3387 + 1.1463$

$= 1.4850$

எடுத்துக்காட்டு 6.24

படம் 6.14-ல் கொடுக்கப்பட்டுள்ள செங்கோண முக்கோணத்தின் பரப்பளவைக் காண்க.



படம் 6.14

தீர்வு படம் 6.14-லிருந்து, $\sin\theta = \frac{AB}{AC} \Rightarrow \sin 10^\circ 14' = \frac{AB}{3}$

sine அட்டவணையிலிருந்து, $\sin 10^\circ 12' = 0.1771$ மற்றும் பொது வித்தியாசம் $2' = 0.0006$

$\therefore \sin 10^\circ 14' = 0.1777$

$0.1777 = \frac{AB}{3}$

$\therefore AB = 0.1777 \times 3 = 0.5331$

$\cos\theta = \frac{BC}{AC} \Longrightarrow \cos 10^\circ 14' = \frac{BC}{3}$

cosine அட்டவணையிலிருந்து, $\cos 10^\circ 12' = 0.9842$ மற்றும் பொது வித்தியாசம் $2' = 0.0001$

$\therefore \cos 10^\circ 14' = 0.9842 - 0.0001 = 0.9841$

$0.9841 = \frac{BC}{3}$

$\therefore BC = 0.9841 \times 3 = 2.9523$

செங்கோண முக்கோணத்தின் பரப்பளவு $= \frac{1}{2}bh = \frac{1}{2} \times 2.9523 \times 0.5331$

$= 0.786935565$

$\therefore$ செங்கோண முக்கோணத்தின் பரப்பளவு $= 0.7869$ ச.செ.மீ (தோராயமாக)

எடுத்துக்காட்டு 6.25

6 செ.மீ ஆரமுள்ள வட்டத்தின் மையத்தில் 165° கோணஅளவைத் தாங்கும் நாணின் நீளத்தைக் காண்க.

தீர்வு O-வை மையமாக உடைய 6 செ.மீ ஆரமுள்ள வட்டத்தின் மையத்தில் 165° கோண அளவைத் தாங்கும் நாண் AB என்க. $OC \perp AB$ ஐ வரைக, ஆகவே C என்பது AB-ன் மையப்புள்ளி. எனவே,

$$\angle AOC = \frac{165^\circ}{2} = 82^\circ 30'$$

செங்கோண முக்கோணம் ACO-வில்,

$$\sin 82^\circ 30' = \frac{AC}{OA} \Longrightarrow AC = \sin 82^\circ 30' \times OA$$

$$AC = 0.9914 \times 6 = 5.9484 \text{ செ.மீ}$$



படம் 6.15

$\therefore$ நாணின் நீளம் $AB = AC \times 2 = 5.9484 \times 2 = 11.8968$ செ.மீ

எடுத்துக்காட்டு 6.26

8 அலகு ஆரமுடைய வட்டத்தினுள் அமைந்த 9 பக்கங்களைக் கொண்ட ஒழுங்கு பலகோணத்தின் பக்கத்தின் நீளம் காண்க.

தீர்வு AB என்பது 8 அலகு ஆரமுடைய வட்டத்தினுள் அமைந்த 9 பக்கங்கள் கொண்ட ஒழுங்கு பலகோணத்தின் ஒரு பக்கம் என்க. O என்பது வட்டத்தின் மையம் எனில், $\angle AOB = \frac{360^\circ}{9} = 40^\circ$. $OC \perp AB$ ஐ வரைக. எனவே,

$$\angle AOC = \frac{40^\circ}{2} = 20^\circ$$

$$\sin 20^\circ = \frac{AC}{OA} = \frac{AC}{8}$$

$$\text{i.e., } 0.3420 = \frac{AC}{8}$$

$$AC = 0.3420 \times 8 = 2.736$$



படம் 6.16

$\therefore$ பக்கம் AB-ன் நீளம் $= 2 \times AC = 2 \times 2.736 = 5.472$ அலகுகள்

எடுத்துக்காட்டு 6.27

6 செ.மீ பக்க அளவு கொண்ட ஒழுங்கு அறுகோணத்தில் அமைந்துள்ள உள்வட்டத்தின் ஆரம் காண்க.

தீர்வு AB என்பது ஒழுங்கு அறுகோணத்தின் ஒரு பக்கம் மற்றும் O என்பது உள்வட்ட மையம் என்க. $OC \perp AB$ ஐ வரைக. r என்பது வட்டத்தின் ஆரம் எனில், $OC = r$. மேலும்,

$\angle AOB = \dfrac{360^\circ}{6} = 60^\circ$

$\therefore \angle AOC = \dfrac{60^\circ}{2} = 30^\circ$

$\tan 30^\circ = \dfrac{AC}{r}$

i.e., $\dfrac{1}{\sqrt{3}} = \dfrac{3}{r}$

$\therefore\ r = 3 \times 1.732 = 5.196$ செ.மீ



படம் 6.17

ஆகவே, உள்வட்டத்தின் ஆரம் = 5.196 செ.மீ

பயிற்சி 6.3

1. பின்வருவனவற்றின் மதிப்புகளைக் காண்க.

   (i) $\sin 26^\circ$ (ii) $\cos 72^\circ$ (iii) $\tan 35^\circ$ (iv) $\sin 75^\circ 15'$

   (v) $\sin 12^\circ 12'$ (vi) $\cos 12^\circ 35'$ (vii) $\cos 40^\circ 20'$ (viii) $\tan 10^\circ 26'$

   (ix) $\cot 20^\circ$ (x) $\cot 40^\circ 20'$

2. பின்வருவனவற்றில் θ-ன் மதிப்பைக் காண்க.

   (i) $\sin\theta = 0.7009$ (ii) $\cos\theta = 0.9664$ (iii) $\tan\theta = 0.3679$

   (iv) $\cot\theta = 0.2334$ (v) $\tan\theta = 63.6567$

3. முக்கோணவியல் அட்டவணையைப் பயன்படுத்தி சுருக்குக.

   (i) $\sin 30^\circ 30' + \cos 40^\circ 20'$ (ii) $\tan 45^\circ 27' + \sin 20^\circ$

   (iii) $\tan 63^\circ 12' - \cos 12^\circ 42'$ (iv) $\sin 50^\circ 26' + \cos 18^\circ + \tan 70^\circ 12'$

   (v) $\tan 72^\circ + \cot 30^\circ$

4. கர்ணம் 20 செ.மீ மற்றும் ஒரு குறுங்கோணம் 48° கொண்ட செங்கோண முக்கோணத்தின் பரப்பளவைக் காண்க.

5. கர்ணம் 8 செ.மீ மற்றும் ஒரு குறுங்கோணம் 57° கொண்ட செங்கோண முக்கோணத்தின் பரப்பளவைக் காண்க.

6. அடிப்பக்கம் 16 செ.மீ மற்றும் உச்சிக்கோணம் $60^\circ 40'$ கொண்ட இருசமபக்க முக்கோணத்தின் பரப்பளவைக் காண்க.

7. அடிப்பக்கம் 15 செ.மீ மற்றும் உச்சிக்கோணம் 80° கொண்ட இருசமபக்க முக்கோணத்தின் பரப்பளவைக் காண்க.

8. ஒரு ஏணி 30° கோண அளவில் சுவற்றில் சாய்த்து வைக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்பக்கம் சுவற்றிலிருந்து 12 மீ தொலைவில் உள்ளது எனில், ஏணியின் நீளம் காண்க.

9. 4 மீ நீளமுள்ள ஏணி சுவற்றின் அடிபாகத்திலிருந்து 2 மீ தொலைவில் சாய்த்து வைக்கப்பட்டுள்ளது எனில், ஏணி சுவருடன் ஏற்படுத்தும் கோணத்தைக் காண்க.

10. 5 செ.மீ ஆரமுள்ள வட்டத்தின் மையத்தில் 108° கோணஅளவைத் தாங்கும் நாணின் நீளத்தைக் காண்க.

11. 6 செ.மீ ஆரமுடைய வட்டத்தினுள் அமைந்த 12 பக்கங்களைக் கொண்ட ஒழுங்கு அறுகோணத்தின் பக்கத்தின் நீளம் காண்க.

12. 24 செ.மீ பக்க அளவு கொண்ட ஒழுங்கு அறுகோணத்தில் அமைந்துள்ள உள்வட்டத்தின் ஆரம் காண்க.

நினைவில் கொள்க

- **பிதாகரஸ் தேற்றம்:**

  ஒரு செங்கோண முக்கோணத்தில் கர்ணத்தின் மீது வரையப்படும் சதுரத்தின் பரப்பளவானது, மற்ற இரண்டு பக்கங்களின் மீது வரையப்படும் சதுரங்களின் பரப்பளவுகளின் கூடுதலுக்கு சமம்.

- **முக்கோணவியல் விகிதங்கள்:**

  செங்கோண முக்கோணத்தில் θ ஒரு குறுங்கோணம் என்க. θ-வைப் பொறுத்து ஆறு முக்கோணவியல் விகிதங்கள் பின்வருமாறு

  $$\sin\theta = \frac{\text{எதிர்ப்பக்கம்}}{\text{கர்ணம்}} \qquad \operatorname{cosec}\theta = \frac{\text{கர்ணம்}}{\text{எதிர்ப்பக்கம்}}$$

  $$\cos\theta = \frac{\text{அடுத்துள்ள பக்கம்}}{\text{கர்ணம்}} \qquad \sec\theta = \frac{\text{கர்ணம்}}{\text{அடுத்துள்ள பக்கம்}}$$

  $$\tan\theta = \frac{\text{எதிர்ப்பக்கம்}}{\text{அடுத்துள்ள பக்கம்}} \qquad \cot\theta = \frac{\text{அடுத்துள்ள பக்கம்}}{\text{எதிர்ப்பக்கம்}}$$

- **முக்கோணவியல் விகிதங்களின் தலைகீழ் தொடர்புகள்:**

  $$\sin\theta = \frac{1}{\operatorname{cosec}\theta} \qquad \cos\theta = \frac{1}{\sec\theta} \qquad \tan\theta = \frac{1}{\cot\theta}$$

  $$\operatorname{cosec}\theta = \frac{1}{\sin\theta} \qquad \sec\theta = \frac{1}{\cos\theta} \qquad \cot\theta = \frac{1}{\tan\theta}$$

- **நிரப்பு கோணங்களின் முக்கோணவியல் விகிதங்கள்:**

  செங்கோண முக்கோணத்தில் θ என்பது ஒரு குறுங்கோணம் எனில், நிரப்பு கோணங்களின் முக்கோணவியல் விகிதங்களிலிருந்து நாம் பின்வரும் முற்றொருமைகளைப் பெறுகிறோம்.

  $$\sin\theta = \cos(90^\circ - \theta) \qquad \operatorname{cosec}\theta = \sec(90^\circ - \theta)$$

  $$\cos\theta = \sin(90^\circ - \theta) \qquad \sec\theta = \operatorname{cosec}(90^\circ - \theta)$$

  $$\tan\theta = \cot(90^\circ - \theta) \qquad \cot\theta = \tan(90^\circ - \theta)$$

7 வடிவியல்

Truth can never be told so as to be understood,
and not to be believed
- WILLIAM BLAKE

முதன்மைக் குறிக்கோள்கள்

- வடிவியலின் அடிப்படைக் கருத்துகளை நினைவு கூர்தல்.
- இணைகரத்தின் மீதான தேற்றங்களை புரிந்து கொள்ளுதல்.
- வட்டத்தின் மீதான தேற்றங்களை புரிந்து கொள்ளுதல்

7.1 அறிமுகம்

Geometry என்ற பெயர் இரண்டு கிரேக்க வார்த்தைகளில் "புவியை அளவிடல்" என்ற பொருளிலிருந்து பெறப்பட்டது. காலப்போக்கில் வடிவியல் மிக அழகாக அமைக்கப்பட்ட தருக்க முறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட கணித அறிவாகும். இது புள்ளிகள், கோடுகள், தளங்கள், உருவங்களுக்கு இடையேயுள்ள பண்புகள் மற்றும் தொடர்புகளை உள்ளடக்கியது. சுமார் கி.மு. 3000 ஆண்டின் போது முற்கால எகிப்து மற்றும் சிந்து சமவெளியில் வடிவியல் பற்றிய பதிவுகள் காணப்பட்டன. வரையறுக்கப்படாத வார்த்தைகள், வரையறைகள் மற்றும் ஊகங்கள் ஆகியவற்றால் வடிவியல் தொடங்குகிறது. இவை தேற்றங்களுக்கும் வரைபடங்களுக்கும் கொண்டுச் செல்கின்றன. இது நுட்பமான பாடம் ஆனால், மனக்கண்ணால் எளிதாக ஊகிக்கலாம். மேலும் உறுதியான நடைமுறைப் பயன்பாடுகளைக் கொண்டது. வடிவியல் நிலங்களை அளவெடுப்பதில் முக்கிய பங்காற்றினாலும், எடுத்துக்காட்டாக, தற்போது கட்டுமானத்தில் உறுதிபாடுடைய பாலங்கள், விண்வெளி ஆய்வுக்கூடங்கள் மற்றும் மிகப்பெரிய விளையாட்டு மற்றும் பொழுது போக்கு அரங்குகள் அமைக்க இவ்வறிவானது பயன்படுத்தப்படுகிறது. யூக்ளிட்டின் முதல்புத்தகமான *Elements*-இல் குறிப்பிடப்பட்டவைகளின் மேற்கூறிய கட்டுமானப் பணிகளின் வடிவியல் தேற்றம் தெளிவாக எழுதப்பட்டுள்ளது.



தேலீஸ்
(640 - 546 BC)

Thales (pronounced THAY-lees)
கிரேக்க நகரமான மிலேட்டசில் தேலீஸ் பிறந்தார். வடிவியலில் கருத்தியல் மற்றும் வரைதல் புரிதலுக்காக நன்கு அறியப்பட்டவர். ஒரு வட்டத்தின் விட்டத்தை முக்கோணத்தின் நீண்ட பக்கமாகக் கொண்டு அதற்குள் ஒரு முக்கோணத்தை வரைந்தால் நீண்ட பக்கத்திற்கு எதிரேயுள்ள கோணம் எப்போதுமே செங்கோணமாகும் என்ற தேற்றத்தை நிறுவினார். பிரமிடுகளின் உயரம் மற்றும் கடற்கரைக்கும் கப்பலுக்கும் இடையேயுள்ள தூரம் ஆகியகணக்குகளுக்கு வடிவியல் முறையில் தீர்வு கண்டறிந்தார். வடிவியலில் உய்த்தறி காரணத்தைப் பயன்படுத்தி தேலீஸ் தேற்றத்திற்கு நான்கு துணைத் தேற்றங்களை முதன்முதலில் பயன்படுத்தினார். இதற்காக முதன் முறையாக உண்மையான கணித அறிஞர் என்றும் கணித கண்டுபிடிப்புகளைக் கண்டறிந்த முதல் மனிதர் என இவர்பாராட்டப்பட்டார். கிரேக்க நாட்டின் ஏழு அறிவு ஜீவிகளில் அல்லது ஏழு துறவிகளில் ஒருவராக விளங்கினார். மேற்கத்திய பண்பாட்டின் முதல் தத்துவ மேதையாக மற்றவர்களால் அவர் மதிக்கப்பட்டார்.

7.2 வடிவியல் அடிப்படைக் கருத்துகள்

நாம் முந்தைய வகுப்புகளில் படித்த சில முக்கியமான வடிவியலின் அடிப்படைக் கருத்துகளை இப்பகுதியில் நினைவு கூர்வோம்.

கருத்து	படம்	விளக்கம்
இணை கோடுகள்		ஒன்றையொன்று வெட்டிக் கொள்ளாமல் ஒரே தளத்தில் செல்லும் கோடுகளை இணைகோடுகள் என்கிறோம். இரு இணைகோடுகளுக்கு இடையே உள்ள தொலைவு எப்பொழுதும் சமமாக இருக்கும்.
வெட்டும் கோடுகள்		இரண்டு கோடுகளுக்கு ஒரேயொரு பொதுவான புள்ளி இருந்தால் அவை வெட்டும்கோடுகள் எனப்படும். பொதுப்புள்ளிக்கு வெட்டிக்கொள்ளும் (வெட்டுப்புள்ளி) புள்ளி என்று பெயர். அருகில் உள்ளபடத்தில் கோடுகள் *AB* மற்றும் *CD* ஆகியவை *O* என்ற புள்ளியில் வெட்டிக் கொள்கின்றன.
ஒருபுள்ளி வழிக்கோடுகள்		மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட கோடுகள் ஒருபுள்ளி வழிச் சென்றால் அவை ஒருபுள்ளி வழிக்கோடுகள் எனப்படும். அருகில் உள்ள படத்தில் கோடுகள் l_1, l_2, l_3 ஆகியவை *O* என்ற புள்ளியின் வழியே செல்கின்றன. எனவே, அவை ஒருபுள்ளி வழிக்கோடுகள் எனப்படும்.
ஒருகோடமைப் புள்ளிகள்		மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகள் ஒரே நேர்க்கோட்டில் அமைந்தால், அந்த புள்ளிகள் ஒருகோடமைப் புள்ளிகள் எனப்படும். அவ்வாறு இல்லையெனில், அவை ஒரு கோடமையாப்புள்ளிகள் எனப்படும்.

7.2.1 கோணங்களின் வகைகள்

கோணங்களை அவற்றின் கோண அளவுகளைப் பொறுத்து வகைப்படுத்தலாம்.

பெயர்	குறுங்கோணம் (Acute Angle)	செங்கோணம் (Right Angle)	விரிகோணம் (Obtuse Angle)	பின்வளை கோணம் (Reflex Angle)
வரைபடம்				
கோண அளவு	$\angle AOB < 90^\circ$	$\angle AOB = 90^\circ$	$90^\circ < \angle AOB < 180^\circ$	$180^\circ < \angle AOB < 360^\circ$

நிரப்புக் கோணங்கள் (*Complementary Angles*)

இரு கோண அளவுகளின் கூடுதல் 90° எனில், அக்கோணங்கள் ஒன்றுக்கொன்று நிரப்புக் கோணங்களாகும்.

எடுத்துக்காட்டாக, $\angle A = 52^\circ$ மற்றும் $\angle B = 38^\circ$ எனில், கோணம் $\angle A$ மற்றும் $\angle B$ ஆகியவை ஒன்றுக்கொன்று நிரப்புக் கோணங்களாகும்.

மிகைநிரப்புக் கோணங்கள் (*Supplementary Angles*)

இரு கோணங்களின் கூடுதல் 180° எனில், அக்கோணங்கள் ஒன்றுக்கொன்று மிகைநிரப்புக் கோணங்களாகும்.

எடுத்துக்காட்டாக, 112° மற்றும் 68° அளவு கொண்ட கோணங்கள் ஒன்றுக்கொன்று மிகைநிரப்புக் கோணங்களாகும்.

7.2.2 குறுக்குவெட்டி (*Transversal*)

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கோடுகளை ஒரு நேர்க்கோடானது வெவ்வேறு புள்ளிகளில் வெட்டினால் அதற்கு குறுக்குவெட்டி என்று பெயர்.

இரு இணை கோடுகளை ஒரு குறுக்குவெட்டி வெட்டுவதால் ஏற்படும் கோணங்கள்

பெயர்	கோணம்	வரைபடம்
குத்தெதிர் கோணங்கள் சமம்	$\angle 1 = \angle 3$, $\angle 2 = \angle 4$, $\angle 5 = \angle 7$, $\angle 6 = \angle 8$	
ஒத்த கோணங்கள் சமம்	$\angle 1 = \angle 5$, $\angle 2 = \angle 6$, $\angle 3 = \angle 7$, $\angle 4 = \angle 8$	
உள்ளெதிர் கோணங்கள் சமம்	$\angle 3 = \angle 5$, $\angle 4 = \angle 6$	
வெளி எதிர் கோணங்கள் சமம்	$\angle 1 = \angle 7$, $\angle 2 = \angle 8$	
உள் கோணங்கள் மிகை நிரப்புக் கோணங்கள்	$\angle 3 + \angle 6 = 180^\circ$; $\angle 4 + \angle 5 = 180^\circ$	

7.2.3 முக்கோணங்கள் (*Triangles*)



படம் 7.1

ஒரு முக்கோணத்தின் மூன்று கோணங்களின் கூடுதல் 180°.

$\angle A + \angle B + \angle C = 180^\circ$ (படம் 7.1.)

குறிப்புரை



படம் 7.2

(i) ஒரு முக்கோணத்தின் ஒரு பக்கம் நீட்டப்படுவதால் ஏற்படும் வெளிக்கோணம் அதன் உள்ளெதிர் கோணங்களின் கூடுதலுக்கு சமம். $\angle ACD = \angle BAC + \angle ABC$

(ii) ஒரு முக்கோணத்தின் வெளிக்கோணமானது உள்ளெதிர் கோணங்களை விட அதிகமாக இருக்கும்.

(iii) எந்தவொரு முக்கோணத்திலும் பெரிய பக்கத்திற்கு எதிரே உள்ள கோணம் பெரியதாக இருக்கும்.

சர்வசம முக்கோணங்கள் (*Congruent Triangles*)

ஒரு முக்கோணத்தின் அனைத்து பக்கங்களும், கோணங்களும் மற்றொரு முக்கோணத்தின் ஒத்த பக்கங்களுக்கும், ஒத்த கோணங்களுக்கும் சமமானால் அம்முக்கோணங்கள் சர்வசம முக்கோணங்கள் எனப்படும்.

சர்வசமம் என்பதற்கு நாம் '≡' குறியீட்டைப் பயன்படுத்துகிறோம்.

	விளக்கம்	படம்
ப–ப–ப SSS	ஒரு முக்கோணத்தின் மூன்று பக்கங்கள் மற்றொரு முக்கோணத்தின் மூன்று பக்கங்களுக்கு சமமெனில், அவ்விரு முக்கோணங்களும் சர்வசமமாகும்.	 $\Delta ABC \equiv \Delta PQR$
ப–கோ–ப SAS	ஒரு முக்கோணத்தின் இரு பக்கங்களும் அவை உள்ளடக்கிய கோணமும் மற்றொரு முக்கோணத்தின் இரு பக்கங்களுக்கும் அவை உள்ளடக்கிய கோணத்திற்கும் சமமெனில், அவ்விரு முக்கோணங்களும் சர்வசமமாகும்.	 $\Delta ABC \equiv \Delta PQR$
கோ–ப–கோ ASA	ஒரு முக்கோணத்தின் இரு கோணங்களும் அவற்றால் இணைந்த பக்கமும் மற்றொரு முக்கோணத்தின் இரு கோணங்களுக்கும் அவற்றால் இணைந்த பக்கத்திற்கும் சமமானால், அவ்விரு முக்கோணங்களும் சர்வசமமாகும்.	 $\Delta ABC \equiv \Delta PQR$
கோ–கோ–ப AAS	ஒரு முக்கோணத்தின் இரு கோணங்களும் அதன் ஏதாவது ஒரு பக்கமும் மற்றொரு முக்கோணத்தின் இரு கோணங்களுக்கும் ஒத்த பக்கத்திற்கும் சமமெனில், அவ்விரு முக்கோணங்களும் சர்வசமமாகும்.	 $\Delta ABC \equiv \Delta PQR$
செ–க–ப RHS	ஒரு செங்கோண முக்கோணத்தின் கர்ணம், ஏதேனும் ஒரு பக்கம், மற்றொரு செங்கோண முக்கோணத்தின் கர்ணம், ஒரு பக்கம் ஆகியவற்றிற்கு முறையே சமமாக இருப்பின், அவ்விரு முக்கோணங்களும் சர்வசமமாகும்.	 $\Delta ABC \equiv \Delta PQR$

பயிற்சி 7.1

1. பின்வரும் கோணங்களின் நிரப்புக் கோணங்களைக் காண்க.

   (i) 63° (ii) 24° (iii) 48° (iv) 35° (v) 20°

2. பின்வரும் கோணங்களின் மிகைநிரப்புக் கோணங்களைக் காண்க.

   (i) 58° (ii) 148° (iii) 120° (iv) 40° (v) 100°

3. பின்வரும் படங்களில் x-ன் மதிப்பைக் காண்க.

   (i)



   (ii)



4. பின்வரும் கோண அளவுகளைக் காண்க.

   i) ஒரு கோணம் அதன் நிரப்புக் கோணத்தைப் போல இரு மடங்கு.

   ii) ஒரு கோணம் அதன் மிகை நிரப்புக் கோணத்தைப் போல நான்கு மடங்கு.

   iii) ஒரு கோணத்தின் மிகைநிரப்பானது அதன் நிரப்புக் கோணத்தைப் போல நான்கு மடங்கு.

   iv) ஒரு கோணத்தின் நிரப்பானது அதன் மிகைநிரப்புக் கோணத்தில் ஆறில் ஒரு பங்கு.

   v) மிகை நிரப்புக் கோணங்கள் 4:5 என்ற விகிதத்தில் உள்ளன.

   vi) நிரப்புக் கோணங்கள் 3:2 என்ற விகிதத்தில் உள்ளன.

5. பின்வரும் படங்களில் x, y-ன் மதிப்பைக் காண்க.

   (i)



   (ii)



   (iii)



6. $l_1 \parallel l_2$ மற்றும் m_1 ஒரு குறுக்குவெட்டி என்க. $\angle F = 65^\circ$ எனில், மற்ற கோணஅளவுகளைக் காண்க.



7. $l_1 \parallel l_2$ எனில் x-ன் மதிப்பைக் காண்க.

   (i)



   (ii)



8. ஒரு முக்கோணத்தின் கோணங்கள் 1:2:3 என்ற விகிதத்தில் இருப்பின், அவற்றின் கோண அளவுகளைக் காண்க.

9. $\triangle ABC$-ல் $\angle A + \angle B = 70^\circ$ மற்றும் $\angle B + \angle C = 135^\circ$ எனில், அதன் கோண அளவுகளைக் காண்க.

10. கொடுக்கப்பட்டுள்ள படம் $\triangle ABC$-ல் பக்கம் BC ஆனது D வரை நீட்டப்பட்டுள்ளது எனில், $\angle A$ மற்றும் $\angle C$ யைக் காண்க.



7.3 நாற்கரம் (*Quadrilateral*)

நான்கு பக்கங்கள் மற்றும் நான்கு முனைகளால் அடைபடும் உருவம் நாற்கரம் ஆகும். நாற்கரத்தின் நான்கு கோணங்களின் கூடுதல் 360° ஆகும்.



7.3.1 இணைகரம், சாய்சதுரம் மற்றும் சரிவகத்தின் பண்புகள்

இணைகரம்	பக்கம்	எதிர்ப்பக்கங்கள் இணை மற்றும் சமம்
	கோணம்	எதிர்க் கோணங்கள் சமம் மற்றும் அடுத்துள்ள கோணங்கள் மிகைநிரப்பு
	மூலைவிட்டம்	மூலைவிட்டங்கள் ஒன்றையொன்று இருசமக் கூறிடும்
சாய்சதுரம்	பக்கம்	அனைத்து பக்கங்களும் சமம் மற்றும் எதிர்ப்பக்கங்கள் இணை
	கோணம்	எதிர் கோணங்கள் சமம், மற்றும் அடுத்துள்ள கோணங்கள் மிகைநிரப்பு.
	மூலைவிட்டம்	மூலைவிட்டங்கள் ஒன்றுக்கொன்று மையக்குத்துக்கோடு.
சரிவகம்	பக்கம்	ஒரு சோடி எதிர்ப்பக்கங்கள் இணை
	கோணம்	இணையில்லா பக்கங்களின் முனைகளில் உள்ள கோணங்கள் மிகைநிரப்பு
	மூலைவிட்டம்	மூலைவிட்டங்கள் சமமாக இருக்கவேண்டிய அவசியமில்லை
இருசமபக்க சரிவகம்	பக்கம்	ஒரு சோடி எதிர்ப்பக்கங்கள் இணை, இணையில்லா பக்கங்களின் அளவுகள் சமம்
	கோணம்	இணைப் பக்கங்களின் முனைகளில் உள்ள கோணங்கள் சமம்
	மூலைவிட்டம்	மூலைவிட்டங்கள் சமம்

குறிப்பு

(i) செவ்வகம் என்பது சம கோண அளவுள்ள இணைகரம் ஆகும்.

(ii) சாய்சதுரம் என்பது சமபக்க இணைகரம் ஆகும்.

(iii) சதுரம் என்பது சமபக்க அளவுள்ள, சம கோண அளவுள்ள இணைகரம் ஆகும்.

(iv) சதுரம் என்பது ஒரு செவ்வகம், சாய்சதுரம் மற்றும் இணைகரம் ஆகும்.

7.4 இணைகரம் (*Parallelogram*)

எதிர்ப்பக்கங்கள் இணையாக உள்ள நாற்கரம் இணைகரம் ஆகும்.

7.4.1 இணைகரத்தின் பண்புகள்

பண்பு 1 : ஒரு இணைகரத்தின் எதிர்ப் பக்கங்கள் சமம்.

தரவு : $ABCD$ என்பது ஒரு இணைகரம். எனவே, $AB \parallel DC$ மற்றும் $AD \parallel BC$

நிரூபிக்க : $AB = CD$ மற்றும் $AD = BC$

அமைப்பு : BD ஐ இணைக்க



படம் 7.3

நிரூபணம் :

ΔABD மற்றும் ΔBCD ஆகியவற்றில்.

(i) $\angle ABD = \angle BDC$ ($AB \parallel DC$ மற்றும் BD ஒரு குறுக்கு வெட்டி. எனவே, ஒன்றுவிட்ட உட்கோணங்கள் சமம்.)

(ii) $\angle BDA = \angle DBC$ ($AD \parallel BC$ மற்றும் BD ஒரு குறுக்கு வெட்டி. எனவே, ஒன்றுவிட்ட உட்கோணங்கள் சமம்.)

(iii) BD பொதுப் பக்கம்

$\therefore \Delta ABD \equiv \Delta BCD$ (கோ-ப-கோ பண்பின் படி)

ஆகவே, $AB = DC$ மற்றும் $AD = BC$ (ஒத்த பக்கங்கள் சமம்)

பண்பு 1-ன் மறுதலை : ஒரு நாற்கரத்தின் எதிர்ப்பக்கங்கள் சமமெனில், அந்த நாற்கரம் ஓர் இணைகரமாகும்.

பண்பு 2 : ஒரு இணைகரத்தின் எதிர்க் கோணங்கள் சமம்.

தரவு : $ABCD$ என்பது ஒரு இணைகரம். அதில் $AB \parallel DC$, $AD \parallel BC$

நிரூபிக்க : $\angle ABC = \angle ADC$ மற்றும் $\angle DAB = \angle BCD$



படம் 7.4

அமைப்பு : BD ஐ இணைக்க

நிரூபணம் :

(i) $\angle ABD = \angle BDC$ ($AB \parallel DC$ மற்றும் BD ஒரு குறுக்கு வெட்டி எனவே, ஒன்றுவிட்ட உட்கோணங்கள் சமம்.)

(ii) $\angle DBC = \angle BDA$ ($AD \parallel BC$ மற்றும் BD ஒரு குறுக்கு வெட்டி. எனவே, ஒன்றுவிட்ட உட்கோணங்கள் சமம்.)

(iii) $\angle ABD + \angle DBC = \angle BDC + \angle BDA$

$\therefore \angle ABC = \angle ADC$

இதேபோன்று, $\angle BAD = \angle BCD$ ■

பண்பு 2-ன் மறுதலை: ஒரு நாற்கரத்தின் எதிர்க் கோணங்கள் சமமெனில், அந்த நாற்கரம் ஓர் இணைகரமாகும்.

பண்பு 3 : இணைகரத்தின் மூலைவிட்டங்கள் ஒன்றையொன்று இருசமக் கூறிடும்.

தரவு : $ABCD$ என்பது ஒரு இணைகரம். அதில் $AB \parallel DC$ மற்றும் $AD \parallel BC$

நிரூபிக்க : M என்பது மூலைவிட்டம் AC மற்றும் BD-ன் மையப்புள்ளி .



படம் 7.5

நிரூபணம் :

ΔAMB மற்றும் ΔCMD ஆகியவற்றுள்

(i) $AB = DC$ இணைகரத்தின் எதிர்ப்பக்கங்கள் சமம்.

(ii) $\angle MAB = \angle MCD$ ஒன்றுவிட்ட உட்கோணங்கள் ($\because AB \parallel DC$)

$\angle ABM = \angle CDM$ ஒன்றுவிட்ட உட்கோணங்கள் ($\because AB \parallel DC$)

(iii) $\Delta AMB \equiv \Delta CMD$ (கோ-ப-கோ பண்பின் படி)

$\therefore AM = CM$ மற்றும் $BM = DM$

i.e., M என்பது AC மற்றும் BD-ன் மையப்புள்ளி

$\therefore$ இணைகரத்தின் மூலைவிட்டங்கள் ஒன்றையொன்று இருசமக் கூறிடும் ■

பண்பு 3-ன் மறுதலை: ஒரு நாற்கரத்தின் மூலைவிட்டங்கள் ஒன்றையொன்று இருசமக்கூறிடும் எனில், அந்நாற்கரம் ஓர் இணைகரமாகும்.

குறிப்பு (i) இணைகரத்தின் மூலைவிட்டங்கள் அவ்விணைகரத்தை சம பரப்பளவு கொண்ட இரு முக்கோணங்களாகப் பிரிக்கும்.

(ii) இணைகரத்தின் மூலைவிட்டங்கள் ஒன்றுக்கொன்று செங்குத்து எனில், அது சாய்சதுரம் ஆகும்.

(iii) ஒரே அடியின் மீதும், இரு இணை கோடுகளுக்கிடையேயும் அமையும் இணைகரங்கள் சமபரப்புடையவை.

எடுத்துக்காட்டு 7.1

ஒரு நாற்கரத்தில் மூன்று கோணங்களின் அளவுகள் $100^\circ, 84^\circ$ மற்றும் 76° எனில், நான்காவது கோணத்தின் அளவைக் காண்க.

தீர்வு நான்காவது கோணத்தின் அளவு x° என்க.

நாற்கரத்தின் நான்கு கோணங்களின் கூடுதல் 360° ஆகும். எனவே,

$$\begin{aligned} 100^\circ+84^\circ+76^\circ+x^\circ &= 360^\circ \\ 260^\circ+x^\circ &= 360^\circ \\ \text{i.e.,} \quad x^\circ &= 100^\circ \end{aligned}$$

எனவே, நான்காவது கோணத்தின் அளவு 100° ஆகும்.

எடுத்துக்காட்டு 7.2

இணைகரம் $ABCD$-ல் $\angle A = 65^\circ$ எனில், $\angle B$, $\angle C$ மற்றும் $\angle D$ ஆகியவற்றைக் காண்க.

தீர்வு $ABCD$ ஒரு இணைகரம் மற்றும் $\angle A = 65^\circ$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது.

$AD \parallel BC$, AB ஐ குறுக்குவெட்டி என்க. எனவே,

$$\begin{aligned} \angle A+\angle B &= 180^\circ \\ 65^\circ+B &= 180^\circ \\ \angle B &= 180^\circ - 65^\circ \\ \angle B &= 115^\circ \end{aligned}$$



படம் 7.6

இணைகரத்தின் எதிர்க் கோணங்கள் சமம் என்பதால், நாம் பெறுவது

$$\angle C = \angle A = 65^\circ \text{ மற்றும் } \angle D = \angle B = 115^\circ$$

ஆகவே, $\angle B = 115^\circ$, $\angle C = 65^\circ$ மற்றும் $\angle D = 115^\circ$

எடுத்துக்காட்டு 7.3

$ABCD$ என்ற செவ்வகத்தின் மூலைவிட்டங்கள் AC மற்றும் BD, ஆகியவை O-வில் வெட்டிக்கொள்கின்றன. மேலும் $\angle OAB = 62^\circ$ எனில், $\angle OBC$ ஐக் காண்க.

தீர்வு செவ்வகத்தின் மூலைவிட்டங்கள் சமம் மற்றும் ஒன்றையொன்று இருசமக் கூறிடும்.
எனவே, $OA = OB$ மற்றும் $\angle OBA = \angle OAB = 62^\circ$

மேலும் செவ்வகத்தின் ஒவ்வொரு கோண அளவும் 90° என்பதிலிருந்து

$$\angle ABC = 90^\circ$$
$$\angle ABO + \angle OBC = 90^\circ$$
$$62^\circ + \angle OBC = 90^\circ$$
$$\angle OBC = 90^\circ - 62^\circ$$
$$= 28^\circ$$



படம் 7.7

எடுத்துக்காட்டு 7.4

$ABCD$ என்ற சாய்சதுரத்தில் $\angle A = 76^\circ$ எனில், $\angle CDB$ ஐக் காண்க.



படம் 7.8

தீர்வு $\angle A = \angle C = 76^\circ$ (சாய்சதுரத்தின் எதிர்க் கோணங்கள்)

$\angle CDB = x^\circ$ என்க.

$\triangle CDB$-ல், $CD = CB$

$\angle CDB = \angle CBD = x^\circ$

$\angle CDB + \angle CBD + \angle DCB = 180^\circ$ (முக்கோணத்தின் கோணங்கள்)

$$2x^\circ + 76^\circ = 180^\circ \implies 2x = 104^\circ$$
$$x^\circ = 52^\circ$$
$$\therefore \angle CDB = 52^\circ$$

பயிற்சி 7.2

1. $ABCD$ என்ற நாற்கரத்தில் $\angle A, \angle B, \angle C$ மற்றும் $\angle D$ ஆகியன 2:3:4:6 என்ற விகிதத்தில் இருந்தால், அவற்றின் அளவுகளைக் காண்க.
2. இணைகரம் $ABCD$-ல் $\angle A = 108^\circ$ எனில், $\angle B, \angle C$ மற்றும் $\angle D$ ஐக் கணக்கிடுக.
3. கொடுக்கப்பட்டுள்ள படத்தில் $ABCD$ ஒரு இணைகரம். அதில் $\angle BAO = 30^\circ$, $\angle DAO = 45^\circ$ மற்றும் $\angle COD = 105^\circ$ எனில், பின்வரும் கோணங்களைக் காண்க.

   (i) $\angle ABO$ (ii) $\angle ODC$ (iii) $\angle ACB$ (iv) $\angle CBD$



4. இணைகரத்தின் பெரிய கோண அளவானது சிறிய கோணத்தின் இருமடங்கில் 30° குறைவு எனில், அனைத்து கோண அளவுகளையும் காண்க.
5. இணைகரம் $ABCD$-ல் $AB = 9$ செ.மீ மற்றும் அதன் சுற்றளவு 30 செ.மீ எனில், இணைகரத்தின் பக்க அளவுகளைக் காண்க.
6. சாய்சதுரத்தின் மூலைவிட்டங்கள் 24 செ.மீ, 18 செ.மீ எனில், அதன் பக்க அளவுகளைக் காண்க.

7. பின்வரும் படங்களில் $ABCD$ என்பது ஒரு சாய்சதுரம். அதில் x மற்றும் y-ன் மதிப்பினைக் காண்க.



8. சாய்சதுரத்தின் பக்கஅளவு 10 செ.மீ மற்றும் ஒரு மூலைவிட்டத்தின் நீளம் 12 செ.மீ எனில், மற்றொரு மூலைவிட்டத்தின் நீளத்தைக் காண்க.

9. கொடுக்கப்பட்டுள்ள படத்தில் $ABCD$ ஓர் இணைகரம். அதில் $\angle A$ மற்றும் $\angle B$-ன் கோண இருசமவெட்டிகள் P என்ற புள்ளியில் சந்திக்கின்றன எனில், $\angle APB = 90^\circ$ என நிரூபி.



7.5 வட்டங்கள் (*Circles*)

நியமப்பாதை (*Locus*)

நியமப்பாதை என்பது சில வடிவியல் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நகரும் புள்ளியின் பாதையாகும்.

உதாரணமாக, இரண்டு புள்ளிகளிலிருந்து சம தூரத்தில் நகரும் புள்ளியின் நியமப்பாதை அப்புள்ளிகளை இணைக்கும் கோட்டுத்துண்டின் மையக்குத்துக் கோடாகும்.



படம் 7.9

வட்டங்கள் (*Circles*)

நிலையான ஒரு புள்ளியிலிருந்து சம தொலைவில் நகரும் புள்ளியின் நியமப்பாதை ஒரு வட்டமாகும்.

நிலையான புள்ளி அதன் மையம் எனவும் மாறாத இடைத்தூரம் ஆரம் எனவும் அழைக்கப்படும்.

வட்டத்தின் விளிம்பு அதன் சுற்றளவு எனப்படும்.



நாண் (*Chord*)

வட்டப்பரிதியின் மீதமைந்த இரு புள்ளிகளை இணைக்கும் கோட்டுத்துண்டு நாண் எனப்படும்.

விட்டம் (*Diameter*)

வட்டத்தின் மையத்தின் வழியாக செல்லும் நாண் விட்டம் எனப்படும்.

வட்டத்தின் மிகப்பெரிய நாண் விட்டம் ஆகும்.

வெட்டுக்கோடு (*Secant*)

ஒரு வட்டத்தை இரு வெவ்வேறு புள்ளிகளில் வெட்டிச்செல்லும் கோடு வட்டத்தின் வெட்டுக்கோடு எனப்படும்.

தொடுகோடு (*Tangent*)

வட்டத்தை ஒரேயொரு புள்ளியில் மட்டும் தொட்டுச்செல்லும் கோடு வட்டத்தின் தொடுகோடு எனப்படும்.

தொடுகோடானது வட்டத்தை தொடும் புள்ளி, தொடுபுள்ளி எனப்படும்.

வட்டவில் (*Arc of a circle*)



வட்டப்பரிதியின் ஒரு பகுதிக்கு வட்டவில் என்று பெயர்.

ஒரு வட்டப்பரிதியினை இரண்டு சமமற்ற பிரிவுகளாக பிரித்தால் சிறிய பிரிவு சிறிய வட்டவில் எனவும், பெரிய பிரிவு பெரிய வட்டவில் எனவும் அழைக்கப்படும்.

பொதுமைய வட்டங்கள் (*Concentric circles*)

ஒரே மையப்புள்ளியும் ஆனால் வெவ்வேறு ஆரங்களும் உடைய வட்டங்கள் பொதுமைய வட்டங்கள் எனப்படும்.

கொடுக்கப்பட்டுள்ள படத்தில் உள்ள இரண்டு வட்டங்கள் O-வை மையமாகவும் வெவ்வேறு ஆரங்கள் r மற்றும் R உடைய பொதுமைய வட்டங்கள் ஆகும்.



படம் 7.11

ஒருங்கிசைவு விற்கள் (*Congruent arcs*)

வட்டத்திலுள்ள இரண்டு விற்கள் $\overset{\frown}{AB}$ மற்றும் $\overset{\frown}{CD}$ ஆகியவை வட்ட மையத்தில் தாங்கும் கோண அளவுகள் சமமெனில், அவை ஒருங்கிசைவு விற்கள் ஆகும். இதை நாம்

$\overset{\frown}{AB} \equiv \overset{\frown}{CD}$ இவ்வாறு எழுதுவோம். ஆகவே,

$$\overset{\frown}{AB} \equiv \overset{\frown}{CD} \Longleftrightarrow m\overset{\frown}{AB} = m\overset{\frown}{CD} \Longleftrightarrow \angle AOB = \angle COD$$



படம் 7.12

7.5.1 வட்ட நாண்களின் பண்புகள்

பண்பு

சமநீளமுள்ள நாண்கள் வட்ட மையத்தில் சம கோணங்களைத் தாங்கும்.

அதாவது, படம் 7.13-ல் நாண் AB = நாண் $CD \Longrightarrow \angle AOB = \angle COD$

மறுதலை

நாண்களால் வட்ட மையத்தில் அடைபடும் கோணம் சமமெனில், நாண்களின் நீளங்கள் சமமாகும்.

அதாவது, $\angle AOB = \angle COD \Longrightarrow$ நாண் AB = நாண் CD



படம் 7.13

தேற்றம் 1

வட்ட மையத்திலிருந்து நாணிற்கு வரையப்படும் செங்குத்து நாணை இரு சமக் கூறிடும்.



படம் 7.14

தரவு : O வை மையமாக உடைய வட்டத்தில், விட்டத்தைத் தவிர ஏதேனும் ஒரு நாண் AB மற்றும் $OC \perp AB$

நிரூபிக்க : $AC = BC$

அமைப்பு : OA மற்றும் OB-ஐ இணைக்க

நிரூபணம் :

ΔOAC மற்றும் ΔOBC-ல்

(i) $OA = OB$ (வட்டத்தின் ஆரங்கள்.)

(ii) OC பொதுப்பக்கம்

(iii) $\angle OCA = \angle OCB$ (ஒவ்வொன்றும் 90°, $OC \perp AB$-லிருந்து.)

(iv) $\Delta OAC \equiv \Delta OBC$ (செ-க-ப சர்வசமத்தன்மை.)

$\therefore AC = BC$ ■

தேற்றம் 1-ன் மறுதலை : ஒரு வட்டத்தின் மையத்தையும், நாணின் மையப்புள்ளியையும் இணைக்கும் கோடு நாணிற்கு செங்குத்தாகும்.

தேற்றம் 2

ஒரு வட்டத்திலுள்ள சம நாண்கள் வட்ட மையத்திலிருந்து சமதூரத்தில் இருக்கும்.



படம் 7.15

தரவு : ஒரு வட்டத்தின் மையம் O, ஆரம் r மேலும் நாண் AB = நாண் CD.

நிரூபிக்க : $OL = OM$

அமைப்பு : $OL \perp AB$ மற்றும் $OM \perp CD$ ஐ வரைக. OA மற்றும் OC ஐ இணைக்க.

நிரூபணம் :

(i) $AL = \frac{1}{2}AB$ மற்றும் $CM = \frac{1}{2}CD$ (வட்ட மையத்திலிருந்து நாணிற்கு வரையப்படும் செங்குத்து நாணை இருசமக்கூறிடும்.)

$AB = CD \Longrightarrow \frac{1}{2}AB = \frac{1}{2}CD \Longrightarrow AL = CM$

(ii) $OA = OC$ (ஆரங்கள்)

(iii) $\angle OMC = \angle OLA$ (ஒவ்வொன்றும் 90°)

(iv) $\Delta OLA \equiv \Delta OMC$ (செ-க-ப சர்வசமத்தன்மை.)

$\therefore OL = OM$

ஆகவே, நாண் AB மற்றும் CD ஆகியவை O-விலிருந்து சம தொலைவில் உள்ளன. ■

தேற்றம் 2-ன் மறுதலை : ஒரு வட்டத்தில் வட்ட மையத்திலிருந்து சமதூரத்தில் அமையும் நாண்கள் சமநீளமுள்ளவை ஆகும்.

எடுத்துக்காட்டு 7.5

10 செ.மீ ஆரமுள்ள வட்டத்தில் 16 செ.மீ நீளமுடைய நாண் வட்ட மையத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது?

தீர்வு நாண் AB-ன் நீளம் 16 செ.மீ

நாண் AB-ன் மையப்புள்ளி C.

வட்டத்தின் ஆரம் OA-ன் நீளம் 10 செ.மீ



படம் 7.16

$AB = 16$ செ.மீ

$AC = \frac{1}{2} \times 16 = 8$ செ.மீ

$OA = 10$ செ.மீ

செங்கோண முக்கோணம் OAC-ல்,

$$OC^2 = OA^2 - AC^2$$

$$= 10^2 - 8^2 = 100 - 64 = 36 \text{ செ.மீ}$$

$\therefore OC = 6$ செ.மீ

ஆகவே, வட்டத்தின் மையத்திலிருந்து நாண் 6 செ.மீ தொலைவில் உள்ளது.

எடுத்துக்காட்டு 7.6

இரண்டு பொதுமைய வட்டங்களில் வெளிவட்டத்தில் வரையப்பட்ட நாண் AB யானது உள்வட்டத்தை C மற்றும் D-ல் வெட்டுகிறது எனில், $AC = BD$ என நிரூபி.

தீர்வு தரவு : வெளிவட்ட நாண் AB உள்வட்டத்தை C மற்றும் D-ல் வெட்டுகிறது.

நிரூபிக்க : $AC = BD$

அமைப்பு : $OM \perp AB$ வரைக

நிரூபணம் :



படம் 7.17

$OM \perp AB$ (அமைப்பின் படி)

இதிலிருந்து $OM \perp CD$ ($ACDB$ ஒரு நேர்கோடு)

வெளிவட்டத்தில்,

$AM = BM$ (1) ($\because$ நாண் AB-யை OM இருசமக் கூறிடும்)

உள்வட்டத்தில்,

$CM = DM$ (2) ($\because$ நாண் CD-யை OM இருசமக் கூறிடும்)

(1) மற்றும் (2)-லிருந்து, நாம் பெறுவது

$$AM - CM = BM - DM$$

$$AC = BD$$

7.5.2 வட்டத்தினுள் அமைந்த கோணங்கள்

தேற்றம் 3

ஒரு வட்டவில் மையத்தில் தாங்கும் கோணம் அந்த வில்லைத் தவிர்த்து வட்டத்தின் மீதிப்பரிதியில் ஏதேனும் ஒரு புள்ளியில் ஏற்படுத்தும் கோணத்தைப் போல் இரு மடங்காகும்.

தரவு : O-வை மையமாக உடைய வட்டத்தில் AXB என்பது ஒரு வில், $\widehat{AXB}$ என்ற வில் வட்ட மையத்தில் தாங்கும் கோணம் $\angle AOB$. $\angle ACB$ என்பது $\widehat{AXB}$ என்ற வில்லை தவிர்த்து வட்டப் பரிதியில் ஏதேனும் ஒரு புள்ளியில் ஏற்படுத்தும் கோணம்.

நிரூபிக்க : $\angle AOB = 2\angle ACB$

அமைப்பு : CO வை இணைத்து D வரை நீட்டிக்கவும்



படம் 7.18



படம் 7.19



படம் 7.20

நிரூபணம் :

(i)	$OA = OC$	(ஆரங்கள்)
(ii)	$\angle OCA = \angle OAC$	(சமபக்கத்திற்கு எதிரே உள்ள கோணங்கள் சமம்.)
(iii)	ΔAOC-ல்	
	$\angle AOD = \angle OCA + \angle OAC$	(முக்கோணத்தின் வெளிக்கோணம் உள்ளெதிர் கோணங்களின் கூடுதலுக்குச் சமம்.)
(iv)	$\angle AOD = \angle OCA + \angle OCA$	($\angle OAC = \angle OCA$ எனப் பிரதியிட)
(v)	$\angle AOD = 2\angle OCA$	(கூடுதல்)
(vi)	இதேபோன்று ΔBOC-ல்,	
	$\angle BOD = 2\angle OCB$	
(vii)	$\angle AOD + \angle BOD = 2\angle OCA + 2\angle OCB$	
	$= 2(\angle OCA + \angle OCB)$	
(viii)	$\angle AOB = 2\angle ACB$	($\because \angle AOD + \angle BOD = \angle AOB$, $\angle OCA + \angle OCB = \angle ACB$)

குறிப்பு
(i) அரைவட்டத்தில் அமையும் கோணம் செங்கோணமாகும்.
(ii) ஒரே வட்டத்துண்டில் அமையும் கோணங்கள் சமம்.

7.5.3 வட்ட நாற்கரம் *(Cyclic Quadrilateral)*

தேற்றம் 4

வட்ட நாற்கரத்தின் எதிர்க் கோணங்களின் கூடுதல் 180° ஆகும் (அல்லது) வட்ட நாற்கரத்தின் எதிர்க்கோணங்கள் மிகைநிரப்புக் கோணங்கள்.

தரவு : O-வை மையமாக உடைய வட்டத்தில் $ABCD$ ஒரு நாற்கரம்.

நிரூபிக்க : $\angle BAD + \angle BCD = 180^\circ$, $\angle ABC + \angle ADC = 180^\circ$



படம் 7.21

அமைப்பு : OB மற்றும் OD-யை இணைக்க.

நிரூபணம் :

(i) $\angle BAD = \frac{1}{2}\angle BOD$ (வட்ட மையத்தில் தாங்கும் கோணமானது அவ்வில்லை தவிர்த்து வட்டப்பரிதியில் ஏற்படுத்தும் கோணத்தை போல் இருமடங்கு.)

(ii) $\angle BCD = \frac{1}{2}$ (பின்வளை $\angle BOD$)

(iii) $\therefore \angle BAD + \angle BCD = \frac{1}{2}\angle BOD + \frac{1}{2}$ (பின்வளை $\angle BOD$) ((i) மற்றும் (ii)-ஐ கூட்ட)

i.e., $\angle BAD + \angle BCD = \frac{1}{2}(\angle BOD +$ (பின்வளை $\angle BOD$))

i.e., $\angle BAD + \angle BCD = \frac{1}{2}(360^\circ)$ (வட்ட மையத்தின் மொத்த கோணம் 360°)

i.e., $\angle BAD + \angle BCD = 180^\circ$

(iv) இதேபோன்று, $\angle ABC + \angle ADC = 180^\circ$ ■

தேற்றம் 4-ன் மறுதலை : நாற்கரத்தின் எதிர்க்கோணங்களின் கூடுதல் மிகைநிரப்புக் கோணங்கள் எனில், அந்த நாற்கரம் வட்ட நாற்கரம் ஆகும்.

தேற்றம் 5

வட்ட நாற்கரத்தின் ஒரு பக்கத்தை நீட்டிப்பதால் ஏற்படும் வெளிக்கோணம் உள்ளெதிர் கோணத்திற்குச் சமம்



படம் 7.22

தரவு : வட்ட நாற்கரம் $ABCD$-ல், பக்கம் AB ஆனது E வரை நீட்டப்பட்டுள்ளது.

நிரூபிக்க : $\angle CBE = \angle ADC$

நிரூபணம் :

(i) $\angle ABC + \angle CBE = 180^\circ$ (நேர்க்கோட்டுச் சோடி)

(ii) $\angle ABC + \angle ADC = 180^\circ$ (வட்ட நாற்கரத்தின் எதிர்க் கோணங்கள்)

(i) மற்றும் (ii)-லிருந்து

(iii) $\angle ABC + \angle CBE = \angle ABC + \angle ADC$

(iv) $\therefore \angle CBE = \angle ADC$ ■

எடுத்துக்காட்டு 7.7

படம் 7.27-ல், x எனக் குறிப்பிட்ட கோணத்தின் மதிப்பைக் காண்க.

(i)



படம் 7.23

(ii)



படம் 7.24

(iii)



படம் 7.25

(iv)



படம் 7.26

தீர்வு ஒரு வட்டவில் வட்ட மையத்தில் தாங்கும் கோணம், அந்த வில்லைத் தவிர்த்து வட்டத்தின் மீதிப்பரிதியில் ஏதேனும் ஒரு புள்ளியில் ஏற்படுத்தும் கோணத்தைப் போல் இரு மடங்காகும் என நாம் அறிவோம்.

(i) $\angle AOB = 2\angle ACB$

$$\angle ACB = \frac{1}{2}\angle AOB$$

$$x = \frac{1}{2} \times 80^\circ = 40^\circ$$



(ii) பின்வளை $\angle AOB = 2\angle ACB$

$$x = 2 \times 100^\circ = 200^\circ$$



(iii) $\angle ABC + \angle BCA + \angle CAB = 180^\circ$

$$56^\circ + 90^\circ + \angle CAB = 180^\circ$$

($\because \angle BCA =$ அரை வட்டத்தில் அமையும் கோணம் $= 90^\circ$)

$$\angle CAB = 180^\circ - 146^\circ$$

$$x = 34^\circ$$



(iv) $OA = OB = OC$ (ஆரங்கள்)

$\angle OCA = \angle OAC = 25^\circ$

$\angle OBC = \angle OCB = 20^\circ$

$\angle ACB = \angle OCA + \angle OCB$

$= 25^\circ + 20^\circ = 45^\circ$

$\angle AOB = 2\angle ACB$

$x = 2 \times 45^\circ = 90^\circ$



எடுத்துக்காட்டு 7.8

படம் 7.27-ல் , வட்டமையம் O, $\angle ADC = 120^\circ$ எனில், x-ன் மதிப்பைக் காண்க.

தீர்வு $ABCD$ ஒரு வட்ட நாற்கரம்.

$\angle ABC + \angle ADC = 180^\circ$

$\angle ABC = 180^\circ - 120^\circ = 60^\circ$

மேலும், $\angle ACB = 90^\circ$ (அரை வட்டத்தில் அமைந்த கோணம்)

$\triangle ABC$-ல்,

$\angle BAC + \angle ACB + \angle ABC = 180^\circ$

$\angle BAC + 90^\circ + 60^\circ = 180^\circ$

$\angle BAC = 180^\circ - 150^\circ$

$x = 30^\circ$



படம் 7.27

பயிற்சி 7.3

1. 15 செ.மீ ஆரமுள்ள வட்டத்தில் 18 செ.மீ நீளமுள்ள நாண் வட்ட மையத்திலிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளது எனக் காண்க.

2. 17 செ.மீ ஆரமுள்ள வட்டத்தில் 16 செ.மீ நீளமுள்ள நாண் வட்ட மையத்திலிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளது எனக் காண்க.

3. வட்ட மையத்திலிந்து 24 செ.மீ தொலைவில் உள்ள நாணின் நீளம் 20 செ.மீ எனில், வட்டத்தின் ஆரம் காண்க.

4. 17 செ.மீ ஆரமுள்ள வட்டத்தின் மையத்திலிருந்து 8 செ.மீ தொலைவில் உள்ள நாணின் நீளத்தைக் காண்க.

5. 25 செ.மீ ஆரமுள்ள வட்டத்தின் மையத்திலிருந்து 15 செ.மீ தொலைவில் உள்ள நாணின் நீளத்தைக் காண்க.

6. படத்தில், O-வை மையமாக உடைய வட்டத்தில் இணையாக உள்ள நாண்கள் AB மற்றும் CD. வட்டத்தின் ஆரம் 5 செ.மீ அதில் $AB = 6$ செ.மீ, $CD = 8$ செ.மீ, $OP \perp AB$ மற்றும் $CD \perp OQ$ எனில், PQ-ன் நீளத்தைக் காண்க.



7. வட்ட மையத்தின் எதிரெதிரே (இருபுறமும்) அமைந்த இணையான நாண்களின் நீளங்கள் $AB = 10$ செ.மீ மற்றும் $CD = 24$ செ.மீ. நாண்களுக்கு இடையே உள்ள தொலைவு 17 செ.மீ எனில், வட்டத்தின் ஆரத்தைக் காண்க.

8. படத்தில் O-வை மையமாக உடைய வட்டத்தில் இணையான நாண்கள் $AB = 8$ செ.மீ மற்றும் $CD = 6$ செ.மீ, வட்டத்தின் ஆரம் 5 செ.மீ, $OP \perp AB$ மற்றும் $OQ \perp CD$ எனில், PQ-ன் நீளத்தைக் காண்க.



9. கீழ்க்கண்ட படங்களில் x-ன் மதிப்பைக் காண்க.



10. படத்தில் AB மற்றும் CD ஆகியவை வட்டமையம் O வழியே செல்லும் நேர்க்கோடுகள். $\angle AOC = 98^\circ$ மற்றும் $\angle CDE = 35^\circ$ எனில் (i) $\angle DCE$ (ii) $\angle ABC$ ஆகியவற்றைக் காண்க.



11. படத்தில் O-வை மையமாக உடைய வட்டத்தில் PQ என்பது விட்டம். $\angle PQR = 55^\circ$, $\angle SPR = 25^\circ$ மற்றும் $\angle PQM = 50^\circ$ எனில், (i) $\angle QPR$, (ii) $\angle QPM$ மற்றும் (iii) $\angle PRS$ ஆகியவற்றைக் காண்க.



`12. படத்தில் $ABCD$ என்ற வட்ட நாற்கரத்தின் மூலைவிட்டங்கள் P என்ற புள்ளியில் வெட்டிக் கொள்கின்றன. $\angle DBC = 30^\circ$ மற்றும் $\angle BAC = 50^\circ$ எனில், (i) $\angle BCD$ (ii) $\angle CAD$ ஆகியவற்றைக் காண்க.



13. படத்தில் $ABCD$ என்ற வட்ட நாற்கரத்தில் $AB \parallel DC$. $\angle BAD = 100^\circ$ எனில், (i) $\angle BCD$ (ii) $\angle ADC$ (iii) $\angle ABC$ ஆகியவற்றைக் காண்க.



14. படத்தில் $ABCD$ என்ற வட்ட நாற்கரத்தில் $\angle BCD = 100^\circ$ மற்றும் $\angle ABD = 50^\circ$ எனில், $\angle ADB$-ன் மதிப்பைக் காண்க.



15. படத்தில் O-வை மையமாக உடைய வட்டத்தில் $\angle AOC = 100^\circ$ மற்றும் அதன் ஒருபக்கம் AB ஆனது D வரை நீட்டப்படுகிறது எனில், (i) $\angle CBD$ (ii) $\angle ABC$ ஆகியவற்றைக் காண்க.



நினைவில் கொள்க

- ஒரு இணைகரத்தின் எதிர்ப் பக்கங்கள் சமம்.
- ஒரு இணைகரத்தின் எதிர்க் கோணங்கள் சமம்.
- இணைகரத்தின் மூலைவிட்டங்கள் ஒன்றையொன்று இருசமக் கூறிடும்.
- செவ்வகம் என்பது சம கோண அளவுள்ள இணைகரம் ஆகும்.
- சாய்சதுரம் என்பது சமபக்க இணைகரம் ஆகும்.
- சதுரம் என்பது சமபக்க மற்றும் சமகோண அளவுள்ள இணைகரம் ஆகும்.
- இணைகரத்தின் மூலைவிட்டங்கள் அவ்விணைகரத்தை சம பரப்பளவு கொண்ட இரு முக்கோணங்களாகப் பிரிக்கும்.
- இணைகரத்தின் மூலைவிட்டங்கள் ஒவ்வொன்றும் இணைகரத்தை இரண்டு சர்வசம முக்கோணங்களாகப் பிரிக்கும்.
- இணைகரத்தின் மூலைவிட்டங்கள் ஒன்றுக்கொன்று செங்குத்து எனில், அது சாய்சதுரம் ஆகும்.
- ஒரே அடியின் மீதும், இரு இணை கோடுகளுக்கிடையேயும் அமையும் இணைகரங்கள் சமபரப்புடையவை.
- சமநீளமுள்ள நாண்கள் வட்ட மையத்தில் சம கோணங்களைத் தாங்கும்.
- நாண்களால் வட்ட மையத்தில் அடைபடும் கோணம் சமமெனில், நாண்களின் நீளங்கள் சமமாகும்.
- வட்ட மையத்திலிருந்து நாணிற்கு வரையப்படும் செங்குத்து நாணை இருசமக் கூறிடும்.
- ஒரு வட்டத்திலுள்ள சம நாண்கள் வட்ட மையத்திலிருந்து சம தூரத்தில் இருக்கும்.
- ஒரு வட்டவில் மையத்தில் தாங்கும் கோணம் அந்த வில்லைத் தவிர்த்து வட்டத்தின் மீதிப்பரிதியில் ஏதேனும் ஒரு புள்ளியில் ஏற்படுத்தும் கோணத்தைப் போல் இரு மடங்காகும்.
- அரைவட்டத்தில் அமையும் கோணம் செங்கோணமாகும்.
- ஒரே வட்டத்துண்டிலுள்ள கோணங்கள் சமம்.
- வட்ட நாற்கரத்தின் எதிர்க் கோணங்களின் கூடுதல் 180° ஆகும் (அல்லது) வட்ட நாற்கரத்தின் எதிர்க்கோணங்கள் மிகைநிரப்புக் கோணங்கள்.
- வட்ட நாற்கரத்தின் ஒரு பக்கத்தை நீட்டிப்பதால் ஏற்படும் வெளிக்கோணம் உள்ளெதிர் கோணத்திற்குச் சமம்

8 அளவியல்

The most beautiful plane figure is – the circle and the most beautiful solid figure – the sphere

- PYTHAGORAS

முதன்மைக் குறிக்கோள்கள்

- வட்ட கோணப்பகுதியின் வில்லின் நீளம், சுற்றளவு மற்றும் பரப்பளவு ஆகியவற்றைக் காணுதல்
- கன சதுரத்தின் புறப்பரப்பு மற்றும் கன அளவு காணுதல்
- கன செவ்வகத்தின் புறப்பரப்பு மற்றும் கன அளவு காணுதல்

8.1 அறிமுகம்

முக்கோணங்கள், செவ்வகங்கள், சதுரங்கள், வட்டங்கள் மற்றும் கோளங்கள் போன்ற வடிவங்களை நம் அன்றாட வாழ்வில் காண்கிறோம். இவற்றில் சிலவற்றின் பண்புகளைப் பற்றி நாம் முன்பே அறிந்திருக்கிறோம்.

வடிவியல் வடிவங்களின் அளவுகளைப் பற்றிக் கூறும் கணிதத்தின் பகுதி அளவியல் எனப்படும். வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் வடிவியல் ஒரு முக்கியமான துறையாக கருதப்படுவதால் அளவியலும் மிக முக்கியமானதாகும்.

கட்டிடவியல் மற்றும் தச்சுவியல் ஆகியவற்றில் சுற்றளவு, பரப்பளவு மற்றும் கனஅளவு ஆகியவை முக்கிய பங்கு வகிக்கின்றன. உலகின் உண்மைச் சூழல்களில் பரப்பு மற்றும் கனஅளவு ஆகியன பயன்படுத்தப்படுகின்றன. இன்றைய சூழலில் இருபரிமாண உருவங்களின் சுற்றளவு மற்றும் பரப்பளவு மேலும் முப்பரிமாண உருவங்களின் புறப்பரப்பு மற்றும் கனஅளவு ஆகியவற்றைக் கண்டறியப் பயன்படும் சூத்திரங்களை ஒவ்வொருவரும் கற்பது மிக அவசியம்.

இந்த அத்தியாயத்தில் வட்டகோணப் பகுதிகளின் வில்லின் நீளம் மற்றும் பரப்பு மேலும் கனச்சதுரம், கனச்செவ்வகம் ஆகியவற்றின் புறப்பரப்பு மற்றும் கனஅளவு ஆகியவற்றைப் பற்றி அறிவோம்.



ஆர்க்கிமிடீஸ்

கி.மு. 287 - 212

மிகச் சிறந்த கணித அறிஞர்களில் ஒருவரான ஆர்க்கிமிடீஸ் *(Archimedes)* என்பவர் சிசிலித் தீவிலுள்ள கிரேக்க நகரான சிராக்கூஸைச் சார்ந்தவர். அவர் கி.மு. 287 இல் பிறந்தார். ஒரு வட்டத்தின் உள்ளே அமைந்த ஒழுங்கு பலகோணம் மற்றும் வெளியே அமைந்த ஒழுங்கு பலகோணத்தைப் பயன்படுத்தி π -ன் மதிப்பைக் காண செவ்விய முறையை ஆர்க்கிமிடீஸ் தொடங்கினார். கோளத்தின் பரப்பு மற்றும் கனஅளவு காணச் சரியான சூத்திரங்களைக் கண்டறிந்த பெருமை அவரையே சாரும். பரவளையப் பகுதி மற்றும் ‘ஆர்க்கிமிடீசின் சுருள்’ என்று அழைக்கப்படும். சுருளின் வட்டக்கோணப்பகுதி போன்ற பல பரப்புகளைக் கணக்கிட்டார். தன்னுடைய படைப்புகள் மூலம் கணித இயற்பியலுக்கு அடித்தளம் அமைத்தார்.

8.2 வட்டக்கோணப்பகுதி (*Sector*)

O-வை மையமாகக் கொண்ட ஒரு வட்டத்தின் மேல் உள்ள *P*, *Q* என்ற இரு புள்ளிகள், வட்டவில் (*Arc*) *PQ*, $\angle POQ$ மற்றும் வட்டக்கோணப்பகுதி *POQ* ஆகியவற்றை உருவாக்குகிறது. வட்டவில் *PQ* ஆனது $\overset{\frown}{PQ}$ எனக் குறிக்கப்படுகிறது. இந்த வட்டவில் P-ல் தொடங்கி கடிகாரம் சுற்றும் திசைக்கு எதிர்த்திசையில் Q-வை நோக்கி செல்கிறது. வட்டவில் $\overset{\frown}{PQ}$, ஆரங்கள் *OP* மற்றும் *OQ* இவற்றால் அடைபடும் பகுதி, வட்டக்கோணப்பகுதி *POQ* ஆகும். படம் 8.1-ல் இருந்து $\overset{\frown}{PQ}$ மற்றும் $\overset{\frown}{QP}$ என்ற வட்டவிற்கள் வெவ்வேறானவை என்பதை காண்கிறோம்.



படம் 8.1

முக்கிய கருத்து	வட்டக்கோணப்பகுதி
ஒரு வட்டத்தின் இரண்டு ஆரங்கள் மற்றும் இந்த ஆரங்களால் வெட்டப்படும் வில் ஆகியவற்றால் அடைபடும் பகுதி வட்டக்கோணப்பகுதி (*Sector*) எனப்படும்.	

8.2.1 மையக்கோணம் அல்லது வட்டக்கோணம் (*Central Angle*)

முக்கிய கருத்து	மையக்கோணம்
ஒரு வட்டக்கோணப்பகுதியின் வட்டவில், அவ்வட்டக்கோணப்பகுதி அமைந்துள்ள வட்டத்தின் மையத்தில் ஏற்படுத்தும் கோணம் மையக்கோணம் அல்லது வட்டக்கோணம் (*Central angle*) எனப்படும்.	

படம் 8.2-ல், $\overset{\frown}{PQ}$ என்ற வட்டவில் வட்டத்தின் மையத்தில் ஏற்படுத்தும் கோணம் θ என்க. எனவே, வட்டக்கோணப்பகுதி *POQ*-ன் மையக்கோணம் θ ஆகும்.

எடுத்துக்காட்டாக,

1. அரைவட்டம் என்பது மையக்கோணம் 180° கொண்ட ஒரு வட்டகோணப் பகுதியாகும்.
2. கால்வட்டம் என்பது மையக்கோணம் 90° கொண்ட ஒரு வட்டகோணப் பகுதியாகும்.



படம் 8.2

8.2.2 ஒரு வட்டக்கோணப்பகுதியின் வில்லின் நீளம்

வட்டக்கோணப்பகுதி *POQ*-ல் வில்லின் நீளம் என்பது வட்டப் பரிதியின் மேல் *OP* மற்றும் *OQ* என்ற இரண்டு ஆரங்களால் வெட்டப்படும் பகுதியின் நீளமாகும். வட்டக்கோணப்பகுதியின் வில்லின் நீளம் *l* எனக் குறிக்கப்படும்.



படம் 8.3

எடுத்துக்காட்டாக,

1. ஒரு வட்டத்தின் வில்லின் நீளம் என்பது அவ்வட்டத்தின் பரிதியின் நீளமாகும். அதாவது, $l=2\pi r$ அலகுகள். இங்கு r என்பது வட்டத்தின் ஆரமாகும்.
2. ஒரு அரை வட்டத்தின் வில்லின் நீளம் $l = 2\pi r \times \frac{180^\circ}{360^\circ} = \pi r$ அலகுகள். இங்கு வட்டத்தின் ஆரம் r, மையக்கோணம் 180°.
3. ஒரு கால் வட்டத்தின் வில்லின் நீளம் $l = 2\pi r \times \frac{90^\circ}{360^\circ} = \frac{\pi r}{2}$ அலகுகள். இங்கு வட்டத்தின் ஆரம் r, மையக்கோணம் 90°.

முக்கிய கருத்து **வட்டக்கோணப்பகுதியின் வில்லின் நீளம்**

ஒரு வட்டக்கோணப்பகுதியின் மையக்கோணம் θ மற்றும் ஆரம் r எனில், அதன் வில்லின் நீளம் $l = \frac{\theta}{360^\circ} \times 2\pi r$ அலகுகளாகும்.

8.2.3 வட்டக்கோணப்பகுதியின் பரப்பளவு (*Area of a Sector*)

வட்டக்கோணப்பகுதியின் பரப்பளவு என்பது இரண்டு ஆரங்களுக்கும், அந்த ஆரங்களால் வட்டப் பரிதியில் வெட்டப்படும் வில்லுக்கும் இடைப்பட்ட பகுதியாகும்.



எடுத்துக்காட்டாக,

1. ஒரு வட்டத்தின் பரப்பளவு πr^2 சதுர அலகுகள் ஆகும்.
2. ஒரு அரை வட்டத்தின் பரப்பளவு $\frac{\pi r^2}{2}$ சதுர அலகுகள்
3. ஒரு கால் வட்டத்தின் பரப்பளவு $\frac{\pi r^2}{4}$ சதுர அலகுகள்.

முக்கிய கருத்து **வட்டக்கோணப்பகுதியின் பரப்பளவு**

ஒரு வட்டக்கோணப்பகுதியின் மையக்கோணம் θ மற்றும் ஆரம் r எனில், வட்டக்கோணப்பகுதியின் பரப்பளவு $\frac{\theta}{360^\circ} \times \pi r^2$ சதுர அலகுகளாகும்.

இப்போது, ஒரு வட்டக்கோணப்பகுதியின் பரப்பளவை அதன் வில்லின் நீளம் l மற்றும் ஆரம் r மூலமாக எழுதும் முறையைக் காண்போம்.

$$\text{பரப்பளவு} = \frac{\theta}{360^\circ} \times \pi r^2$$
$$= \frac{\theta}{360^\circ} \times \frac{2\pi r}{2} \times r$$
$$= \frac{1}{2} \times \left(\frac{\theta}{360^\circ} \times 2\pi r \right) \times r$$
$$= \frac{1}{2} \times lr$$

வட்டக்கோணப்பகுதியின் பரப்பளவு $= \frac{lr}{2}$ சதுர அலகுகள்.

8.2.4 வட்டக்கோணப்பகுதியின் சுற்றளவு (*Perimeter of a Sector*)

வட்டக்கோணப்பகுதியின் சுற்றளவு என்பது வட்டக்கோணப்பகுதியின் எல்லைகளின் நீளங்களின் கூடுதல் ஆகும். அதாவது வட்டக்கோணப்பகுதியின் சுற்றளவு $l + 2r$ அலகுகள் ஆகும்.

முக்கிய கருத்து — வட்டக்கோணப்பகுதியின் சுற்றளவு

வில்லின் நீளம் l, வட்டக்கோணப்பகுதியின் ஆரம் r எனில், அதன் சுற்றளவு $P = l + 2r$ அலகுகள்.

எடுத்துக்காட்டாக,

1. அரைவட்டத்தின் சுற்றளவு $(\pi + 2)r$ அலகுகள்
2. கால்வட்டத்தின் சுற்றளவு $\left(\frac{\pi}{2} + 2\right)r$ அலகுகள்

குறிப்பு

1. வில்லின் நீளம் மற்றும் வட்டக்கோணப்பகுதியின் பரப்பு ஆகியன மையக்கோண அளவிற்கு நேர்விகிதத்தில் இருக்கும்.
2. π என்பது ஒரு விகிதமுறா எண், அதன் தோராய மதிப்பு $\frac{22}{7}$ அல்லது 3.14 என பயன்படுத்துகிறோம்.

எடுத்துக்காட்டு 8.1

ஒரு வட்டக்கோணப்பகுதியின் ஆரம் 42 செ.மீ மற்றும் அதன் மையக்கோணம் 60° எனில் அதன் வில்லின் நீளம், பரப்பளவு மற்றும் சுற்றளவைக் காண்க.

தீர்வு ஆரம் r = 42 செ.மீ, மையக்கோணம் $\theta = 60^\circ$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது.

வில்லின் நீளம் $l = \frac{\theta}{360^\circ} \times 2\pi r$

$= \frac{60^\circ}{360^\circ} \times 2 \times \frac{22}{7} \times 42 = 44$ செ.மீ

பரப்பளவு $= \frac{lr}{2} = \frac{44 \times 42}{2} = 924$ ச.செ.மீ

சுற்றளவு $= l + 2r$

$= 44 + 2(42) = 128$ செ.மீ.



எடுத்துக்காட்டு 8.2

வில்லின் நீளம் 66 செ.மீ. மற்றும் மையக்கோணம் 30° கொண்ட வட்டக்கோணப்பகுதியின் ஆரம் காண்க.

தீர்வு மையக்கோணம் $\theta = 30^\circ$, வில்லின் நீளம் $l = 66$ செ.மீ. எனக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே,

$$\frac{\theta}{360^\circ} \times 2\pi r = l$$

$$\frac{30^\circ}{360^\circ} \times 2 \times \frac{22}{7} \times r = 66$$

$$\therefore r = 66 \times \frac{360^\circ}{30^\circ} \times \frac{1}{2} \times \frac{7}{22} = 126 \text{ செ.மீ.}$$



எடுத்துக்காட்டு 8.3

வில்லின் நீளம் 22 செ.மீ மற்றும் ஆரம் 10.5 செ.மீ கொண்ட வட்டக்கோணப்பகுதியின் மையக்கோணம் காண்க.

தீர்வு ஆரம் $r = 10.5$ செ.மீ, வில்லின் நீளம் $l = 22$ செ.மீ. எனக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே,

$$\frac{\theta}{360^\circ} \times 2\pi r = l$$

$$\text{i. e., } \frac{\theta}{360^\circ} \times 2 \times \frac{22}{7} \times 10.5 = 22$$

$$\therefore \theta = 22 \times 360^\circ \times \frac{1}{2} \times \frac{7}{22} \times \frac{1}{10.5} = 120^\circ$$



எடுத்துக்காட்டு 8.4

ஒரு ஊசல் மையத்தில் கோணம் 30° ஏற்படுத்த 11 செ.மீ தொலைவு நகர்கிறது எனில், ஊசலின் நீளத்தைக் காண்க.

தீர்வு ஊசலின் அலைவு ஒரு வட்டக்கோணப்பகுதி ஆகும். ஊசலின் நீளம் என்பது வட்டக்கோணப்பகுதியின் ஆரம் ஆகும்.

மையக்கோணம் $\theta = 30^\circ$, $l = 11$ செ.மீ. எனவே,

$$\frac{\theta}{360^\circ} \times 2\pi r = l$$

$$\frac{30^\circ}{360^\circ} \times 2 \times \frac{22}{7} \times r = 11$$

$$\therefore r = 11 \times \frac{360^\circ}{30^\circ} \times \frac{1}{2} \times \frac{7}{22} = 21 \text{ செ.மீ}$$



எடுத்துக்காட்டு 8.5

ஒரு வட்டக்கோணப்பகுதியின் வில்லின் நீளம் 15 செ.மீ மற்றும் ஆரம் 10 செ.மீ எனில், அதன் சுற்றளவைக் காண்க.

தீர்வு $r = 10$ செ.மீ, $l = 15$ செ.மீ எனக் கொடுக்கப்பட்டுள்ளது, எனவே,

வட்டக்கோணப்பகுதியின் சுற்றளவு$= l + 2r = 15 + 2(10)$

$= 15 + 20 = 35$ செ.மீ



எடுத்துக்காட்டு 8.6

ஆரம் 18 செ.மீ மற்றும் மையக்கோணம் 210° எனக் கொண்ட வட்டக்கோணப்பகுதியின் சுற்றளவைக் காண்க.

தீர்வு $r = 18$ செ.மீ, $\theta = 210^\circ$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே,

$$l = \frac{\theta}{360^\circ} \times 2\pi r$$

$$= \frac{210^\circ}{360^\circ} \times 2 \times \frac{22}{7} \times 18 = 66 \text{ செ.மீ}$$



$\therefore$ வட்டக்கோணப்பகுதியின் சுற்றளவு $= l + 2r = 66 + 2(18) = 66 + 36 = 102$ செ.மீ

எடுத்துக்காட்டு 8.7

ஆரம் 14 செ.மீ மற்றும் பரப்பளவு 77 ச.செ.மீ கொண்டுள்ள வட்டக்கோணப்பகுதியின் மையக்கோணத்தை காண்க.

தீர்வு r = 14 செ.மீ, பரப்பு = 77 ச.செ.மீ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே,

வட்டக்கோணப்பகுதியின் பரப்பு $= \frac{\theta}{360^\circ} \times \pi r^2$



$$\frac{\theta}{360^\circ} \times \frac{22}{7} \times 14 \times 14 = 77$$

$$\therefore\ \theta = \frac{77 \times 360^\circ \times 7}{22 \times 14 \times 14} = 45^\circ$$

எடுத்துக்காட்டு 8.8

ஆரம் 6 செ.மீ, வில்லின் நீளம் 20 செ.மீ கொண்டுள்ள வட்டக்கோணப்பகுதியின் பரப்பைக் காண்க.

தீர்வு r = 6 செ.மீ, l = 20 செ.மீ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே,



பரப்பு $= \frac{lr}{2}$ சதுர அலகுகள்

$= \frac{20 \times 6}{2}$ = 60 ச.செ.மீ

எடுத்துக்காட்டு 8.9

சுற்றளவு 38 செ.மீ மற்றும் ஆரம் 9 செ.மீ எனக் கொண்ட வட்டக்கோணப்பகுதியின் பரப்பைக் காண்க.

தீர்வு ஆரம் = 9 செ.மீ, சுற்றளவு = 38 செ.மீ எனக் கொடுக்கப்பட்டுள்ளது, எனவே,



சுற்றளவு $= l + 2r = 38$

i.e., $l + 18 = 38$

$l = 38 - 18 = 20$ செ.மீ

$\therefore$ பரப்பு $= \frac{lr}{2} = \frac{20 \times 9}{2}$ = 90 ச.செ.மீ

எடுத்துக்காட்டு 8.10

ஆரம் 28 செ.மீ உடைய அரைவட்டத்தின் சுற்றளவு மற்றும் பரப்பளவு ஆகியவற்றைக் காண்க.

தீர்வு ஆரம் 28 செ.மீ எனக் கொடுக்கப்பட்டுள்ளது.



அரைவட்டத்தின் சுற்றளவு $= (\pi + 2)\, r = (\frac{22}{7} + 2)\, 28 = 144$ செ.மீ

பரப்பளவு $= \frac{\pi r^2}{2} = \frac{22}{7} \times \frac{28 \times 28}{2}$ = 1232 ச.செ.மீ

எடுத்துக்காட்டு 8.11

வில்லின் நீளம் 27.5 செ.மீ, பரப்பளவு 618.75 ச.செ.மீ கொண்ட வட்டக்கோணப்பகுதியின் ஆரம், மையக்கோணம் மற்றும் சுற்றளவு ஆகியவற்றைக் காண்க.

தீர்வு வில்லின் நீளம் $l = 27.5$ செ.மீ, பரப்பளவு $= 618.75$ ச.செ.மீ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே,

$$\text{பரப்பளவு} = \frac{lr}{2} = 618.75 \text{ ச.செ.மீ}$$

$$\frac{27.5 \times r}{2} = 618.75$$

$$\therefore r = 45 \text{ செ.மீ}$$

எனவே, சுற்றளவு $l + 2r = 27.5 + 2(45) = 117.5$ செ.மீ

வில்லின் நீளம் $l = \frac{\theta}{360^\circ} \times 2\pi r$

அதாவது, $\frac{\theta}{360^\circ} \times 2 \times \frac{22}{7} \times 45 = 27.5$

$$\therefore \theta = 35^\circ$$

எடுத்துக்காட்டு 8.12

21 செ.மீ ஆரமுள்ள கால்வட்டப் பகுதியின் பரப்பளவு மற்றும் சுற்றளவு ஆகியவற்றைக் காண்க.

தீர்வு $r = 21$ செ.மீ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் $\theta = 90^\circ$ எனவே,

$$\text{சுற்றளவு} = \left(\frac{\pi}{2} + 2\right)r = \left(\frac{22}{7 \times 2} + 2\right) \times 21 = 75 \text{ செ.மீ}$$

$$\text{பரப்பளவு} = \frac{\pi r^2}{4} = \frac{22}{7 \times 4} \times 21 \times 21 = 346.5 \text{ ச.செ.மீ}$$



எடுத்துக்காட்டு 8.13

₹ 9,000 மாதச் சம்பளம் பெறும் ஒருவரின் செலவுகள் படத்தில் காட்டப்பட்டுள்ளது.

(i) உணவிற்காகச் செய்யப்பட்ட செலவு (ii) அவரின் சேமிப்பு

ஆகியவற்றைக் கணக்கிடுக.

தீர்வு மாதச் சம்பளம் ₹ 9,000ஐ வட்டத்தின் மொத்தப் பரப்பு என்க.

i.e., $\pi r^2 = 9000$

(i) வட்ட வில் AOB-ன் பரப்பு $= \frac{\theta}{360^\circ} \times \pi r^2$

$$= \frac{120^\circ}{360^\circ} \times 9000 = 3,000$$

உணவிற்காக செலவு செய்யப்பட்ட தொகை ₹ 3,000.



(ii) வட்ட வில் BOC-ன் பரப்பு $= \frac{\theta}{360^\circ} \times \pi r^2$

$$= \frac{30^\circ}{360^\circ} \times 9,000 = 750$$

சேமிப்பில் உள்ள தொகை ₹ 750.

எடுத்துக்காட்டு 8.14

3 செ.மீ ஆரமுள்ள மூன்று வட்டங்கள் ஒன்றையொன்று தொடும்போது அவற்றால் சூழப்படும் பகுதியின் பரப்பைக் காண்க.

தீர்வு படத்திலிருந்து, ABC ஒரு சமபக்க முக்கோணம் மற்றும் வட்டக்கோணப்பகுதிகள் DAF, DBE மற்றும் ECF ஆகியவற்றின் பரப்புகள் சமம்.

வட்டங்களால் சூழப்பட்ட பகுதியின் பரப்பு = சமபக்க முக்கோணம் ABC-ன் பரப்பு

$- 3\times$(வட்டக்கோணப்பகுதியின் பரப்பு)

$$= \frac{\sqrt{3}}{4}a^2 - 3\times\frac{\theta}{360^\circ}\times\pi r^2$$

$$= \frac{\sqrt{3}}{4}\times 6\times 6 - 3\times\frac{60^\circ}{360^\circ}\times\frac{22}{7}\times 3\times 3$$

$$= 9\sqrt{3} - \frac{99}{7} = 15.59 - 14.14 = 1.45 \text{ ச.செ.மீ}$$



$\therefore$ வட்டங்களால் சூழப்பட்ட பகுதியின் பரப்பு = 1.45 ச.செ.மீ

எடுத்துக்காட்டு 8.15

படத்தில் நிழலிடப்பட்ட பகுதியின் பரப்பு காண் $[\pi = 3.14]$

தீர்வு வட்டக்கோணப்பகுதி COD மற்றும் AOB-ன் ஆரங்கள் முறையே R செ.மீ., r செ.மீ. என்க.

நிழலிடப்பட்ட பகுதியின் பரப்பு = வட்டக்கோணப்பகுதி COD-ன் பரப்பு

$-$ வட்டக்கோணப்பகுதி AOB-ன் பரப்பு

$$= \frac{\theta}{360^\circ}\times\pi R^2 - \frac{\theta}{360^\circ}\times\pi r^2$$

$$= \frac{30^\circ}{360^\circ}\times 3.14\times 15\times 15 - \frac{30^\circ}{360^\circ}\times 3.14\times 8\times 8$$

$$= 58.875 - 16.747 = 42.128 \text{ ச.செ.மீ}$$



பயிற்சி 8.1

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள அளவுள்ள வட்டக்கோணப்பகுதியின் வில்லின் நீளம், பரப்பளவு மற்றும் சுற்றளவு காண்க.
   - (i) ஆரம் 21 செ.மீ, மையக்கோணம் 60° (ii) ஆரம் 4.9 செ.மீ, மையக்கோணம் 30°
   - (iii) ஆரம் 14 செ.மீ, மையக்கோணம் 45° (iv) ஆரம் 15 செ.மீ, மையக்கோணம் 63°
   - (v) ஆரம் 21 டெசி.மீ, மையக்கோணம் 240°
2. (i) வில்லின் நீளம் 88 செ.மீ மற்றும் ஆரம் 42 செ.மீ கொண்ட வட்டக்கோணப்பகுதியின் மையக்கோணம் காண்க.
   - (ii) வில்லின் நீளம் 22 செ.மீ மற்றும் ஆரம் 14 செ.மீ கொண்ட வட்டக்கோணப்பகுதியின் மையக்கோணம் காண்க.
   - (iii) வில்லின் நீளம் 44 செ.மீ மையக்கோணம் 70° கொண்ட வட்டக்கோணப்பகுதியின் ஆரத்தைக் காண்க.

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள அளவுகளுக்கு வட்டக்கோணப்பகுதியின் பரப்பளவு மற்றும் சுற்றளவு ஆகியவற்றைக் காண்க.

   (i) ஆரம் 10 செ.மீ, வில்லின் நீளம் 33 செ.மீ.

   (ii) ஆரம் 55 செ.மீ, வில்லின் நீளம் 80 செ.மீ.

   (iii) ஆரம் 12 செ.மீ, வில்லின் நீளம் 15.25 செ.மீ.

   (iv) ஆரம் 20 செ.மீ, வில்லின் நீளம் 25 செ.மீ.

4. (i) ஆரம் 14 செ.மீ மற்றும் பரப்பளவு 70 ச.செ.மீ கொண்ட வட்டக்கோணப்பகுதியின் வில்லின் நீளம் காண்க.

   (ii) பரப்பளவு 225 ச.செ.மீ மற்றும் வில்லின் நீளம் 15 செ.மீ கொண்ட வட்டக்கோணப்பகுதியின் ஆரம் காண்க.

   (iii) மையக்கோணம் 140° மற்றும் பரப்பளவு 44 ச.செ.மீ கொண்ட வட்டக்கோணப்பகுதியின் ஆரம் காண்க.

5. (i) ஒரு வட்டக்கோணப்பகுதியின் சுற்றளவு 58 செ.மீ. அதன் விட்டம் 9 செ.மீ எனில், அதன் பரப்பு என்ன ?

   (ii) ஆரம் மற்றும் சுற்றளவு முறையே 20 செ.மீ மற்றும் 110 செ.மீ கொண்ட வட்டக்கோணப்பகுதியின் பரப்பைக் காண்க.

6. கீழே தரப்பட்ட அளவுகளில் இருந்து வட்டக்கோணப்பகுதியின் மையக்கோணம் காண்க.

   (i) பரப்பளவு 352 ச.செ.மீ, ஆரம் 12 செ.மீ

   (ii) பரப்பளவு 462 ச.செ.மீ, ஆரம் 21 செ.மீ

7. (i) ஆரம் 14 செ.மீ அளவுள்ள அரைவட்டத்தின் சுற்றளவு மற்றும் பரப்பளவைக் காண்க.

   (ii) 7 செ.மீ ஆரமுள்ள கால்வட்டத்தின் சுற்றளவு மற்றும் பரப்பளவைக் காண்க.

8. (i) வட்டக்கோணப்பகுதியின் சுற்றளவு மற்றும் ஆரம் முறையே 35 செ.மீ, 8 செ.மீ எனில், அதன் வில்லின் நீளத்தைக் காண்க.

   (ii) வட்டக்கோணப்பகுதியின் சுற்றளவு மற்றும் வில்லின் நீளம் முறையே 24 செ.மீ, 7 செ.மீ. எனில், அதன் ஆரத்தைக் காண்க.

9. ஒரு மாணவன் ஒரு நாளில் செலவழித்த நேரம் (மணிகளில்) படத்தில் தரப்பட்டுள்ளது. அவன்

   (i) பள்ளியில் (ii) விளையாட்டில்

   (iii) பிற செயல்களில் செலவிட்ட நேரத்தைக் கணக்கிடுக.



10. 2 செ.மீ விட்டமுள்ள மூன்று நாணயங்கள் ஒன்றை ஒன்று தொடுமாறு வைக்கப்பட்டால் அவற்றுள் அடைபடும் பகுதியின் பரப்பைக் காண்க.

11. 21 மீ நீளமும் 24 மீ அகலமும் கொண்ட புல்வெளியின் நான்கு மூலைகளிலும் 7 மீ நீளமுள்ள கயிற்றால் நான்கு குதிரைகள் கட்டப்பட்டுள்ளன. எனில்,

    (i) குதிரைகள் மேயும் அதிகபட்ச பரப்பு

    (ii) குதிரைகள் மேயாத பகுதியின் பரப்பு ஆகியனவற்றைக் காண்க.

12. 24 செ.மீ நீளமுள்ள சதுர அட்டையிலிலிருந்து ஒரு மிகப் பெரிய வட்டக்கோணப்பகுதி வெட்டியெடுக்கப்பட்டால் மீதமுள்ள அட்டையின் பரப்பு காண்க. $[\pi = 3.14]$

13. படத்தில் நிழலிடப்பட்ட பகுதியின் பரப்பு காண்க.



14. வட்டக்கோணப்பகுதியின் வில்லின் நீளம் மற்றும் பரப்பு முறையே 4.4 மீ, 9.24 ச.மீ எனில், அதன் ஆரம், மையக்கோணம் மற்றும் சுற்றளவைக் காண்க.

8.3 கனச்சதுரங்கள் (*Cubes*)

ஆறு சதுர பக்க அளவுகளால் அடைபட்ட பகுதி கனச்சதுரம் எனப் படித்துள்ளீர்கள் (உதாரணம்: பகடை). இங்கு அதன் புறப்பரப்பு (*Lateral Surface Area*) மற்றும் கனஅளவு (*Volume*) ஆகியவற்றைக் காணும் முறையைக் கற்போம்.

8.3.1 கனச்சதுரத்தின் மொத்தப் புறப்பரப்பு (*Surface Area of a Cube*)

ஆறு பக்கங்களின் பரப்புளவுகளின் கூடுதல் கனச்சதுரத்தின் மொத்தப் புறப்பரப்பு (*Total Surface Area*) எனப்படும்.



அருகில் உள்ள படத்தில், கனச்சதுரத்தின் பக்கம் a அலகு என்க. பக்கப்பரப்பு a^2 சதுர அலகுகள். எனவே, மொத்தப் பரப்பு $6a^2$ ச.அ. ஆகும்.

கனச்சதுரத்தில் மேற்பரப்பு மற்றும் அடிப்பரப்பைக் கணக்கில் கொள்ளாவிட்டால் நமக்கு பக்கப் பரப்பு கிடைக்கும். எனவே, பக்கப்பரப்பு $4a^2$ ச.அ ஆகும்.

முக்கிய கருத்து	புறப்பரப்பு
a அலகுகள் கொண்ட கனச்சதுரத்தின் (i) மொத்தப் பரப்பு = $6a^2$ ச.அ (ii) பக்கப்பரப்பு = $4a^2$ ச.அ.	

8.3.2 கனச்சதுரத்தின் கனஅளவு (*Volume of a Cube*)

முக்கிய கருத்து	கன அளவு
a அலகுகள் கொண்ட கனச்சதுரத்தின் கனஅளவு $V = a^3$ கனஅலகுகள்	

குறிப்பு கனஅளவு என்பதை கனச்சதுரத்தின் கொள்ளளவு என்றும் வரையறுக்கலாம்.

எடுத்துக்காட்டு 8.16

5 செ.மீ பக்க அளவு கொண்ட கனச்சதுரத்தின் மொத்தப் பரப்பு, பக்கப்பரப்பு மற்றும் கனஅளவு ஆகியவற்றைக் காண்க.



தீர்வு பக்கப் பரப்பு $= 4a^2 = 4(5^2) = 100$ செ.மீ

மொத்தப் புறப்பரப்பு $= 6a^2 = 6(5^2) = 150$ ச.செ.மீ

கனஅளவு $= a^3 = 5^3 = 125$ க.செ.மீ

எடுத்துக்காட்டு: 8.17

மொத்தப் புறப்பரப்பு 216 ச.செ.மீ கொண்ட கனச்சதுரத்தின் பக்க அளவைக் காண்க.



தீர்வு கனச்சதுரத்தின் பக்க அளவு 'a' என்க.

மொத்தப் புறப்பரப்பு = 216 ச.செ.மீ

i. e., $6a^2 = 216 \implies a^2 = \frac{216}{6} = 36$

$\therefore \quad a = \sqrt{36} = 6$ செ.மீ

எடுத்துக்காட்டு 8.18

ஒரு கனச்சதுரத்தின் மொத்தப் புறப்பரப்பு 384 ச.செ.மீ எனில், அதன் கனஅளவைக் காண்க.



தீர்வு கனச்சதுரத்தின் பக்க அளவு 'a' என்க.

மொத்தப் புறப்பரப்பு = 384 ச.செ.மீ

$6a^2 = 384 \implies a^2 = \frac{384}{6} = 64$

$\therefore$ a $= \sqrt{64} = 8$ செ.மீ

கனஅளவு $= a^3 = 8^3 = 512$ க.செ.மீ

எடுத்துக்காட்டு 8.19

ஒரு கனச்சதுர வடிவ நீர்த்தொட்டியின் கொள்ளளவு 27,000 லிட்டர் எனில், அதன் பக்க அளவைக் காண்க.

தீர்வு கனச்சதுர வடிவ நீர்த்தொட்டியின் பக்க அளவு 'a' என்க.

கனஅளவு = 27,000 லி.

$V = a^3 = \frac{27,000}{1,000}$ க.மீ = 27 க.மீ $\quad \therefore$ a = $\sqrt[3]{27}$ = 3 மீ

பயிற்சி 8.2

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள பக்க அளவைக் கொண்ட கனச்சதுரத்தின் மொத்தப் பரப்பு, பக்கப்பரப்பு மற்றும் கனஅளவு ஆகியவற்றைக் காண்க.

   (i) 5.6 செ.மீ (ii) 6 டெசி.மீ (iii) 2.5 மீ (iv) 24 செ.மீ (v) 31 செ.மீ

2. (i) ஒரு கனச்சதுரத்தின் பக்கப்பரப்பு 900 ச.செ.மீ எனில், பக்க அளவைக் காண்க.

   (ii) ஒரு கனச்சதுரத்தின் மொத்தப் பரப்பு 1014 ச.செ.மீ எனில், பக்க அளவைக் காண்க.

   (iii) ஒரு கனச்சதுரத்தின் கன அளவு 125 க.டெசி.மீ எனில், பக்க அளவைக் காண்க.

3. ஒரு கனச்சதுர கொள்கலனின் பக்க அளவு 20 செ.மீ எனில், அதனை முழுவதும் நிரப்ப தேவையான சர்க்கரையின் அளவு யாது?

4. ஒரு கனச்சதுர வடிவ நீர்த்தேக்கத் தொட்டியின் கனஅளவு 64,000 லி. எனில், அதன் பக்க அளவைக் காண்க.

5. 3 செ.மீ, 4 செ.மீ, 5 செ.மீ பக்க அளவுடைய மூன்று கனச்சதுரங்கள் உருக்கப்பட்டு ஒரு பெரிய கனச்சதுரமாக மாற்றப்பட்டால் அதன் மொத்தப் புறப்பரப்பைக் காண்க.

6. 15 செ.மீ பக்க அளவுள்ள ஒரு கனச்சதுரம் உருவாக்க 3 செ.மீ பக்க அளவுள்ள கனச்சதுரங்கள் எத்தனை தேவை?

7. 40 செ.மீ பக்க அளவுள்ள ஒரு திறந்த கனச்சதுர பெட்டி அமைக்கத் தேவையான அட்டையின் பரப்பு காண்க. மேலும், அதன் கனஅளவையும் காண்க.

8. 2 மீ பக்க அளவுள்ள ஒரு கனச்சதுர கொள்கலன் முழுவதும் எண்ணெய் உள்ளது. 10 செ.மீ பக்க அளவுள்ள ஒரு கனச்சதுர குவளையின் எண்ணெய் விலை ₹ 50 எனில், எண்ணெயின் மொத்த விலையைக் காண்க?

9. 3.5 மீ பக்க அளவுள்ள ஒரு கனச்சதுர கொள்கலனின் உட்புறமும் வெளிப்புறமும் வர்ணம் பூசப்படுகிறது. வர்ணம் பூச ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு ₹ 75 எனில், வர்ணம் பூச படவேண்டிய பரப்பையும் அதற்கு ஆகும் மொத்த செலவையும் காண்க.

8.4 கனச்செவ்வகங்கள் (*Cuboids*)

ஒரு கனச்செவ்வகம் என்பது ஆறு செவ்வகப் பகுதியால் உள்ளடங்கிய முப்பரிமாண பகுதியாகும்.

உதாரணம் : செங்கற்கள், புத்தகங்கள், ...

8.4.1 கனச்செவ்வகத்தின் புறப்பரப்பு (*Surface Area of a Cuboid*)

ஒரு கனச்செவ்வகத்தின் நீளம், அகலம் மற்றும் உயரம் முறையே l, b மற்றும் h என்க. அதன் மொத்தப் புறப்பரப்பு (Total Surface Area)



(i) முன் பின் பக்கங்களின் பரப்பு $lh + lh = 2lh$ ச.அ

(ii) இரு பக்க முகங்களின் பரப்பு $bh + bh = 2bh$ ச.அ

(iii) மேல், கீழ் பக்கங்களின் பரப்பு

$lb + lb = 2lb$ ச.அ இவற்றின் கூடுதல் ஆகும்.

கனச்செவ்வகத்தின் பக்கப்பரப்பு $= 2(l + b)h$ ச.அ

கனச்செவ்வகத்தின் மொத்தப் புறப்பரப்பு (T.S.A) $= 2(lb + bh + lh)$ ச.அ

முக்கிய கருத்து — **கனச்செவ்வகத்தின் புறப்பரப்பு**

ஒரு கனச்செவ்வகத்தின் நீளம், அகலம் மற்றும் உயரம் முறையே l, b, h எனில்,

(i) பக்கப் பரப்பு $= 2(l + b)h$ ச.அ.

(ii) மொத்தப் பரப்பு $= 2(lb + bh + lh)$ ச.அ.

குறிப்பு பக்கப்பரப்பு என்பது அடிப்பக்கத்தின் சுற்றளவு மற்றும் உயரத்தின் பெருக்கற்பலனாகும்.

8.4.2 கனச்செவ்வகத்தின் கனஅளவு (*Volume of a Cuboid*)

முக்கிய கருத்து — **கனச்செவ்வகத்தின் கனஅளவு**

ஒரு கனச்செவ்வகத்தின் நீளம், அகலம், உயரம் முறையே l, b, h எனில், அதன் கனஅளவு,

$V = l \times b \times h$ க. அலகுகள்

எடுத்துக்காட்டு 8.20

ஒரு கனச்செவ்வகத்தின் நீளம், அகலம் மற்றும் உயரம் முறையே 20 செ.மீ, 12 செ.மீ மற்றும் 9 செ.மீ எனில், அதன் மொத்தப் புறப்பரப்பைக் காண்க.

தீர்வு $l = 20$ செ.மீ, $b = 12$ செ.மீ, $h = 9$ செ.மீ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே,

$\therefore$ மொத்தப் புறப்பரப்பு $= 2\,(lb + bh + lh)$



$$\text{T.S.A} = 2[(20\times12)+(12\times9)+(20\times9)]$$
$$= 2(240+108+180)$$
$$= 2\times528$$
$$= 1056 \text{ ச.செ.மீ}$$

எடுத்துக்காட்டு 8.21

3மீ $\times$ 5மீ $\times$ 4மீ அளவுள்ள கனச்செவ்வகத்தின் பக்கப் பரப்பைக் காண்க.

தீர்வு $l = 3$ மீ, $b = 5$ மீ, $h = 4$ மீ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே,



பக்கப்பரப்பு $= 2(l+\text{b})h$

$= 2\times(3+5)\times4$

$= 2\times8\times4$

$= 64$ ச.மீ

எடுத்துக்காட்டு 8.22

11 மீ, 10 மீ, 7 மீ அளவுள்ள கனச்செவ்வகத்தின் கனஅளவைக் காண்க.

தீர்வு $l = 11$ மீ, $b = 10$ மீ, $h = 7$ மீ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே,

கனஅளவு $= lbh$

$= 11\times10\times7$

$= 770$ க.மீ



எடுத்துக்காட்டு 8.23

கனஅளவு 216 க.செ.மீ அளவுள்ள இரு கனச்சதுரங்கள் படத்தில் காட்டியுள்ளவாறு இணைக்கப்படும்போது கிடைக்கும் கனச்செவ்வகத்தின் மொத்தப் பரப்பைக் காண்க.

தீர்வு கனச்சதுரத்தின் பக்க அளவு a என்க. $a^3 = 216$ க.செ.மீ

$\therefore$ a $= \sqrt[3]{216} = 6$ செ.மீ

இரு கனச்சதுரங்கள் இணைக்கப்பட்டு கனச்செவ்வகம் பெறப்படுகிறது. எனவே,

$\therefore l = 6 + 6 = 12$ செ.மீ, $b = 6$ செ.மீ, $h = 6$ செ.மீ.

$\therefore$ T.S.A $= 2\,(lb + bh + lh)$

$= 2\ [(12 \times 6) + (6 \times 6) + (12 \times 6)]$

$= 2\ [72 + 36 + 72]$

$= 2 \times 180 = 360$ ச.செ.மீ



எடுத்துக்காட்டு 8.24

நீளம், அகலம் மற்றும் உயரம் முறையே 20 செ.மீ, 45 செ.மீ மற்றும் 50 செ.மீ அளவுடைய ஒரு C.P.U விற்கு உறை தைக்க ஜானி விரும்பினான். உறையின் விலை 1 சதுர மீட்டருக்கு ₹ 50 எனில், உறை தைக்க ஆகும் செலவைக் காண்க.

தீர்வு உறை ஒரு பக்கம் திறந்த கனச்செவ்வக வடிவில் இருக்கும்.

$l = 20$ செ.மீ $= 0.2$ மீ, $b = 45$ செ.மீ $= 0.45$ மீ, $h = 50$ செ.மீ $= 0.5$ மீ



$\therefore$ உறையின் பரப்பு = பக்க பரப்பு + மேல் பரப்பு

$= 2\ (l + b)\ h + lb$

$= 2\ (0.2 + 0.45)\ 0.5 + (0.2 \times 0.45)$

$= 2 \times 0.65 \times 0.5 + 0.09$

$= 0.65 + 0.09$

$= 0.74$ ச.மீ

1 சதுர மீட்டர் துணியின் விலை ₹ 50

$\therefore$ 0.74 சதுர மீட்டர் துணியின் விலை $50 \times 0.74 =$ ₹ 37.

எடுத்துக்காட்டு: 8.25

5மீ $\times$ 2மீ $\times$ 1மீ அளவுள்ள ஒரு குழி மணலால் நிரப்பப்படுகிறது. ஒரு கனமீட்டருக்கு மணல் நிரப்ப ஆகும் செலவு ₹ 270 எனில், மொத்த செலவைக் காண்க.

தீர்வு ஒரு குழி கனச்செவ்வக வடிவில் உள்ளது. அதன் அளவுகள் $l = 5$மீ, $b = 2$மீ, $h = 1$மீ

$\therefore$குழியின் கனஅளவு = கனச்செவ்வகத்தின் கன அளவு

$= lbh$

$= 5 \times 2 \times 1$

$= 10$ க.மீ

1 கனமீட்டர் மணல் நிரப்ப ₹ 270 செலவாகிறது எனில், 10 கன மீட்டர் மணல் நிரப்ப ஆகும் செலவு $= 270 \times 10 =$ ₹ 2700

பயிற்சி 8.3

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள கனச்செவ்வகத்தின் நீள, அகல, உயரங்களுக்கு பக்கப்பரப்பு, மொத்தப்பரப்பு மற்றும் கனஅளவு காண்க.

   (i) 5 செ.மீ, 2 செ.மீ, 11செ.மீ (ii) 15 டெசி.மீ,10 டெசி.மீ, 8 டெசி.மீ.

   (iii) 2 மீ, 3 மீ, 7 மீ (iv) 20 மீ, 12 மீ, 8 மீ

2. கனச்செவ்வகத்தின் நீளம், அகலம் மற்றும் கனஅளவு முறையே 35 செ.மீ, 15 செ.மீ, மற்றும் 14175 க.செ.மீ எனில், உயரத்தைக் காண்க.

3. 64 க.செ.மீ கன அளவுள்ள இரு கனச்சதுரங்கள் இணைக்கப்பட்டால் உண்டாகும் உருவத்தின் பக்கப்பரப்பு மற்றும் மொத்தப் பரப்பு காண்க.

4. நீளம், அகலம் மற்றும் உயரம் 35 செ.மீ, 30 செ.மீ. மற்றும் 55 செ.மீ அளவுடைய இரு ஒலிப் பெருக்கிகளுக்கு ராஜு உறை தைக்கத் திட்டமிட்டான். உறை தைக்க ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு ₹ 75 எனில், மொத்த செலவைக் காண்க.

5. ஒரு கூடத்தின் அளவு 20மீ $\times$ 15மீ $\times$ 6மீ என உள்ளது. அக்கூடத்திற்கு மோகன் வர்ணம் அடிக்க விரும்பினான். 1 சதுர மீட்டருக்கு வர்ணம் பூச ஆகும் செலவு ₹ 78 எனில், மொத்த செலவைக் காண்க.

6. நீளம் 60 மீ, அகலம் 0.3 மீ, உயரம் 2 மீ உடைய சுவர் எழுப்ப 30செ.மீ $\times$ 15செ.மீ $\times$ 20செ.மீ அளவு கொண்ட செங்கற்கள் எத்தனை தேவை?

7. 10மீ$\times$45மீ$\times$6மீ அளவுள்ள ஒரு அறையின் தளம் மற்றும் சுவரை புதுப்பிக்க ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு ₹ 48 எனில், மொத்த செலவைக் காண்க.

நினைவில் கொள்க

- ஒரு வட்டத்தின் இரண்டு ஆரங்கள் மற்றும் ஆரங்களால் வெட்டப்படும் வில் ஆகியவற்றால் அடைபடும் பகுதி வட்டக்கோணப்பகுதி எனப்படும்.
- ஒரு வட்டக்கோணப்பகுதியின் வட்டவில், அவ்வட்டக்கோணப்பகுதி அமைந்துள்ள வட்டத்தின் மையத்தில் ஏற்படுத்தும் கோணம் மையக்கோணம் அல்லது வட்டக்கோணம் எனப்படும்.
- ஒரு வட்டக்கோணப்பகுதியின் மையக்கோணம் θ மற்றும் ஆரம் r எனில், அதன் வில்லின் நீளம் $l=\frac{\theta}{360}\times 2\pi r$ அலகுகளாகும்.
- ஒரு வட்டக்கோணப்பகுதியின் மையக்கோணம் θ மற்றும் ஆரம் r எனில், வட்டக்கோணப்பகுதியின் பரப்பளவு $\frac{\theta}{360}\times \pi r^2$ சதுர அலகுகளாகும்.
- l – வில்லின் நீளம், r – வட்டக்கோணப்பகுதியின் ஆரம் எனில், அதன் சுற்றளவு $P = l + 2r$ அலகுகள்.
- பக்கஅளவு a அலகுகள் கொண்ட கனச்சதுரத்தின்

  (i) மொத்தப் புறப்பரப்பு (T.S.A) = $6a^2$ ச.அ.

  (ii) பக்கப்பரப்பு = $4a^2$ ச.அ.
- பக்கஅளவு a அலகுகள் கொண்ட கனச்சதுரத்தின் கனஅளவு,

  $V = a^3$ கன அலகுகள்
- ஒரு கனச்செவ்வகத்தின் நீளம், அகலம் மற்றும் உயரம் முறையே l, b, h எனில்,

  (i) பக்கப் பரப்பு = $2(l + b)h$ ச.அ

  (ii) மொத்தப் பரப்பு = $2(lb + bh + lh)$ ச.அ
- ஒரு கனச்செவ்வகத்தின் நீளம், அகலம், உயரம் முறையே l, b, h அலகுகள் எனில், அதன் கனஅளவு $V = l\times b\times h$ க.அ.

9 செய்முறை வடிவியல்

முதன்மைக் குறிக்கோள்கள்

- சுற்றுவட்டம் வரைதல்
- குத்துக்கோட்டு மையம் வரைதல்
- உள்வட்ட மையம் வரைதல்
- நடுக்கோட்டு மையம் வரைதல்

9.1 அறிமுகம்

புள்ளிகள், நேர்க்கோடுகள் மற்றும் பிற உருவங்களின் பண்புகளைப் பற்றி வடிவியலின் அடிப்படைக் கொள்கைகள் விவரிக்கின்றன. வடிவியலின் விதிகளைப் பயன்படுத்தி வடிவியல் உருவங்களை வரையும் முறையே செய்முறை வடிவியலாகும். வடிவியலில் “வரைதல்” என்பது உருவங்கள், கோணங்கள் அல்லது நேர்க்கோடுகளை துல்லியமாக வரைதலாகும். யூக்ளிடின் ‘Elements’ என்ற புத்தகத்தில் வடிவியலின் வரைபடங்களைப் பற்றித் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. எனவே இவ்வரைபடங்கள் யூக்ளிடின் வரைபடங்கள் என அறியப்படுகின்றன. அடிக்கோல் மற்றும் காம்பஸை பயன்படுத்தி இவ்வரைபடங்கள் வரையப்படுகின்றன. காம்பஸ் சரிசம தூரத்தையும், அடிக்கோல் ஒன்றின் மீது ஒன்று அமைவதையும் உறுதிப்படுத்துகின்றன. அனைத்து வடிவியல் வரைபடங்களும் இவ்விரு கருத்துக்களின் அடிப்படையில் அமைகின்றன.

இரண்டாம் பாடப்பகுதியில் அடிக்கோல் மற்றும் காம்பஸை பயன்படுத்தி விகிதமுறு எண்கள் மற்றும் விகிதமுறா எண்களை குறிக்க இயலும் என்பதை கற்றோம். 1913-ல் இந்திய கணிதமேதை இராமனுஜன் $\sqrt[4]{\frac{355}{113}} = \pi$-ஐ குறிக்க ஒரு வடிவியல் முறையை அளித்தார். தற்போது துல்லியமான அளவுகளைக் கொண்டு வரையும் திறன்களைப் பயன்படுத்தி நேர்க்கோடுகளால் மலைக்குள்ளே செல்லும் சுரங்கப்பாதைகளை வரையமுடியும் என்பது மிகச்சிறப்பான அம்சமாகும். ஒரு செவ்விய சதுரத்தின் ஒவ்வொரு முனையிலிருந்தும் ஒரு குறிப்பிட்ட கோணத்தில் நூற்றுக்கணக்கான அடி உயரத்தில் எழும்பும் நேர்க்கோடுகள் ஒரு புள்ளியில் நிலைநிறுத்தப்படுகிறது. இவ்வாறு நான்கு முனைகளிலிருந்து எழும்பும் நேர்க்கோடுகள் மூலம் ஒரு பிரமிட் கட்டப்படுகிறது.

ஆய்லர்

1707 - 1783

18ஆம் நூற்றாண்டில் சுவிட்சர்லாந்து நாட்டு கணித அறிஞர் ஆய்லர் *(Euler)* வாழ்ந்தார். அவர் காலத்திற்கு முன்பும் பின்பும் அவரைப் போன்று யாரும் அறிவியல் ஆய்வுக்கட்டுரைகள் அதிகமாக எழுதியதில்லை. உலகைப் புரிந்து கொள்ள ஆய்லருக்கு கணிதம் ஒரு கருவியாக இருந்தது. ஒவ்வொரு கண்டுபிடிப்பின் மூலமும் இயற்கையை புரிந்து கொள்வதில் ஒரு அடி நெருங்குவதாக அவர் உணர்ந்தார்.

வடிவியல் முற்றுப்பெற்றத் துறை என எண்ணியபோது யூக்ளிடின் வடிவியலில் ஒரு புதிய தேற்றத்தை இவர் கண்டுபிடித்தார். ஆய்லரின் ஒன்பது புள்ளிகளடங்கிய வட்டத் தேற்றத்தை கீழே காண்போம்.

ஒரு முக்கோணத்தின் மூன்று குத்துயரங்கள் H என்ற புள்ளியிலும் பக்கங்களின் செங்குத்து இருசம வெட்டிகள் M என்ற புள்ளியிலும் சந்திக்கின்றன எனில், HM என்ற நேர்க்கோட்டின் நடுப்புள்ளி E-ஐ மையமாகக் கொண்ட வட்டத்தின் மீது அனைத்து குத்துயரங்களும், செங்குத்து இருசம வெட்டிகளும் அமைகின்றன.



கொடுக்கப்பட்டுள்ள அளவுகளுக்கு முக்கோணம் வரைவதைப் பற்றி நாம் எட்டாம் வகுப்பில் கற்றுள்ளோம்.

இப்பாடத்தில் நாம் நடுக்கோட்டு மையம், குத்துக்கோட்டு மையம், உள்வட்ட மையம் மற்றும் சுற்றுவட்ட மையம் ஆகியவற்றை வரையும் முறைப்பற்றி கற்போம்.

முதலில் கீழ்க்கண்டவற்றை வரையும் முறைப்பற்றி நினைவு கூர்வோம்.

9.2 முக்கோணம் சார்ந்த சிறப்பு கோட்டுத் துண்டுகள்

(i) கொடுக்கப்பட்ட கோட்டுத்துண்டிற்கு மையக்குத்துக்கோடு வரைதல்

(ii) கொடுக்கப்பட்ட கோட்டுத்துண்டிற்கு வெளியே உள்ள ஒரு புள்ளியிலிருந்து செங்குத்துக்கோடு வரைதல்

(iii) கொடுக்கப்பட்ட கோணத்திற்கு இருசமவெட்டி வரைதல்

(iv) கொடுக்கப்பட்ட கோட்டுத்துண்டிற்கு வெளியேயுள்ள ஒரு புள்ளியையும் அக்கோட்டுத்துண்டின் மையப்புள்ளியையும் இணைத்தல்

9.2.1 கொடுக்கப்பட்ட கோட்டுத்துண்டிற்கு மையக்குத்துக்கோடு (Perpendicular Bisector) வரைதல்

படி 1 : கோட்டுத்துண்டு AB வரைக.

படி 2 : கோட்டுத்துண்டின் நீளத்தின் பாதியளவிற்கு மேல் அளவெடுத்து, கோட்டுத்துண்டின் இறுதிப்புள்ளிகள் A மற்றும் B ஆகியவற்றை மையமாகக் கொண்டு மேலும் கீழும் வட்டவிற்களை ஒன்றையொன்று வெட்டும்படி வரைந்து, வெட்டும் புள்ளிகளுக்கு C, D எனப் பெயரிடுக.



படி 3 : C மற்றும் D-ஐ இணைக்க AB-ன் மையக்குத்துக்கோடு கிடைக்கும்.



முக்கிய கருத்து — **மையக்குத்துக்கோடு**

ஒரு கோட்டுத்துண்டின் மையப்புள்ளி வழியாக வரையப்படும் செங்குத்துக்கோடு அதன் மையக்குத்துக்கோடு *(Perpendicular Bisector)* எனப்படும்.

9.2.2 கொடுக்கப்பட்ட கோட்டுத்துண்டிற்கு வெளியே உள்ள ஒரு புள்ளியிலிருந்து அக்கோட்டு துண்டிற்கு குத்துக்கோடு வரைதல்

படி 1 : கோட்டுத்துண்டு AB வரைந்து அதற்கு வெளியே C என்ற புள்ளியை குறி.



படி 2 : C ஐ மையமாக கொண்டு ஏதேனும் ஒரு அளவில் கோட்டுத்துண்டு AB-ல் வெட்டுமாறு இரு வட்டவிற்கள் வரைந்து அவற்றிற்கு P மற்றும் Q எனப் பெயரிடு.



படி 3 : P மற்றும் Q ஆகிய புள்ளிகளுக்கு இடையே உள்ள தூரத்தில் பாதிக்கு மேல் அளவெடுத்து C என்ற புள்ளியின் எதிர்புறத்தில் P மற்றும் Q யிலிருந்து வட்டவில்களை வரைந்து வெட்டும் புள்ளிக்கு E என பெயரிடு.



படி 4 : C மற்றும் E ஐ இணைக்கக் கிடைக்கும் கோடு தேவையான குத்துக்கோடு ஆகும்.



முக்கிய கருத்து **குத்துக்கோடு**

முக்கோணத்தின் ஒரு உச்சியிலிருந்து அதற்கு எதிரே உள்ள பக்கத்திற்கு வரையப்படும் செங்குத்துக்கோடு குத்துக்கோடு *(Altitude)* எனப்படும்.



9.2.3 கோணத்தின் இருசமவெட்டி வரைதல் (*Angle Bisector*)

படி 1 : கொடுக்கப்பட்ட கோண அளவுக்கு ஏற்ப $\angle CAB$ ஐ வரைக.



படி 2 : A ஐ மையமாகக் கொண்டு ஏதேனும் ஒரு அளவிற்கு ஆரம் எடுத்து AC மற்றும் AB ஐ D மற்றும் E யில் வெட்டுமாறு விற்களை வரைக.



படி 3 : D மற்றும் E ஐ முறையே மையமாகக் கொண்டு DE –ன் அளவில் பாதிக்குமேல் ஆரமாக எடுத்து விற்களை வரைந்து அவை வெட்டும் புள்ளிக்கு F எனப் பெயரிடுக.



படி 4 : A மற்றும் F ஐ இணைக்கக் கிடைக்கும் AF ஆனது $\angle CAB$ -ன் கோண இரு சமவெட்டி ஆகும்.



முக்கிய கருத்து — **கோண இருசமவெட்டி**

கொடுக்கப்பட்டுள்ள கோணத்தை இரு சமகோணங்களாகப் பிரிக்கும் கோடு அக்கோணத்தின் கோண இருசமவெட்டி (*Angle Bisector*) எனப்படும்.



9.2.4 கொடுக்கப்பட்டுள்ள கோட்டுத் துண்டின் மையப்புள்ளியை கோட்டுத்துண்டிற்கு வெளியே உள்ள புள்ளியுடன் இணைத்தல்

படி 1 : கொடுக்கப்பட்டுள்ள அளவிற்கு கோட்டுத்துண்டு AB வரைந்து, அதற்கு வெளியே C என்ற புள்ளியைக் குறி.



படி 2 : கொடுக்கப்பட்ட கோட்டுத்துண்டிற்கு மையக்குத்துக் கோடு வரைந்து அது AB-யை வெட்டும் புள்ளிக்கு M எனப் பெயரிடுக.



படி 3 : C மற்றும் M ஐ இணைக்கவும்.

முக்கிய கருத்து — **நடுக்கோடு**

ஒரு முக்கோணத்தின் ஒரு உச்சியை அதற்கு எதிரே உள்ள பக்கத்தின் நடுப்புள்ளியுடன் இணைக்கும் கோட்டுத்துண்டு நடுக்கோடு (*Median*) எனப்படும்.



9.3 ஒரு புள்ளி வழிச் செல்லும் கோடுகள் (Points of Concurrency)

மையக்குத்துக்கோடு, குத்துக்கோடு, கோண இருசமவெட்டி மற்றும் நடுக்கோடு ஆகியவற்றை வரைவது பற்றி இது வரை கற்றோம். இப்போது நாம் சுற்றுவட்ட மையம், குத்துக்கோட்டு மையம், உள்வட்ட மையம், நடுக்கோட்டு மையம் போன்றவற்றை காணும் முறையைப் பற்றி அறிவோம்.

9.3.1 முக்கோணத்தின் சுற்றுவட்டமையம் வரைதல்

சுற்றுவட்டம் *(Circumcircle)*

முக்கோணத்தின் மூன்று உச்சிகளையும் தொட்டுச் செல்லுமாறு (உச்சிகளின் வழியே) வரையப்படும் வட்டம் சுற்றுவட்டம் எனப்படும்.



முக்கிய கருத்து **சுற்றுவட்டமையம்**

முக்கோணத்தின் பக்கங்களின் மையக்குத்துக் கோடுகள் சந்திக்கும் புள்ளி முக்கோணத்தின் சுற்றுவட்டமையம் *(Circumcentre)* எனப்படும். இதனை S என குறிப்போம்.



சுற்றுவட்ட ஆரம் *(Circumradius)*

சுற்றுவட்ட மையம் S-க்கும் முக்கோணத்தின் ஏதேனும் ஒரு உச்சிப்புள்ளிக்கும் இடையே உள்ள தூரம் சுற்றுவட்ட ஆரம் எனப்படும். அதாவது, சுற்றுவட்டத்தின் ஆரத்தை சுற்றுவட்ட ஆரம் என்போம்.

எடுத்துக்காட்டு 9.1

$AB = 5$ செமீ, $\angle A = 70^\circ$ மற்றும் $\angle B = 60^\circ$ அளவுள்ள ΔABC வரைக. அதன் சுற்று வட்டம் வரைந்து சுற்றுவட்ட ஆரம் காண்க.



உதவிப் படம்

தீர்வு

படி 1 : கொடுக்கப்பட்டுள்ள அளவிற்கு ΔABC வரைக.



படி 2 : ஏதேனும் இரண்டு பக்கங்களுக்கு (AC மற்றும் BC) மையக்குத்துக் கோடுகள் வரைக. அவை வெட்டிக்கொள்ளும் புள்ளி S என்பது சுற்றுவட்டமையம் ஆகும்.



படி 3 : S-ஐ மையமாகவும் $SA = SB = SC$ ஐ ஆரமாகவும் கொண்டு சுற்றுவட்டம் வரைந்தால் அது உச்சிகள் A, B மற்றும் C வழியே செல்லும்.



சுற்று வட்ட ஆரம் = 3. 2செமீ

குறிப்புரை

1. குறுங்கோண முக்கோணத்தின் சுற்றுவட்ட மையம் முக்கோணத்தின் உள்ளே அமையும்.
2. செங்கோண முக்கோணத்தின் சுற்றுவட்ட மையம் கர்ணத்தின் மையப்புள்ளி ஆகும்.
3. விரிகோண முக்கோணத்தின் சுற்றுவட்ட மையம் முக்கோணத்தின் வெளியே அமையும்.

பயிற்சி 9.1

1. $PQ = 5$ செமீ, $\angle P = 100^\circ$ மற்றும் $PR = 5$ செமீ அளவுள்ள ΔPQR வரைந்து அதன் சுற்றுவட்டம் வரைக.
2. சுற்றுவட்டம் வரைக:

   (i) சமபக்க முக்கோணத்தின் பக்க அளவு 6 செமீ.

   (ii) இருசமபக்க செங்கோண முக்கோணத்தின் சம பக்கங்களின் அளவு 5 செமீ.
3. $AB = 7$ செமீ, $BC = 8$ செமீ மற்றும் $\angle B = 60^\circ$ அளவுள்ள ΔABC வரைந்து சுற்றுவட்ட மையம் காண்க.
4. செங்கோண முக்கோணத்தின் பக்கங்கள் 4.5செமீ, 6செமீ மற்றும் 7.5செமீ ஆகும். அதன் சுற்றுவட்ட மையம் காண்க.

9.3.2 முக்கோணத்தின் குத்துக்கோட்டுமையம் வரைதல்

முக்கிய கருத்து **குத்துக்கோட்டு மையம்**

முக்கோணத்தின்குத்துக்கோடுகள் சந்திக்கும் புள்ளி குத்துக்கோட்டுமையம் அல்லது செங்கோட்டு மையம் (*Orthocentre*) எனப்படும். இதை H என்று குறிப்போம்.



எடுத்துக்காட்டு 9.2

$AB = 6$ செமீ, $BC = 4$ செமீ மற்றும் $AC = 5.5$ செமீ ஆகிய அளவுகளுக்கு ΔABC வரைந்து குத்துக்கோட்டு மையம் வரைக.



உதவிப் படம்

தீர்வு

படி 1 : கொடுக்கப்பட்டுள்ள அளவுகளுக்கு ΔABC வரைக



படி 2 : ஏதேனும் இரு புள்ளிகளிலிருந்து (A மற்றும் C) எதிரே உள்ள பக்கங்களுக்கு (முறையே BC மற்றும் AB) குத்துக்கோடுகள் வரைக.



இக்குத்துக்கோடுகள் வெட்டிக்கொள்ளும் புள்ளி H, ΔABC-ன் குத்துக்கோட்டு மையம் ஆகும்.

குறிப்புரை

1. ஒரு முக்கோணத்திற்கு மூன்று குத்துக்கோடுகள் வரைய முடியும்.
2. குறுங்கோண முக்கோணத்தில் குத்துக்கோட்டு மையம் முக்கோணத்தின் உள்ளே அமையும்.
3. செங்கோண முக்கோணத்தில் குத்துக்கோட்டு மையம் செங்கோணத்தின் உச்சிப் புள்ளி.
4. விரிகோண முக்கோணத்தில் குத்துக்கோட்டு மையம் முக்கோணத்திற்கு வெளியே அமையும்.

பயிற்சி 9.2

1. $AB = 8$ செ.மீ, $BC = 7$ செ.மீ மற்றும் $AC = 5$ செ.மீ என்ற அளவுள்ள ΔABC வரைந்து, அதன் குத்துக்கோட்டு மையம் காண்க.
2. $LM = 7$ செ.மீ, $\angle M = 130^\circ$ மற்றும் $MN = 6$ செ.மீ என்ற அளவுள்ள ΔLMN வரைந்து, அதன் குத்துக்கோட்டு மையம் காண்க.
3. 6 செ.மீ பக்க அளவுள்ள சமபக்க முக்கோணம் வரைந்து, அதன் குத்துக்கோட்டு மையம் காண்க.
4. $PQ = 4.5$ செ.மீ, $QR = 6$ செ.மீ மற்றும் $\angle Q = 90^\circ$ என்ற அளவுள்ள ΔPQR வரைந்து, அதன் குத்துக்கோட்டு மையத்தைக் குறி.
5. இருசமபக்க முக்கோணம் ABC-ல் சமபக்கங்களின் அளவு 6 செ.மீ, $AB = BC$ மற்றும் $\angle B = 80^\circ$ வரைந்து, அதன் குத்துக்கோட்டு மையத்தைக் குறி.

9.3.3 முக்கோணத்தின் உள்வட்ட மையம் வரைதல்

முக்கிய கருத்து **உள்வட்ட மையம்**

முக்கோணத்தின் கோணங்களின் இருசமவெட்டிகள் சந்திக்கும் புள்ளி உள்வட்ட மையம் *(Incentre)* எனப்படும். அதனை I என்று குறிப்பிடுவோம்.



உள்வட்டம்: உள்வட்ட மையத்தை (I) மையமாக வைத்து முக்கோணத்தின் அனைத்து பக்கங்களையும் உட்புறமாகத் தொட்டுச் செல்லுமாறு வரையப்படும் வட்டம் உள்வட்டம் *(Incircle)* எனப்படும்.



உள் ஆரம்: உள்வட்ட மையத்திலிருந்து முக்கோணத்தின் பக்கங்களுக்கு உள்ள செங்குத்துத்தூரம் உள் ஆரம் *(Inradius)* எனப்படும்.

எடுத்துக்காட்டு 9.3

$AB = 7$ செ.மீ, $\angle B = 50^\circ$ மற்றும் $BC = 6$ செ.மீ அளவுள்ள ΔABC வரைந்து அதன் உள்வட்டம் வரைக. மேலும் உள் ஆரத்தை அளந்து எழுது.



உதவிப் படம்

தீர்வு

படி 1 : கொடுக்கப்பட்டுள்ள அளவுகளுக்கு ΔABC வரைக.



படி 2 : ஏதேனும் இரு கோணங்களுக்கு கோண இருசமவெட்டிகள் வரைக. (இங்கு $\angle A$ மற்றும் $\angle B$ -ன் இருசமவெட்டிகள் வரையப்பட்டுள்ளன) அவை சந்திக்கும் புள்ளி I என்பது ΔABC -ன் உள்வட்ட மையம் ஆகும்.



படி 3 : I-ல் இருந்து ஏதேனும் ஒரு பக்கத்திற்கு (இங்கு AB) செங்குத்துக்கோடு வரைக. அக்கோடு AB ஐ சந்திக்கும் புள்ளி D ஆகும்.



படி 4 : I ஐ மையமாகவும் ID ஐ ஆரமாகவும் கொண்டு வட்டம் வரைக. இவ்வட்டமானது முக்கோணத்தின் அனைத்துப் பக்கங்களையும் உட்புறமாகத் தொட்டுச் செல்லும். இதுவே தேவையான உள்வட்டம் ஆகும்.



உள்வட்ட ஆரம் = 1.8 செ.மீ

குறிப்புரை எல்லா வகை முக்கோணங்களுக்கும் உள்வட்ட மையம் எப்போதும் முக்கோணத்தின் உள்ளே அமையும்.

பயிற்சி 9.3

1. $AB = 9$ செ.மீ, $BC = 7$ செ.மீ, மற்றும் $AC = 6$ செ.மீ அளவுள்ள ΔABC-க்கு உள்வட்டம் வரைக.
2. $AB = 6$ செ.மீ, $AC = 7$ செ.மீ மற்றும் $\angle A = 40^\circ$ அளவுள்ள ΔABC-க்கு உள்வட்டம் வரைந்து உள்வட்ட ஆரம் காண்க.
3. பக்க அளவு 6 செ.மீ உள்ள சமபக்க முக்கோணத்திற்கு உள்வட்டம் வரைக.
4. $AB = 6$ செ.மீ, $AC = 5$ செ.மீ மற்றும் $\angle A = 110^\circ$ அளவுள்ள ΔABC-க்கு உள்வட்டம் வரைந்து உள்வட்ட மையத்தைக் குறி.

9.3.4 முக்கோணத்தின் நடுக்கோட்டு மையம் வரைதல்

முக்கிய கருத்து	நடுக்கோட்டு மையம்
முக்கோணத்தின் நடுக்கோடுகள் சந்திக்கும் புள்ளி முக்கோணத்தின் நடுக்கோட்டு மையம் *(Centroid)* எனப்படும். இதனை G என்று குறிப்பிடுவோம்.	

எடுத்துக்காட்டு 9.4

$AB = 6$ செ.மீ, $BC = 7$ செ.மீ மற்றும் $AC = 5$ செ.மீ ஆகிய அளவுகளுக்கு ΔABC வரைந்து அதன் நடுக்கோட்டு மையம் வரைக.

தீர்வு



உதவிப் படம்

படி 1 : கொடுக்கப்பட்டுள்ள அளவுகளுக்கு ΔABC வரைக.



படி 2 : ஏதேனும் இரு பக்கங்களுக்கு மையக்குத்துக்கோடுகள் வரைக.

(இங்கு AC மற்றும் BC-க்கு மையக்குத்துக்கோடுகள் வரையப்பட்டுள்ளன)





படி 3 : அப்பக்கங்களின் மையப் புள்ளியை முறையே எதிர் உச்சியுடன் இணைக்கும் கோடுகள் வெட்டும் புள்ளி G என்க.

புள்ளி G ஆனது ΔABC-ன் நடுக்கோட்டு மையம் ஆகும்.

குறிப்புரை

(i) முக்கோணத்திற்கு மூன்று நடுக்கோடுகள் வரையலாம்.

(ii) நடுக்கோடுகளை நடுக்கோட்டு மையம் முனையிலிருந்து 2:1 என்ற விகிதத்தில் பிரிக்கும்.

(iii) அனைத்து வகை முக்கோணங்களிலும் நடுக்கோட்டு மையம் முக்கோணத்தின் உள்பகுதியில் அமையும்.

பயிற்சி 9.4

1. $AB = 6$ செ.மீ, $BC = 5$ செ.மீ மற்றும் AC = 4 செ.மீ அளவுகளுக்கு ΔABC வரைந்து நடுக்கோட்டு மையத்தைக் குறி.

2. $LM = 5.5$ செ.மீ, $\angle M = 100^o$ $MN = 6.5$ செ.மீ அளவுள்ள முக்கோணம் வரைந்து நடுக்கோட்டு மையத்தைக் குறி.

3. பக்கஅளவு 7.5 செ.மீ, உள்ள சமபக்க முக்கோணம் வரைந்து அதன் நடுக்கோட்டு மையத்தைக் காண்க.

4. பக்கஅளவுகள் 3 செ.மீ, 4 செ.மீ மற்றும் 5 செ.மீ உள்ள செங்கோண முக்கோணம் வரைந்து அதன் நடுக்கோட்டு மையத்தைக் காண்க.

5. $PQ = 6$ செ.மீ, $\angle P = 110^o$ மற்றும் $QR = 8$ செ.மீ அளவுகளுக்கு ΔPQRன் நடுக்கோட்டு மையத்தைக் குறி.

10 வரைபடங்கள்

A mathematical theory can be regarded as perfect only if you are prepared to present its contents to the first man in the street

– D.HILBERT

முக்கியக் குறிக்கோள்கள்

- வரைபடக் கருத்தினைப் புரிதல்
- நேரியச் சமன்பாட்டின் வரைபடம் வரைதல்
- இரு மாறிகளைக் கொண்ட நேரியச் சமன்பாடுகளின் தீர்வு காணல்

10.1 அறிமுகம்

வரைபடத்தின் அடிப்படைக் கருத்துக்களை இப்பாடப்பகுதி விளக்குகிறது. நாம் ஒவ்வொரு நாளும் செய்தித்தாள்கள், பத்திரிக்கைகள் மற்றும் புத்தகங்கள் போன்றவற்றில் வரைபடங்களைக் காண்கிறோம். வரைபடங்கள் பல்வேறு விவரமதிப்புகளை பட வடிவில் விளக்குகிறது. இதன் மூலம் விவரமதிப்புகளை விரைவாகவும், எளிதாகவும் மற்றும் தெளிவாகவும் புரிந்து கொள்ள முடிகிறது. இப்பாடப்பகுதியில் இரண்டு மாறிகளுக்கிடையே உள்ள தொடர்பினை வரைபடத்தில் குறிப்பிடவும், சமன்பாடுகளின் தீர்வினை வரைபடம் மூலம் பெறுவதையும் கற்போம்.

10.2 நேரிய வரைபடம் (*Linear Graph*)



$x - 2y = -2$ என்ற சமன்பாடு x, y என்ற இரு மாறிகளில் அமைந்த ஒரு நேரியச் சமன்பாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். $x_0 - 2y_0 = -2$ என்றவாறு உள்ள x_0, y_0 என்ற எண்களின் சோடி (x_0, y_0) ஆனது $x - 2y = -2$ என்ற சமன்பாட்டின் ஒரு தீர்வு ஆகும். இவ்வாறு சோடியின் முதல் எண் x_0 மற்றும் இரண்டாவது எண் y_0-க்கு குறிப்பிட்ட மதிப்புகள் கொடுப்பதன் மூலம் சமன்பாட்டின் எல்லாத் தீர்வுகளையும் எளிதாக காணமுடியும். தளத்தில் உள்ள இரு அச்சுக்களை பொறுத்து அமையும் $x - 2y = -2$ என்ற சமன்பாட்டின் தீர்வுகளான (x_0, y_0) ஆகிய புள்ளிகளின் தொகுப்பு $x - 2y = -2$ இன் வரைபடம் எனப்படும். பல்வேறு x_0 மற்றும் y_0 மதிப்புகளை $x - 2y = -2$ என்ற சமன்பாட்டின் தீர்வுகளாக கண்டு பெறப்படும் பல்வேறு சோடிகள் (x_0, y_0)-ஐ வரைபடத்தில் குறிப்பதன் மூலம் வரைபடத்தினை பற்றி நன்கு அறிந்து கொள்ளலாம். உதாரணமாக, மேலே கொடுக்கப்பட்டுள்ள

படம் $(-5,-1.5)$, $(-4,-1)$, $(-2, 0)$, $(0, 1)$, $(2, 2)$, $(4, 3)$ மற்றும் $(6, 4)$ ஆகிய புள்ளிகளைக் குறிக்கும் வரைபடமாகும்.

இப்புள்ளிகள் $x - 2y = -2$ என்ற சமன்பாட்டின் வரைபடம் ஒரு நேர்க்கோடாகும் என்பதை உணர்த்துகிறது.

இதிலிருந்து, இருமாறிகளில் அமைந்த ஒருபடிச் சமன்பாடு எப்போதும் ஒரு நேர்க்கோட்டை குறிக்கும் என அறியலாம். $ax + by + c = 0$ என்ற சமன்பாட்டை நேர்க்கோட்டின் பொதுவடிவமாக எடுத்துக்கொள்ளவேண்டும். இதில் a அல்லது b ஏதாவது ஒன்று பூச்சியமில்லாமல் இருக்கவேண்டும். வரைபடத்தாளில் நேர்க்கோட்டின் வரைபடம் எளிதாக வரைய நேர்க்கோட்டின் மற்றொரு எளிய அமைப்பான $y = mx + c$ யை பயன்படுத்துகிறோம். x-ன் ஒவ்வொரு மதிப்பிற்கும் $y = mx + c$ என்ற சமன்பாடானது y-ன் மதிப்பைக் கொடுப்பதால், நாம் (x, y) என்ற வரிசைப்படுத்தப்பட்ட சோடியைப் எளிதாகப் பெறுகிறோம்.

குறிப்பு

$ax + by + c = 0$ என்பது நேர்கோட்டின் பொது வடிவமாகும்

(i) $c = 0$ எனில் சமன்பாடு $ax + by = 0$ ஆகும். இக்கோடு ஆதி வழியே செல்லும்.

(ii) $a = 0$ எனில் சமன்பாடு $by + c = 0$ ஆகும். இக்கோடு x அச்சுக்கு இணையாக செல்லும்.

(iii) $b = 0$ எனில் சமன்பாடு $ax + c = 0$ ஆகும். இக்கோடு y அச்சுக்கு இணையாக செல்லும்.

10.2.1 நேரிய வரைபடம் வரையும் முறை

ஒரு சமன்பாட்டின் வரைபடத்தைக் காண x மற்றும் y-ன் மதிப்புகளை அட்டவணைப்படுத்த வேண்டும். x-ன் மூன்று மதிப்புகளைக் கொண்டு இவற்றிற்கான y-ன் மதிப்புகளைக் காண்போம். ஒரு கோடு வரைய இரண்டு புள்ளிகளே போதுமானது, எனினும், மூன்று புள்ளிகளை எடுத்துக்கொள்வதன் மூலம் நமது வரைபடம் சரியானது என்பதை உறுதி செய்ய இயலும்.

படி 1: சமன்பாட்டைக் கொண்டு x மற்றும் y-ன் மதிப்புகளை அட்டவணைப்படுத்துக.
படி 2: வரைபடத்தாளில் x அச்சு மற்றும் y அச்சினை வரைக.
படி 3: அச்சுக்களின் மீது தேவையான அளவுத்திட்டத்தினைக் குறிக்கவும்.
படி 4: வரைபடத்தாளில் புள்ளிகளைக் குறிக்கவும்.
படி 5: புள்ளிகளை இணைத்தும், நீட்டியும் கோட்டினை பெறவும்.

10.2.2 நேர்க்கோடு வரைதல்

எடுத்துக்காட்டு 10.1

$(3, 5)$ மற்றும் $(-5, 1)$ என்ற புள்ளிகளை இணைக்கும் நேர்க்கோட்டினை வரைக.

தீர்வு

1. 1 செ.மீ = 1 அலகு என்ற அளவுத்திட்டத்தில் x அச்சு மற்றும் y அச்சினை வரைக.
2. வரைபடத்தாளில் $(3, 5)$, $(-5, 1)$ என்ற கொடுக்கப்பட்ட இரண்டு புள்ளிகளை குறிக்க.
3. புள்ளிகளை இணைத்து கோட்டுத்துண்டு வரைந்து அதனை இரண்டு புறமும் நீட்டவும்.
4. நாம் தேவையான நேரிய வரைபடத்தைப் பெறுகிறோம்.



எடுத்துக்காட்டு 10.2

$y = 6x$-ன் வரைபடம் வரைக.

தீர்வு கொடுக்கப்பட்ட நேர்க்கோட்டுச் சமன்பாட்டில் $x = -1, 0, 1$ என்ற மதிப்புகளைப் பிரதியிட கீழ்க்காணும் y-ன் மதிப்புகளை பெறலாம்.

$y = 6x$			
x	-1	0	1
y	-6	0	6

$(-1, -6)$, $(0, 0)$ மற்றும் $(1, 6)$ என்ற புள்ளிகளை வரைபடத்தாளில் குறித்து அப்புள்ளிகள் வழிச்செல்லும் நேர்க்கோட்டினை வரையவும். இதுவே தேவையான நேர்க்கோட்டு வரைபடமாகும்.



எடுத்துக்காட்டு 10.3

$x = 5$-ன் வரைபடம் வரைக.

தீர்வு $x = 5$ என்ற கோடு y அச்சுக்கு இணையானது. இந்த கோட்டில் x ஒரு மாறிலி. மேலும், இக்கோட்டின் எந்த புள்ளியும் $(5, y)$ என்ற வடிவில் அமையும். எனவே $y = -2, 0, 2$ என எடுத்துக்கொள்ள நாம் $(5, -2)$, $(5, 0)$ மற்றும் $(5, 2)$ என்ற புள்ளிகளைப் பெறுகிறோம்.

$x = 5$			
x	5	5	5
y	-2	0	2

வரைபடத்தாளில், இப்புள்ளிகளைக் குறித்து அப்புள்ளிகள் வழிச்செல்லும் நேர்க்கோட்டினை வரையவும். ஆகவே நாம் நமக்கு தேவையான நேரிய வரைபடத்தைப் பெறுகிறோம்.



எடுத்துக்காட்டு 10.4

$y = -\frac{5}{3}x + 2$ என்ற நேர்க்கோட்டின் வரைபடம் வரைக.

தீர்வு நேர்க்கோட்டுச் சமன்பாட்டில் $x = -3, 0, 3$ எனப் பிரதியிட, கீழ்க்கண்டவாறு y-ன் மதிப்புகளை நாம் காண்கிறோம்.

$y = -\frac{5}{3}x + 2$			
x	-3	0	3
$-\frac{5}{3}x$	5	0	-5
$y = -\frac{5}{3}x + 2$	7	2	-3



$(-3, 7), (0, 2)$ மற்றும் $(3, -3)$ என்ற புள்ளிகளை வரைபடத்தாளில் குறித்து அப்புள்ளிகள் வழிச்செல்லும் நேர்க்கோட்டினை வரையவும். இதுவே $y = -\frac{5}{3}x + 2$ என்ற சமன்பாட்டின் நேர்க்கோட்டு வரைபடமாகும்.

எடுத்துக்காட்டு 10.5

$y = 4x - 1$-ன் வரைபடம் வரைக.

தீர்வு கொடுக்கப்பட்ட நேர்க்கோட்டுச் சமன்பாட்டில் $x = -1, 0, 1$ என பிரதியிட, கீழ்க்கண்டவாறு y-ன் மதிப்புகளை நாம் பெறுகிறோம்.



$y = 4x - 1$			
x	-1	0	1
$4x$	-4	0	4
$y = 4x-1$	-5	-1	3

$(-1, -5)$, $(0, -1)$ மற்றும் $(1, 3)$ என்ற புள்ளிகளை வரைபடத்தாளில் குறித்து அப்புள்ளிகள் வழிச்செல்லும் நேர்க்கோட்டினை வரையவும். நாம் இப்பொழுது தேவையான நேர்க்கோட்டு வரைபடத்தை பெறுகிறோம்.

எடுத்துக்காட்டு 10.6

$2x + 3y = 12$-ன் வரைபடம் வரைக.

தீர்வு முதலில் நாம் $2x + 3y = 12$ என்ற சமன்பாட்டை $y = mx + c$ என்ற வடிவில் எழுதுவோம்.

$2x + 3y = 12$ என்ற சமன்பாட்டிலிருந்து $y = -\frac{2}{3}x + 4$ எனக்கிடைக்கிறது.

மேற்கண்ட சமன்பாட்டில் $x = -3, 0, 3$ எனப் பிரதியிட, கீழ்க்கண்டவாறு y-ன் மதிப்புகளை நாம் பெறுகிறோம்.



$y = -\frac{2}{3}x + 4$			
x	-3	0	3
$-\frac{2}{3}x$	2	0	-2
$y=-\frac{2}{3}x + 4$	6	4	2

வரைபடத்தாளில் $(-3,6), (0,4)$ மற்றும் $(3,2)$ என்ற புள்ளிகளை குறித்து அப்புள்ளிகள் வழிச்செல்லும் நேர்க்கோட்டினை வரையவும். நாம் இப்பொழுது தேவையான வரைபடத்தை பெறுகிறோம்.

பயிற்சி 10.1

1. பின்வரும் புள்ளிகளை இணைக்கும் நேர்க்கோட்டு வரைபடம் வரைக.

(i) $(2, 3)$ மற்றும் $(-6, -5)$ (ii) $(-2, -4)$ மற்றும் $(-1, 6)$

(iii) $(5, -7)$ மற்றும் $(-1, 5)$ (iv) $(-3, 9)$ மற்றும் $(5, -6)$ (v) $(4, -5)$ மற்றும் $(6, 10)$

2. பின்வருவனவற்றிற்கு வரைபடம் வரைக.

(i) $y = 5$ (ii) $y = -6$ (iii) $x = 3$

(iv) $x = -5$ (v) $2x + 7 = 0$ (vi) $6 + 3y = 0$

3. பின்வருவனவற்றிற்கு வரைபடம் வரைக.

(i) $y = 4x$ (ii) $3x + y = 0$ (iii) $x = -2y$

(iv) $y - 3x = 0$ (v) $9y - 3x = 0$

4. பின்வரும் சமன்பாடுகளுக்கு நேர்க்கோட்டு வரைபடம் வரைக.

(i) $y = 3x + 1$ (ii) $4y = 8x + 2$ (iii) $y - 4x + 3 = 0$

(iv) $x = 3y + 3$ (v) $x + 2y - 6 = 0$ (vi) $x - 2y + 1 = 0$

(vii) $3x + 2y = 12$

5. பின்வருவனவற்றில் m மற்றும் c-ன் மதிப்புகளைக் கொண்டு $y = mx + c$ என்ற சமன்பாட்டிற்கான வரைபடம் வரைக.

(i) $m = 2$ மற்றும் $c = 3$ (ii) $m = -2$ மற்றும் $c = -2$ (iii) $m = -4$ மற்றும் $c = 1$

(iv) $m = 3$ மற்றும் $c = -4$ (v) $m = \frac{1}{2}$ மற்றும் $c = 3$ (vi) $m = \frac{-2}{3}$ மற்றும் $c = 2$

10.3 வரைபடங்களின் பயன்பாடு (*Application of Graphs*)

இரு மாறிகளின் ஒரு நேரியச் சமன்பாட்டுத் தொகுப்பு என்பது இரு மாறிகளாலான ஒன்றுக்கு மேற்பட்ட ஒரு படிச் சமன்பாடுகளின் தொகுப்பு ஆகும். அத்தொகுப்பில் உள்ள எல்லா சமன்பாடுகளையும் நிறைவு செய்யும் வரிசைப்படுத்தப்பட்ட சோடிகளின் கணம் அத்தொகுப்பின் தீர்வு ஆகும். இப்பாடப்பகுதியில் இரு மாறிகளாலான இரு நேரியச் சமன்பாடுகளின் தீர்வை வரைபடமுறையில் காண்பது பற்றி படிப்போம்.

இங்கே தீர்வானது மூன்று வகைகளில் நிகழலாம். அவை

(i) இரண்டு சமன்பாடுகளின் வரைபடமும் ஒன்றின் மீது ஒன்று அமைந்து ஒரே நேர்கோடாகலாம். இந்நிலையில் இச்சமன்பாடுகளுக்கு எண்ணற்ற தீர்வுகள் உண்டு.

(ii) இரு சமன்பாடுகளின் வரைபடங்களும் ஒன்றையொன்று எங்கும் சந்திக்காமல் இணையாக இருக்கலாம். இணையானவை என்பதால் இதற்கு பொதுவான புள்ளிகள் கிடையாது. ஆகவே, இச்சமன்பாடுகளுக்குத் தீர்வுகள் கிடையாது.

(iii) இரு சமன்பாடுகளின் வரைபடங்களும் ஒரே ஒரு புள்ளியில் மட்டும் வெட்டிக் கொள்ளலாம். ஆகவே, இச்சமன்பாடுகள் ஒரே ஒரு தீர்வை மட்டும் கொண்டுள்ளன.

எடுத்துக்காட்டு 10.7

$x + 2y = 4;\ 2x + 4y = 8$ என்ற சமன்பாடுகளை வரைபடம் மூலம் தீர்க்க.

தீர்வு ஒவ்வொரு சமன்பாட்டிற்கும் மூன்று புள்ளிகளைக் காண, x-க்கு மூன்று மதிப்புகளைப் பிரதியிட்டு அதற்குரிய y-ன் மதிப்புகளைப் பெறுகிறோம். நாம் பெறும் மதிப்புகளை அட்டவணைப்படுத்துவோம்.

கோடு 1: $x + 2y = 4$

$$2y = -x + 4 \implies y = -\frac{x}{2} + 2$$

மேற்காணும் சமன்பாட்டில் $x = -2, 0, 2$ எனப் பிரதியிட, நாம் அதற்குரிய y-ன் மதிப்புகளைப் பெறுகிறோம்.

$y = -\frac{x}{2} + 2$			
x	-2	0	2
$-\frac{x}{2}$	1	0	-1
$y = -\frac{x}{2} + 2$	3	2	1

கோடு 2: $2x + 4y = 8$

$$4y = -2x + 8 \implies y = -\frac{x}{2} + 2$$

மேற்காணும் சமன்பாட்டில் $x = -4, 0, 4$ என பிரதியிட, நாம் பெறும் y மதிப்புகள் பின்வருமாறு

$y = -\frac{x}{2} + 2$			
x	-4	0	4
$-\frac{x}{2}$	2	0	-2
$y = -\frac{x}{2} + 2$	4	2	0



நாம் புள்ளிகளை வரைபடத்தாளில் குறித்து நேர்கோடுகள் வரைவோம். இரண்டு கோடுகளும் ஒன்றன் மீது ஒன்று அமைவதைக் காணலாம். ஒரு கோட்டின் மீது உள்ள எந்த ஒரு புள்ளியும் மற்றொரு கோட்டின் மீதும் அமையும். எனவே, இரு சமன்பாடுகளுக்கும் எண்ணற்ற பொதுவான புள்ளிகள் உண்டு. அதாவது, கோட்டின் மீதுள்ள ஒவ்வொரு புள்ளியும் தீர்வாகும். ஆகவே, சமன்பாடுகளுக்கு எண்ணற்ற தீர்வுகள் உண்டு.

எடுத்துக்காட்டு 10.8

வரைபட முறையில் தீர்: $x - 3y = 6;\ x - 3y + 9 = 0$

தீர்வு ஒவ்வொரு சமன்பாட்டிற்கும் மூன்று புள்ளிகளைக் காண, x-க்கு மூன்று மதிப்புகளைப் பிரதியிட்டு அதற்குரிய y-ன் மதிப்புகளைப் பெறுகிறோம். நாம் பெறும் மதிப்புகளை அட்டவணைப்படுத்துவோம்.

கோடு 1: $x - 3y = 6$

$$3y = x - 6 \Longrightarrow y = \frac{x}{3} - 2$$

மேற்காணும் சமன்பாட்டில் $x = -3, 0, 3$ என பிரதியிட, நாம் பெறும் y-ன் மதிப்புகள் பின்வருமாறு

$y = \frac{x}{3} - 2$			
x	-3	0	3
$\frac{x}{3}$	-1	0	1
$y = \frac{x}{3} - 2$	-3	-2	-1



கோடு 2: $x - 3y + 9 = 0$

$$3y = x + 9$$

$$y = \frac{x}{3} + 3$$

மேற்காணும் சமன்பாட்டில் $x = -3, 0, 3$ என பிரதியிட, நாம் பெறும் y-ன் மதிப்புகள் பின்வருமாறு

$y = \frac{x}{3} + 3$			
x	-3	0	3
$\frac{x}{3}$	-1	0	1
$y = \frac{x}{3} + 3$	2	3	4

முதலில் $(-3, -3)$ $(0, -2)$ மற்றும் $(3, -1)$ என்ற புள்ளிகளை வரைபடத்தாளில் குறித்து அப்புள்ளிகள் வழியாக நேர்க்கோடு வரைக. பின்பு $(-3, 2)$ $(0, 3)$ மற்றும் $(3, 4)$ என்ற புள்ளிகளை அதே வரைபடத்தாளில் குறித்து அப்புள்ளிகள் வழியாகவும் நேர்க்கோடு வரைக. இரண்டு கோடுகளும் இணையாக இருப்பதைக் காணலாம். இரண்டு கோடுகளுக்கும் பொதுவான புள்ளிகள் இல்லை. ஆகவே, இச்சமன்பாடுகளுக்குத் தீர்வுகள் ஏதும் இல்லை.

எடுத்துக்காட்டு 10.9

$2x - y = 1; x + 2y = 8$ என்ற சமன்பாடுகளை வரைபடமுறையில் தீர்க்க.

தீர்வு ஒவ்வொரு சமன்பாட்டிற்கும் மூன்று புள்ளிகளைக் காண, x-க்கு மூன்று மதிப்புகளைப் பிரதியிட்டு அதற்குரிய y-ன் மதிப்புகளைப் பெறுவோம். நாம் பெறும் மதிப்புகளை அட்டவணைப்படுத்துவோம்.

கோடு 1: $2x - y = 1$

$$y = 2x - 1$$

மேற்காணும் சமன்பாட்டில் $x = -1, 0, 1$ எனப் பிரதியிட, நாம் பெறும் y-ன் மதிப்புகள்

$y = 2x - 1$			
x	-1	0	1
$2x$	-2	0	2
$y = 2x - 1$	-3	-1	1

கோடு 2: $x + 2y = 8$

$$2y = -x + 8 \implies y = -\frac{x}{2} + 4$$

மேற்காணும் சமன்பாட்டில் $x = -2, 0, 2$ எனப் பிரதியிட, நாம் பெறும் y-ன் மதிப்புகள்

$y = -\frac{x}{2} + 4$			
x	-2	0	2
$-\frac{x}{2}$	1	0	-1
$y = -\frac{x}{2} + 4$	5	4	3



முதலில் $(-1, -3)$, $(0, -1)$ மற்றும் $(1, 1)$ என்ற புள்ளிகளை வரைபடத்தாளில் குறித்து அப்புள்ளிகள் வழியாக நேர்கோடு வரைக. பின்பு $(-2, 5)$, $(0, 4)$ மற்றும் $(2, 3)$ என்ற புள்ளிகளை அதே வரைபடத்தாளில் குறித்து அப்புள்ளிகள் வழியாகவும் நேர்க்கோடு வரைக. இரண்டு கோடுகளும் $(2, 3)$ என்ற ஒரே ஒரு புள்ளியில் மட்டும் வெட்டிக்கொள்வதைக் காணலாம். ஆகவே, இச்சமன்பாடுகளுக்கு ஒரே ஒரு தீர்வு உண்டு. அத்தீர்வு $x=2$, $y=3$. அதாவது, தீர்வு $(2, 3)$.

பயிற்சி 10.2

பின்வரும் சமன்பாடுகளை வரைபட முறையில் தீர்.

1. $3x - y = 0;\ x - 2 = 0$
2. $2x + y = 4;\ 4x + 2y = 8$
3. $2x = y + 1;\ x + 2y - 8 = 0$
4. $x + y = 5;\ x - y = 1$
5. $x - 2y = 6;\ x - 2y = -6$
6. $4x - y - 5 = 0;\ x + y - 5 = 0$
7. $3x + 2y = 4;\ 9x + 6y - 12 = 0$
8. $y = 2x + 1;\ y + 3x - 6 = 0$
9. $y - 2x + 2 = 0;\ y = 4x - 4$
10. $x - y = 0;\ y + 3 = 0$
11. $2x - 4 = 0;\ 4x + y + 4 = 0$
12. $\frac{x}{2} + \frac{y}{4} = 1;\ \frac{x}{2} + \frac{y}{4} = 2$

11 புள்ளியியல்

"Statistical thinking today is as necessary for efficient citizenship as the ability to read and write"

Herbert. G. Wells

முதன்மைக் குறிக்கோள்கள்

- நிகழ்வெண் செவ்வகம் மற்றும் நிகழ்வெண் பலகோணம் வரைதல்
- மையப்போக்கு அளவைகளான கூட்டுச்சராசரி, இடைநிலை மற்றும் முகடு ஆகியவற்றைக் கண்டு பிடித்தல்

11.1 அறிமுகம்

புள்ளியியல் என்பது விவரங்களை சேகரித்து, பாகுபடுத்திப் பட்டியலிட்டு, ஆய்வு செய்து பின் அவ்விவரங்களுக்கு விளக்கம் காண்பதன் மூலம் பிரச்சனைகளுக்கு முடிவு காண்பதற்கு உதவுகின்றது. முதல்நிலை புள்ளிவிவரங்கள் மற்றும் இரண்டாம்நிலை புள்ளிவிவரங்கள் எவ்வாறு சேகரிக்கப்படுகின்றன என்பது பற்றி நாம் முந்தைய வகுப்புகளில் படித்துள்ளோம். அவ்வாறு பெறப்பட்ட புள்ளிவிவரங்கள் அதிகமான விவரங்களை கொண்டதாக இருப்பின், அந்த விவரங்களை ஆய்வு செய்து விளக்கம் காண்பதற்கு முன்பாக பகுத்து, பட்டியலிட வேண்டும்.

ஒரு சில ஆய்வுகளின் போது, பாகுபடுத்தி பட்டியலிடுவதன் மூலமாகவே, அந்த புள்ளி விவரங்கள் பற்றிய தெளிவான விளக்கமும் அதன் முக்கியத்துவமும் தெரியவரும். இவ்வகையில் அளிக்கப்படும் புள்ளிவிவரங்கள் ஒரு சராசரி மனிதனுக்கு ஆர்வம் ஊட்டுவதாகவும், புரியும்படியாகவும் இருத்தல் வேண்டும். எனவே, அப்புள்ளிவிவரங்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ளும் வகையிலும் மேலும் ஆர்வத்தை தூண்டும் வகையிலும் உள்ளதாக அமைய, அதனை ஒரு விளக்கப் படம் மூலமாகவோ அல்லது ஒரு வரைபடம் மூலமாகவோ அளிப்பது சிறந்தது.

11.2 நிகழ்வெண் பரவலின் வரைபட வடிவம்

"ஒரு படம் ஆயிரம் வார்த்தைகளுக்கு சமம்" என்பதற்கிணங்க புள்ளியியல் வல்லுனர்கள், புள்ளிவிவரங்களைத் தெளிவாக விவரிக்க வரைபடங்களையும் அதன் நுணுக்கங்களையும் நன்கு பயன்படுத்தினார்கள். குறிப்பாக நிகழ்வெண் பரவலாகவோ அல்லது சதவீத பரவலாகவோ தொகுக்கப்பட்ட புள்ளிவிவரங்களை விவரிக்க நிகழ்வெண் செவ்வகம் மற்றும் நிகழ்வெண் பலகோணம் ஆகியன பயன்படுத்தபடுகின்றன.

நிகழ்வெண் பரவல் என்பது பிரிவுகள் மற்றும் நிகழ்வெண்களைப் பயன்படுத்தி, வகைப்படுத்தப்படாத புள்ளிவிவரங்களைப் பகுத்து பட்டியலிடுதல் ஆகும். ஒரு நிகழ்வெண் பரவலை பின் வரும் நான்கு வழிகளில் வரைபடம் மூலம் குறிப்பிடலாம்.

(i) நிகழ்வெண் செவ்வகம் (Histogram)

(ii) நிகழ்வெண் பலகோணம் (Frequency Polygon)

(iii) நிகழ்வெண் வளைகோடு (Smoothened frequency curve)

(iv) குவிவு நிகழ்வெண் கோடுகள். (Ogive or Cumulative frequency curve)

இந்த அத்தியாயத்தில் முதல் இரண்டு வகை வரைபடங்களைப் பற்றி பார்ப்போம். மற்ற இரண்டும் மேல் வகுப்புகளில் அறிந்து கொள்வோம்.

11.2.1 நிகழ்வெண் செவ்வகம் (Histogram)

நிகழ்வெண் பரவலை விவரிக்க பயன்படும் பலவிதமான வரைபட முறைகளில் அதிகம் பேசப்படுவதும் பலராலும் பயன்படுத்தப்படுவதும் நிகழ்வெண் செவ்வகம் ஆகும். நிகழ்வெண் செவ்வகம் என்பது ஒரு தொடர்நிகழ்வெண் பரவலை இரு பரிமாண வரைபடமாக மாற்றிக் காட்டுவதாகும். நிகழ்வெண் செவ்வகத்தில், நிகழ்வெண் பரவலின் பிரிவு இடைவெளிகளை அகலமாகவும் அப்பிரிவுகளின் நிகழ்வெண்களை நீளமாகவும் கொண்டு செவ்வகங்கள் வரையப்படுகின்றன. இச்செவ்வகங்களின் பரப்பு அந்தந்த நிகழ்வெண்களுக்கு நேர் விகிதத்தில் இருக்கும்.

சமமான பிரிவு இடைவெளிகளைக் கொண்டு நிகழ்வெண் செவ்வகம் வரைய செய்ய வேண்டியன:

1. பிரிவுகளை x-அச்சிலும், நிகழ்வெண்களை y-அச்சிலும் குறிக்க வேண்டும்.
2. இரு அச்சுகளிலும் அலகுகள் ஒன்றாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.
3. பிரிவுகள் விலக்கும் பிரிவுகளாக (Exclusive Intervals) இருத்தல் அவசியம். பிரிவுகள் உள்ளடக்கும் பிரிவுகளாக (Inclusive Intervals) இருந்தால் விலக்கும் பிரிவுகளாக மாற்றப்பட வேண்டும்.
4. பிரிவு இடைவெளிகளை அகலமாகவும், அப்பிரிவுகளின் நிகழ்வெண்களை நீளமாகவும் கொண்டு செவ்வகங்கள் வரையவேண்டும். இவ்வாறு ஒவ்வொரு பிரிவு இடைவெளியின் மேலும் ஒரு செவ்வகம் அமைக்கவேண்டும்.

குறிப்புரை

நிகழ்வெண் செவ்வகமானது பட்டை விளக்கபடங்களை போன்று இருக்கும். எனினும்,நிகழ்வெண் செவ்வகம்,நிகழ்வெண் பரவலின் பிரிவு இடைவெளியையும் அதன் நிகழ்வெண்களையும் பயன்படுத்தி வரையப்படுகின்றன. ஆனால், பட்டை விளக்கபடங்களில், புள்ளி விவரங்களின் வகைகளையும், அந்தந்த வகைக்கான நிகழ்வெண்களையும் பயன்படுத்தி வரையப்படுகின்றன. தொடர்புள்ளி விவரங்களுக்கு மட்டுமே நிகழ்வெண் செவ்வகம் வரைய முடியும்.

11.2.2 நிகழ்வெண் பலகோணம் (Frequency Polygon)

நிகழ்வெண் பலகோணத்தில் ஒவ்வொரு பிரிவின் நடுப்புள்ளியும், அப்பிரிவில் உள்ள புள்ளிவிவரங்களுக்கு பதிலாகப் பயன்படுத்தப் படுகின்றன. பிரிவுகளின் நடுப்புள்ளிகளை x-அச்சிலும் நிகழ்வெண்களை y-அச்சிலும் எடுத்துக்கொண்டு, அதன்மூலம் குறிக்கப்படும் புள்ளிகளை இணைப்பதன் மூலம் நிகழ்வெண் பலகோணம் பெறப்படுகின்றது. நிகழ்வெண் பலகோணத்தின் இரண்டு கடைக்கோடுகள் பிரிவு இடைவெளியில் பாதி அளவு தூரத்தில், கடைப்புள்ளிகளுக்கு (Extreme points) வெளிப்புறம் x-அச்சினை தொடுமாறு அமைக்கப்பட வேண்டும்.

நிகழ்வெண் செவ்வகம் மற்றும் நிகழ்வெண் பலகோணம் இரண்டும் வரையப்பட வேண்டுமெனில், முதலில் நிகழ்வெண் செவ்வகம் வரைந்து கொள்ளவேண்டும். பின்பு செவ்வகங்களின் மேற்பகுதிகளின் நடுப்புள்ளிகளை இணைப்பதன் மூலம் நிகழ்வெண் பலகோணத்தை வரைய முடியும்.

குறிப்புரை

நிகழ்வெண் பலகோணம் வரைய, நிகழ்வெண் செவ்வகம் ஒரு வழிகாட்டியாக முதலில் வரையப்படுகின்றது.

எடுத்துக்காட்டு 11.1

பின்வரும் புள்ளி விவரங்களுக்கான நிகழ்வெண் செவ்வகம் மற்றும் நிகழ்வெண் பலகோணம் வரைக.

மதிப்பெண்கள்	10-20	20-30	30-40	40-50	50-60	60-70	70-80	80-90	90-100
மாணவர்களின் எண்ணிக்கை	12	22	35	40	60	52	40	30	5

தீர்வு முதலில் நிகழ்வெண் செவ்வகம் வரையப்பட்டு பின்பு, அடுத்தடுத்த செவ்வகங்களின் மேற்பக்கங்களின் நடுப்புள்ளிகளை இணைப்பதால் நிகழ்வெண் பலகோணம் பெறப்படுகின்றது.

நிகழ்வெண் செவ்வகம் மற்றும் நிகழ்வெண் பலகோணம்



மேற்கண்ட எடுத்துக்காட்டில், பிரிவுகள் விலக்கும் பிரிவுகளாக உள்ளன. தற்போது உள்ளடக்கும் பிரிவுகளைக் கொண்ட ஓர் எடுத்துக்காட்டை எடுத்துக்கொள்வோம்.

எடுத்துக்காட்டு 11.2

ஒரு சிறிய தொழிற்கூடத்தில் வேலை செய்யும் 50 தொழிலாளர்களிடம், அவர்கள் ஒவ்வொருவரும் வேலைக்காக எத்தனை கிலோ மீட்டர் தொலைவு வந்து செல்கிறார்கள் என்ற கணக்கெடுப்பு நடத்தப்பட்டதில் கீழ்கண்ட விவரங்கள் பெறப்பட்டன. இவ்விவரங்களுக்கு ஒரு நிகழ்வெண் செவ்வகம் மற்றும் நிகழ்வெண் பலகோணம் அமைக்கவும்.

தூரம் (கி.மீ)	50-59	40-49	30-39	20-29	10-19
தொழிலாளர்களின் எண்ணிக்கை	4	5	9	18	14

தீர்வு கொடுக்கப்பட்டிருக்கும் பட்டியலின் பிரிவுகள் உள்ளடக்கும் பிரிவுகளாகவும், தொடர்ச்சியாக அமையாமலும் உள்ளன. அதனால், அப்பிரிவுகள் விலக்கும் பிரிவுகளாக மாற்றப்பட்டு, ஏறுவரிசையில் அமைக்கப்பட்டுள்ளன.

தூரம் (கி. மீ)	9.5-19.5	19.5-29.5	29.5-39.5	39.5-49.5	49.5-59.5
தொழிலாளர்களின் எண்ணிக்கை	14	18	9	5	4

நிகழ்வெண் செவ்வகம் மற்றும் நிகழ்வெண் பலகோணம்



குறிப்பு

(i) பிரிவுகள் தொடர் இடைவெளிகளாக மாற்றப்பட்டு பின்பு நிகழ்வெண் செவ்வகம் அமைக்கவேண்டும்.

(ii) x-அச்சில் அளவுகள் ஆதிப்புள்ளியில் இருந்து தொடங்காவிடில், ஆதிப்புள்ளிக்கு அருகில் குறுக்குக் கோடுகளால் (Zig-zag Curve) குறிப்பிடப்பட வேண்டும்.

11.2.3 மாறுபட்ட பிரிவு இடைவெளிகளைக் கொண்ட நிகழ்வெண் பரவலின் நிகழ்வெண் செவ்வகம்

கீழ்க்காணும் நிகழ்வெண் பரவலை எடுத்துக் கொள்வோம்:

நேரம் (வினாடிகள்)	40-60	60-70	70-80	80-85	85-90	90-120
நிகழ்வெண்	100	60	90	70	60	90

இங்கு, பெரிய நிகழ்வெண்ணை பெற்றுள்ளதால் பிரிவு இடைவெளி 40-60 அதிக முக்கியத்துவம் வாய்ந்தது போல் தோன்றுகிறது. ஆனால், நிகழ்வெண் 100-க்கான பிரிவுஇடைவெளியின் அளவு 20 ஆகும். அதே சமயம் பிரிவுஇடைவெளி 80-85 க்கான நிகழ்வெண் 70 ஆக இருந்தாலும் அதன் அளவு 5 வினாடிகள் மட்டுமே. எனவே, நிகழ்வெண் செவ்வகம் வரையும் முன்பு ஒவ்வொரு பிரிவுஇடைவெளியின் அளவையும் (நீளத்தையும்) கணக்கில் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லையெனில் அந்நிகழ்வெண் செவ்வகம், கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களை சரியான முறையில் விவரிப்பதாக அமையாது. இதனை சரிசெய்ய, பிரிவுஇடைவெளிகள் மற்றும் அதன் நிகழ்வெண்களைப் பொறுத்து, செவ்வகங்களின் நீளங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

செவ்வகத்தின் மாற்றியமைக்கப்பட்ட நீளங்கள் நிகழ்வெண் அடர்த்தியை காண்பதன் மூலம் கணக்கிடப்படுகின்றது.

நிகழ்வெண் அடர்த்தி : நிகழ்வெண்களை அதன் பிரிவுஇடைவெளியின் அளவைக் கொண்டு வகுக்கும் போது நிகழ்வெண் அடர்த்தி கிடைக்கின்றது.

முக்கிய கருத்து

நிகழ்வெண் அடர்த்தி = நிகழ்வெண் $\div$ பிரிவுஇடைவெளியின் அளவு

கொடுக்கப்பட்ட நிகழ்வெண் பரவலில், C என்பது மிகச்சிறிய பிரிவு இடைவெளியின் நீளம் எனக்கொண்டால், செவ்வகத்தின் மாற்றியமைக்கப்பட்ட நீளம் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படும்.

$$\text{மாற்றியமைக்கப்பட்ட நீளம்} = \frac{\text{நிகழ்வெண்}}{\text{அதன் பிரிவு இடைவெளியின் அளவு}} \times C$$

நேரம் (வினாடிகள்)	40-60	60-70	70-80	80-85	85-90	90-120
நிகழ்வெண்	100	60	90	70	60	90
பிரிவு இடைவெளியின் அளவு	20	10	10	5	5	30
செவ்வகத்தின் நீளம்	$\frac{100}{20}\times 5 = 25$	$\frac{60}{10}\times 5 = 30$	$\frac{90}{10}\times 5 = 45$	$\frac{70}{5}\times 5 = 70$	$\frac{60}{5}\times 5 = 60$	$\frac{90}{30}\times 5 = 15$



எடுத்துக்காட்டு 11.3

பின்வரும் புள்ளி விவரங்களுக்கான நிகழ்வெண் செவ்வகத்தை வரையவும்.

மதிப்பெண்	0-10	10-20	20-40	40-50	50-60	60-70	70-90	90-100
மாணவர்களின் எண்ணிக்கை	4	6	14	16	14	8	16	5

தீர்வு இப்புள்ளி விவரத்தின் மிகச்சிறிய பிரிவு இடைவெளியின் நீளம் 10. மாறுபட்ட பிரிவு இடைவெளிகளைக் கொண்ட இப்புள்ளி விவரத்திற்கு நிகழ்வெண் செவ்வகம் வரைய செவ்வகத்தின் நீளங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

$$\text{நிகழ்வெண் அடர்த்தி} = \frac{\text{நிகழ்வெண்}}{\text{நிகழ்வெண்ணின் பிரிவு இடைவெளியின் நீளம்}}.$$

செவ்வகத்தின் நீளம் = நிகழ்வெண் அடர்த்தி $\times 10$

மதிப்பெண்கள்	0-10	10-20	20-40	40-50	50-60	60-70	70-90	90-100
மாணவர்களின் எண்ணிக்கை	4	6	14	16	14	8	16	5
பிரிவு இடை–வெளியின் நீளம்	10	10	20	10	10	10	20	10
செவ்வகத்தின் நீளம்	$\frac{4}{10}\times 10 = 4$	$\frac{6}{10}\times 10 = 6$	$\frac{14}{20}\times 10 = 7$	$\frac{16}{10}\times 10 = 16$	$\frac{14}{10}\times 10 = 14$	$\frac{8}{10}\times 10 = 8$	$\frac{16}{20}\times 10 = 8$	$\frac{5}{10}\times 10 = 5$

மாறுபட்ட பிரிவு இடைவெளிகளைக் கொண்ட நிகழ்வெண் செவ்வகம்



பயிற்சி 11.1

1. பின்வரும் பரவலுக்கு நிகழ்வெண் செவ்வகத்தை வரைக.

பிரிவுகள்	0-10	10-30	30-45	45-50	50-60
நிகழ்வெண்	8	28	18	6	10

2. ஒரு தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் மாதச்சம்பளம் பற்றிய கீழ்க்காணும் புள்ளி விவரங்களுக்கு ஒரு நிகழ்வெண் செவ்வகம் வரைக.

மாதச் சம்பளம் (₹)	2000 - 2200	2200 - 2400	2400 - 2800	2800 - 3000	3000 - 3200	3200 - 3600
தொழிலாளர்களின் எண்ணிக்கை	25	30	50	60	15	10

3. பின்வரும் பரவலில் 48 பொருட்களின் அடர்த்தி கிராமில் கொடுக்கப்பட்டுள்ளது. இப்புள்ளி விவரங்களை விளக்குவதற்கு ஒரு நிகழ்வெண் செவ்வகம் வரையவும்.

அடர்த்தி (கிராம்)	10-19	20-24	25-34	35-49	50-54
பொருட்களின் எண்ணிக்கை	6	4	12	18	8

4. பின்வரும் புள்ளி விவரங்களுக்கு ஒரு நிகழ்வெண் செவ்வகம் வரைக.

பிரிவு இடைவெளி	10-14	14-20	20-32	32-52	52-80
நிகழ்வெண்	5	6	9	25	21

5. ஒரு குறிப்பிட்ட நாளில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 360 நோயாளிகளின் வயது (வருடங்களில்) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வயது (வருடங்களில்)	10-20	20-30	30-50	50-60	60-70
நோயாளிகளின் எண்ணிக்கை	80	50	80	120	30

மேற்கண்ட புள்ளி விவரத்திற்கான நிகழ்வெண் செவ்வகம் வரைக.

மையப்போக்கு அளவைகள் (Measures of Central Tendency)

புள்ளியியல் ஆய்வின் முக்கிய நோக்கங்களில் ஒன்று கொடுக்கப்பட்ட மொத்த விவரத்தின் தன்மைகள் மற்றும் சிறப்பியல்புகளை ஒரு குறிப்பிட்ட தனி எண்ணால் குறிப்பதாகும். அத்தகைய எண் அப்புள்ளி விவரத்தின் மைய மதிப்பு அளவு அல்லது மையப்போக்கு அளவு என்று அழைக்கப்படுகின்றது. கூட்டு சராசரி, இடைநிலைஅளவு, முகடு ஆகியன பொதுவாக அதிகமாகப் பயன்படும் மையப்போக்கு அளவைகள் ஆகும்

11.3 சராசரி (Mean)

11.3.1 கூட்டுச் சராசரி – வகைப்படுத்தப்படாத புள்ளி விவரம்.

கொடுக்கப்பட்டுள்ள மதிப்புகளின் கூட்டுத் தொகையை மொத்த மதிப்புகளின் எண்ணிக்கையால் வகுக்க கிடைக்கும் எண் அந்த மதிப்புகளின் கூட்டுச் சராசரி (Arithmetic Mean) ஆகும். கூட்டுச் சராசரி $\overline{x}$ என குறிக்கப்படும்.

$$\overline{x} = \frac{x_1 + x_2 + \cdots + x_n}{n} \text{ அல்லது } \overline{x} = \frac{1}{n}\sum_{i=1}^{n} x_i \text{ அல்லது } \overline{x} = \frac{\sum x}{n}$$

குறிப்புரை $\overline{x} = \frac{\sum x}{n} \implies n\overline{x} = \sum x$ அதாவது,

மொத்த மதிப்புகளின் எண்ணிக்கை $\times$ சராசரி = மதிப்புகளின் கூட்டுத் தொகை

சராசரி 4 அடி ஆழம் உள்ள ஆற்றை நீச்சல் தெரியாத 5 அடி உயரம் உள்ள மனிதன் கடந்து எதிர் கரைக்கு செல்ல முடியுமா?

நினைவுக்கூர்ந்து விடையளி

எடுத்துக்காட்டு 11.4

ஒரு மாணவன் முழு ஆண்டுத் தேர்வில் 5 பாடங்களில் எடுத்த மதிப்பெண்கள் 72, 73, 75, 82, 74 எனில், சராசரி மதிப்பெண் காண்க.

தீர்வு ஐந்து பாடங்களில் வாங்கிய மதிப்பெண்கள் 72, 73, 75, 82, 74. இங்கு $n = 5$

$$\overline{x} = \frac{\sum x}{n} = \frac{72+73+75+82+74}{5} = \frac{376}{5} = 75.2$$

எனவே, சராசரி $= 75.2$

எடுத்துக்காட்டு 11.5

5 எண்களின் சராசரி 32. அவ்வெண்களில் ஒன்றை நீக்கும்போது, சராசரியில் 4 குறைந்தால் நீக்கப்பட்ட எண்ணை காணவும்.

தீர்வு

5 எண்களின் சராசரி $= 32.$

5 எண்களின் கூட்டுத்தொகை $= 32 \times 5 = 160$ $\qquad (\because n\overline{x} = \sum x)$

4 எண்களின் சராசரி $= 32 - 4 = 28$

4 எண்களின் கூட்டுத்தொகை $= 28 \times 4 = 112$

தவிர்க்கப்பட்ட எண் = (5 எண்களின் கூட்டுத் தொகை) − (4 எண்களின் கூட்டுத் தொகை)

$= 160 - 112 = 48$

11.3.2 சராசரி – வகைப்படுத்தப்படாத நிகழ்வெண் பரவல்

$x_1, x_2, x_3 \ldots x_n$ ஆகிய உறுப்புகளின் நிகழ்வெண்கள் முறையே $f_1, f_2, f_3 \ldots f_n$ எனில், சராசரி

$$\overline{x} = \frac{f_1x_1 + f_2x_2 + \cdots + f_nx_n}{f_1 + f_2 + \cdots + f_n} = \frac{\sum_{i=1}^{n} f_i x_i}{\sum_{i=1}^{n} f_i}$$ என வரையறுக்கப்படுகிறது.

மேற்கண்ட சூத்திரம் $\overline{x} = \dfrac{\sum fx}{\sum f}$ என்றும் எழுதப்படும்.

எடுத்துக்காட்டு 11.6

பின்வரும் புள்ளி விவரத்திற்கான சராசரியைக் காண்க.

x	5	10	15	20	25
f	3	10	25	7	5

தீர்வு

x	f	fx
5	3	15
10	10	100
15	25	375
20	7	140
25	5	125
	$\sum f = 50$	$\sum fx = 755$

சராசரி $= \dfrac{\sum fx}{\sum f} = \dfrac{755}{50} = 15.1$

சராசரி $= 15.1$

11.3.3 சராசரி – வகைப்படுத்தப்பட்ட நிகழ்வெண் பரவல்

பின்வரும் நிகழ்வெண் பட்டியலை எடுத்துக்கொள்வோம்.

பிரிவு இடைவெளி (மதிப்பெண்கள்)	0-10	10-20	20-30	30-40	40-50
நிகழ்வெண் (மாணவர்களின் எண்ணிக்கை)	3	4	3	7	8

பட்டியலின் முதல் பிரிவிலிருந்து 3 மாணவர்கள் 10 மதிப்பெண்களுக்கு குறைவாக பெற்றிருப்பதாகத் தெரிகின்றது. ஆனால் அது அம்மூவரும் தனித்தனியாக வாங்கிய மதிப்பெண்களைக் பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை. தற்போது ஒவ்வொரு பிரிவு இடைவெளியின் பிரதிநிதியாக ஒரு மதிப்பு தேவைப்படுகின்றது. பிரிவு 0-10 க்கான அந்த மதிப்பு 5 எனக் கொள்வோம். இது அந்த பிரிவின் மையப்புள்ளியாகும். அதாவது, ஒவ்வொரு பிரிவு இடைவெளியில் உள்ள உறுப்புகளும் அப்பிரிவின் மையப்புள்ளிக்கு அருகில் உள்ளதாக எடுத்துக்கொள்வோம். இதன்படி ஒவ்வொரு பிரிவு இடைவெளியின் மையப்புள்ளி, அப்பிரிவில் உள்ள உறுப்புக்களின் பிரதிநிதியாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

மையப்புள்ளி $= \dfrac{UCL + LCL}{2}$. இங்கு UCL என்பது பிரிவின் மேல் எல்லை (Upper Class Limit) LCL என்பது பிரிவின் கீழ் எல்லை (Lower Class Limit)ஆகும்.

பிரிவின் மையப்புள்ளியை x என்று குறித்து, மேற்கூறிய சூத்திரத்தின் மூலம் x கணக்கிடப்படுகின்றது. தற்போது

$\bar{x} = \dfrac{\sum fx}{\sum f}$ ஐ பயன்படுத்தி கொடுக்கப்பட்ட நிகழ்வெண் பரவலின் சராசரியைக் காணலாம்.

தொகுக்கப்பட்ட நிகழ்வெண் பரவலின் சராசரியைக் கீழ்க்காணும் முறைகளில் ஏதேனும் ஒரு முறையைப் பயன்படுத்திக் கணக்கிடலாம்:

(i) நேரடி முறை

(ii) ஊகச் சராசரி முறை

(iii) படிவிலக்க முறை

நேரடி முறை (Direct method)

நேரடி முறையைப் பயன்படுத்தும் போது, சராசரி காண்பதற்கான சூத்திரம் $\bar{x} = \dfrac{\sum fx}{\sum f}$,

இங்கு x என்பது பிரிவு இடைவெளியின் மையப்புள்ளி மற்றும் f என்பது அந்த பிரிவு இடைவெளியின் நிகழ்வெண் ஆகும்.

நேரடி முறையில் சராசரி காண்பதற்கான படிகள் :

(i) ஒவ்வொரு பிரிவு இடைவெளியின் மையப்புள்ளியைக் கண்டுபிடித்து அதை x எனக் குறிக்க.

(ii) இம்மையப்புள்ளிகளை அதற்குரிய பிரிவு இடைவெளியின் நிகழ்வெண்ணோடு பெருக்கி, அப்பெருக்கல் பலனின் கூடுதல் $\sum fx$ ஐக் காணவும்.

(iii) எல்லா நிகழ்வெண்களின் கூடுதல் $\sum f$ ஐக் காணவும். $\sum fx$ ஐ $\sum f$ ஆல் வகுக்க, சராசரி கிடைக்கும்.

எடுத்துக்காட்டு 11.7

கீழ்க்காணும் விவரத்திற்கு நேரடி முறை மூலம் சராசரியைக் காண்க.

மதிப்பெண்கள்	0-10	10-20	20-30	30-40	40-50	50-60
மாணவர்களின் எண்ணிக்கை	5	10	25	30	20	10

தீர்வு

மதிப்பெண்கள்	மையப்புள்ளி (x)	மாணவர்களின் எண்ணிக்கை (f)	fx
0-10	5	5	25
10-20	15	10	150
20-30	25	25	625
30-40	35	30	1050
40-50	45	20	900
50-60	55	10	550
		$\sum f = 100$	$\sum fx = 3300$

$$\bar{x} = \frac{\sum fx}{\sum f} = \frac{3300}{100} = 33$$

எனவே, சராசரி = 33

ஊகச் சராசரி முறை (Assumed mean method)

கொடுக்கப்பட்ட புள்ளி விவரத்தின் ஊகச் சராசரி A எனில், “விலக்கம்” $d = x - A$ என்பது ஊகச் சராசரி A-ல் இருந்து பிரிவின் மையப்புள்ளி x-ன் விலக்கமாகும். ஊகச் சராசரி முறையில், சராசரி காண்பதற்கான சூத்திரம்

$$\bar{x} = A + \frac{\sum fd}{\sum f}.$$

ஊகச் சராசரி முறையில் சராசரி காண்பதற்கான படிகள் :

(i) ஊகச் சராசரியை A என்போம்.

(ii) ஒவ்வொரு பிரிவின் மையப்புள்ளி x-ஐக் காண்க.

(iii) ஒவ்வொரு x-க்கும் விலக்கம் $d = x - A$ ஐக் காண்க.

(iv) விலக்கத்தினை அந்தந்த பிரிவு இடைவெளியின் நிகழ்வெண்ணோடு பெருக்கி, பின்பு fd-ன் கூடுதல் $\sum fd$ ஐக் காண்க.

(v) $\bar{x} = A + \frac{\sum fd}{\sum f}$ என்ற சூத்திரத்தின் வாயிலாய் சராசரியைக் காண்க.

எடுத்துக்காட்டு 11.8

எடுத்துக்காட்டு 11.7-ல் உள்ள விவரத்திற்கு, ஊகச் சராசரி முறையில், சராசரியைக் காண்க.

தீர்வு ஊகச் சராசரி A = 35 என்க.

மதிப்பெண்கள்	மையப்புள்ளி(x)	மாணவர்களின் எண்ணிக்கை (f)	$d = x - 35$	fd
0-10	5	5	–30	–150
10-20	15	10	–20	–200
20-30	25	25	–10	–250
30-40	35	30	0	0
40-50	45	20	10	200
50-60	55	10	20	200
		$\sum f = 100$		$\sum fd = -200$

$$\overline{x} = A + \frac{\sum fd}{\sum f}$$

$$= 35 + \left(\frac{-200}{100}\right) = 35 - 2 = 33$$

படிவிலக்க முறை (Step deviation method)

புள்ளி விவரத்தின் பிரிவு இடைவெளிகளின் நீளம் சமமாக இருந்தால், படிவிலக்க முறையில் சராசரி காண்பது எளிது. இம்முறையில், கணக்கிடுவதை எளிமைப் படுத்துவதற்காக, விலக்கம் $d = x - A$ ஐ இடைவெளியின் நீளம் c ஆல் வகுக்கப்படுகின்றது. பிறகு,

$\overline{x} = A + \frac{\sum fd}{\sum f} \times c$ என்ற சூத்திரத்தின் மூலம் சராசரி காணப்படுகிறது.

எடுத்துக்காட்டு 11.7-ல் உள்ள புள்ளிவிவரத்திற்கு, படிவிலக்க முறையில் சராசரியைக் காணவும்.

தீர்வு

ஊகச் சராசரி $A = 35$ என்க. இங்கு இடைவெளி நீளம் $c = 10$.

மதிப்பெண்கள்	மையப்புள்ளி (x)	மாணவர்களின் எண்ணிக்கை(f)	$d = \frac{x - 35}{10}$	fd
0-10	5	5	–3	–15
10-20	15	10	–2	–20
20-30	25	25	–1	–25
30-40	35	30	0	0
40-50	45	20	1	20
50-60	55	10	2	20
		$\sum f = 100$		$\sum fd = -20$

$$\overline{x} = A + \frac{\sum fd}{\sum f} \times c \quad = 35 - \left(\frac{20}{100} \times 10\right) = 35 - 2 = 33$$

$\therefore$ சராசரி $= 33$

11.3.4 சராசரியின் பண்புகள்

பண்பு 1

சராசரியிலிருந்து, அனைத்து உறுப்புகளின் விலக்கங்களின் கூட்டுத்தொகை பூச்சியம் ஆகும்.

அதாவது, புள்ளிவிவரத்தின் உறுப்புகள் $x_1, x_2, x_3 \ldots x_n$ எனில், $(x_1 - \overline{x}) + (x_2 - \overline{x}) + \ldots + (x_n - \overline{x}) = 0$

உதாரணமாக, 6, 8, 9, 14, 13 என்ற விவரத்தின் சராசரி 10. 10-லிருந்து ஒவ்வொரு விவரத்தின் விலங்கங்களின் கூட்டுத்தொகை

$$(6-10) + (8-10) + (9-10) + (14-10) + (13-10)$$

$$= -4 + (-2) + (-1) + 4 + 3 = -7 + 7 = 0$$

எனவே, சராசரியிலிருந்து, அனைத்து உறுப்புகளின் விலக்கங்களின் கூட்டுத்தொகை பூச்சியம் என அறியப்படுகின்றது.

பண்பு 2

ஒரு புள்ளிவிவரத்தில் உள்ள ஒவ்வொரு எண்ணுடனும், ஒரு குறிப்பிட்ட மாறாத எண் k ஐ அதிகரிப்பதனால் கிடைக்கும் புதிய புள்ளிவிவரத்தின் கூட்டுச் சராசரி மதிப்பும் அதே மாறிலி k அளவு அதிகரிக்கும்.

அதாவது, $x_1, x_2, x_3 \ldots x_n$ என்ற எண்களின் சராசரி $\overline{x}$ எனில், $x_1 + k, x_2 + k, x_3 + k, \ldots, x_n + k$ என்ற எண்களின் சராசரி $\overline{x} + k$ ஆகும்.

உதாரணமாக, x_1, x_2, x_3, x_4 மற்றும் x_5 என்ற எண்களின் சராசரி 20 என்க.

$$\text{எனவே, } \overline{x} = \frac{x_1 + x_2 + x_3 + x_4 + x_5}{5} = 20$$

ஒவ்வொரு எண்ணோடும் 5 ஐக் கூட்டினால் கிடைக்கும் புதிய எண்கள்

$x_1 + 5, x_2 + 5, x_3 + 5, x_4 + 5$ மற்றும் $x_5 + 5$ ஆகும்.

இதன் சராசரி

$$\frac{x_1 + 5 + x_2 + 5 + x_3 + 5 + x_4 + 5 + x_5 + 5}{5}$$

$$= \frac{x_1 + x_2 + x_3 + x_4 + x_5 + 25}{5}$$

$$= \frac{x_1 + x_2 + x_3 + x_4 + x_5}{5} + \frac{25}{5} = 20 + 5$$

புதிய விவரத்தின் சராசரி பழைய விவரத்தின் சராசரியை விட 5 அதிகரித்துள்ளதைக் காண்கிறோம்.

பண்பு 3

ஒரு புள்ளிவிவரத்தில் உள்ள ஒவ்வொரு எண்ணிலிருந்தும், ஒரு குறிப்பிட்ட மாறாத எண் k ஐக் குறைப்பதனால் கிடைக்கும் புதிய புள்ளிவிவரத்தின் கூட்டுச் சராசரி மதிப்பும் அதே மாறிலி k அளவு குறையும். அதாவது,

$x_1, x_2, x_3, x_4, \ldots, x_n$ என்ற எண்களின் சராசரி $\overline{x}$ எனில்,

$x_1 - k, x_2 - k, x_3 - k, x_4 - k, \ldots, x_n - k$ ஆகிய எண்களின் சராசரி $\overline{x} - k$ ஆகும்.

உதாரணமாக, x_1, x_2, x_3, x_4 மற்றும் x_5 ஆகிய எண்களின் சராசரி $\overline{x}$ எனில்,

$$\overline{x} = \frac{x_1 + x_2 + x_3 + x_4 + x_5}{5}$$

ஒவ்வொரு எண்ணிலிருந்தும் 5-ஐ கழித்தால், கிடைக்கும் புதிய எண்கள்

$$x_1 - 5, x_2 - 5, x_3 - 5, x_4 - 5, x_5 - 5.$$

$$\text{புதிய சராசரி} = \frac{x_1 - 5 + x_2 - 5 + x_3 - 5 + x_4 - 5 + x_5 - 5}{5}$$

$$= \frac{x_1 + x_2 + x_3 + x_4 + x_5}{5} - \frac{25}{5}$$

$$= 20 - 5$$

புதிய விவரத்தின் சராசரி பழைய விவரத்தின் சராசரியை விட 5 குறைந்துள்ளதைக் காண்கிறோம்.

பண்பு 4

ஒரு புள்ளிவிவரத்தில் உள்ள ஒவ்வொரு எண்ணுடனும், ஒரு குறிப்பிட்ட மாறாத எண் $k, (k \neq 0)$ ஆல் பெருக்கினால் கிடைக்கும் புதிய புள்ளிவிவரத்தின் கூட்டுச் சராசரி மதிப்பும் அதே மாறிலி k ஆல் பெருக்கிக் கிடைக்கிறது. அதாவது,

$x_1, x_2, x_3 \ldots x_n$ ஆகிய எண்களின் சராசரி $\overline{x}$ எனில், $kx_1, kx_2, kx_3, \ldots, kx_n$ ஆகிய எண்களின் சராசரி $k\overline{x}$ ஆகும்.

உதாரணம், x_1, x_2, x_3, x_4 மற்றும் x_5 ஆகிய எண்களின் சராசரி 20 எனில்,

$$\frac{x_1 + x_2 + x_3 + x_4 + x_5}{5} = 20$$

ஒவ்வொரு எண்ணையும் 5-ஆல் பெருக்கினால், கிடைக்கும் எண்கள் $5x_1, 5x_2, 5x_3, 5x_4, 5x_5$.

$$\text{புதிய சராசரி} = \frac{5x_1 + 5x_2 + 5x_3 + 5x_4 + 5x_5}{5}$$

$$= \frac{5(x_1 + x_2 + x_3 + x_4 + x_5)}{5} = 5\,(20)$$

புதிய விவரத்தின் சராசரி பழைய விவரத்தின் சராசரியை 5 ஆல் பெருக்கக் கிடைக்கிறது.

பண்பு 5

ஒரு புள்ளிவிவரத்தில் உள்ள ஒவ்வொரு எண்ணுடனும், ஒரு குறிப்பிட்ட மாறாத எண் $k, (k \neq 0)$ ஆல் வகுத்தால் கிடைக்கும் புதிய புள்ளிவிவரத்தின் கூட்டுச் சராசரி மதிப்பும் அதே மாறிலி k ஆல் வகுக்கக் கிடைக்கிறது. அதாவது,

$x_1, x_2, x_3, x_4, x_5, \ldots, x_n$ ஆகிய எண்களின் சராசரி $\overline{x}$ எனில், $\frac{x_1}{k}, \frac{x_2}{k}, \frac{x_3}{k}, \ldots, \frac{x_n}{k}$ ஆகிய எண்களின் சராசரி $\frac{\overline{x}}{k}$ ஆகும்.

உதாரணமாக, x_1, x_2, x_3, x_4 மற்றும் x_5 ஆகிய எண்களின் சராசரி 20 எனில்,

$$\overline{x} = \frac{x_1 + x_2 + x_3 + x_4 + x_5}{5} = 20$$

ஒவ்வொரு எண்ணையும் 5 ஆல் வகுக்க கிடைக்கும் எண்கள் $y_1 = \frac{x_1}{5}$, $y_2 = \frac{x_2}{5}$, $y_3 = \frac{x_3}{5}$, $y_4 = \frac{x_4}{5}$ மற்றும் $y_5 = \frac{x_5}{5}$.

$$\text{புதிய சராசரி } \overline{y} = \frac{\frac{x_1}{5} + \frac{x_2}{5} + \frac{x_3}{5} + \frac{x_4}{5} + \frac{x_5}{5}}{5}$$

$$= \frac{1}{5}\left(\frac{x_1 + x_2 + x_3 + x_4 + x_5}{5}\right) = \frac{1}{5}(20)$$

$$= \frac{1}{5}\,(\overline{x})$$

புதிய விவரத்தின் சராசரி பழைய விவரத்தின் சராசரியை 5 ஆல் வகுக்க கிடைத்துள்ளது.

எடுத்துக்காட்டு **11.9**

100 மாணவர்களின் மதிப்பெண்களின் சராசரி 40 என்று கணக்கிடப்பட்டது. பின்பு, 53 என்ற மதிப்பெண் 83 என்று தவறுதலாக எடுக்கப்பட்டது தெரியவந்தது. சரியான மதிப்பெண்களைக் கொண்டு சரியான சராசரியைக் காண்க.

தீர்வு மொத்த மாணவர்களின் எண்ணிக்கை $n = 100$, சராசரி மதிப்பெண் $\overline{x} = 40$.

$$\text{தவறான } \sum x = \overline{x} \times n = 40 \times 100 = 4000$$

சரியான $\sum x$ = தவறான $\sum x$ − தவறான மதிப்பெண் + சரியான மதிப்பெண்.

$$= 4000 - 83 + 53 = 3970$$

$$\text{சரியான சராசரி } \overline{x} = \frac{\text{சரியான } \sum x}{n}$$

$$= \frac{3970}{100} = 39.7$$

எனவே $\overline{x}$-ன் சராசரி மதிப்பு 39.7 ஆகும்.

பயிற்சி **11.2**

1. ஒரு கடைக்காரர் தொடர்ந்து 6 நாட்களில் விற்ற பைகளின் எண்ணிக்கை கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. விற்கப்பட்ட பைகளின் சராசரி எண்ணிக்கையைக் காண்க.

நாட்கள்	திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி	சனி
பைகளின் எண்ணிக்கை	55	32	30	25	10	20

2. ஒரு பகுதியில் உள்ள 10 குடும்பங்களில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 2, 4, 3, 4, 1, 6, 4, 5, x, 5 ஆகும். குழந்தைகளின் எண்ணிக்கையின் சராசரி 4 எனில், x-ன் மதிப்பைக் காண்க.

3. 20 எண்களின் சராசரி **59** என்க. ஒவ்வொரு எண்ணுடனும் 3 ஐக் கூட்டினால், கிடைக்கும் எண்களின் சராசரி என்ன?

4. 15 எண்களின் சராசரி 44 என்க. ஒவ்வொரு எண்ணிலிருந்து 7 ஐக் கழித்தால், கிடைக்கும் எண்களின் சராசரி என்ன?

5. 12 எண்களின் சராசரி 48 என்க. ஒவ்வொரு எண்ணையும் 4 ஆல் பெருக்கினால், கிடைக்கும் எண்களின் சராசரி என்ன?

6. 16 எண்களின் சராசரி 54 என்க. ஒவ்வொரு எண்ணையும் 9 ஆல் வகுத்தால், கிடைக்கும் எண்களின் சராசரி என்ன?

7. 6 மாணவர்களைக் கொண்ட ஒரு குழுவின் சராசரி எடை 48 கிலோ ஆகும். அவற்றில் 5 மாணவர்களின் எடை 50 கிலோ, 45 கிலோ, 50 கிலோ, 42 கிலோ மற்றும் 40 கிலோ எனில், ஆறாவது மாணவனின் எடையைக் காண்க.

8. கீழே கொடுக்கப்பட்டுள்ள 40 மாணவர்களின் எடை பற்றிய புள்ளிவிவரத்திற்கு, ஊகச் சராசரி வழிமுறையில், சராசரி எடையைக் கணக்கிடவும்.

எடை (கிலோகிராம்)	50	52	53	55	57
மாணவர்களின் எண்ணிக்கை	10	15	5	6	4

9. 75 எண்களைக் கொண்ட ஒரு தொகுதியின் சராசரி 27 என கணக்கிடப்பட்டது. பின்பு, 53 என்ற எண் தவறுதலாக 43 என்று படிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. அத்தொகுதியின் சரியான சராசரியைக் காணவும்.

10. 100 எண்களின் சராசரி 40 என்று காணப்பட்டது. கணக்கிடும் நேரத்தில் 3 மற்றும் 72 என்ற இரு விவரங்கள் 30 மற்றும் 27 என தவறுதலாக எடுத்துக்கொள்ளப்பட்டது தெரியவந்தது எனில், சரியான சராசரியைக் காண்க.

11. ஒரு மாதத்தில் மருத்துவமனைக்கு வந்து சென்ற நோயாளிகளின் எண்ணிக்கை பற்றிய புள்ளிவிவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு நாளில் மருத்துவமனைக்கு வந்த நோயாளிகளின் சராசரி எண்ணிக்கையைக் காண்க.

நோயாளிகளின் எண்ணிக்கை	0-10	10-20	20-30	30-40	40-50	50-60
நாட்களின் எண்ணிக்கை	2	6	9	7	4	2

12. படிவிலக்க வழிமுறையைப் பயன்படுத்தி கீழ்க்காணும் புள்ளிவிவரத்திற்கான சராசரியைக் காண்க.

மதிப்பெண்	0-10	10-20	20-30	30-40	40-50	50-60
மாணவர்களின் எண்ணிக்கை	8	15	22	20	10	5

13. கீழ்க்கண்ட புள்ளிவிவரம், நோயாளிகளைப் பற்றிய ஓர் கணக்கெடுப்பில் இருந்து பெறப்பட்டது. இதன் சராசரியைக் காண்க.

வயது (ஆண்டுகள்)	10-19	20-29	30-39	40-49	50-59
நோயாளிகளின் எண்ணிக்கை	1	0	1	10	13

14. ஆண்டு இறுதித் தேர்வில் **40** மாணவர்கள் வாங்கிய மொத்த மதிப்பெண்கள் பற்றிய விவரம் கீழே தரப்பட்டடுள்ளது.

மதிப்பெண்கள்	150 - 200	200 - 250	250 - 300	300 - 350	350 - 400	400 - 450	450 - 500
மாணவர்களின் எண்ணிக்கை	2	3	12	10	4	6	3

படிவிலக்க வழிமுறையைப் பயன்படுத்தி மேற்கண்ட புள்ளிவிவரத்தின் சராசரியைக் காண்க.

15. கீழ்க்காணும் பரவலின் கூட்டுச் சராசரியைக் கணக்கிடவும்.

பிரிவு இடைவெளி	0 - 19	20 - 39	40 - 59	60 - 79	80 - 99
நிகழ்வெண்	3	4	15	14	4

11.4 இடைநிலை அளவு (Median)

கொடுக்கப்பட்ட புள்ளிவிவரத்தின் உறுப்புகளை ஏறு அல்லது இறங்கு வரிசையில் எழுதும் போது, வரிசையில் நடுநிலையாக அமைந்து இருக்கும் உறுப்பின் மதிப்பைப் புள்ளிவிவரத்தின் இடைநிலை அளவு என்போம்.

11.4.1 இடைநிலை அளவு – வகைப்படுத்தப்படாத புள்ளி விவரம்

இடைநிலை அளவு காண்பதற்கான படிகள் :

(i) கொடுக்கப்பட்ட n எண்களை ஏறு அல்லது இறங்கு வரிசையில் எழுதவும்.

(ii) n-ஒரு ஒற்றைப்படை எண்ணாக இருந்தால், $\left(\frac{n+1}{2}\right)$ ஆவது உறுப்பு இடைநிலை அளவாகும்.

(iii) n-ஒரு இரட்டைப்படை எண்ணாக இருந்தால் இடையில் உள்ள இரண்டு உறுப்புக்களின் சராசரி இடைநிலை அளவாகும். அதாவது,

இடைநிலை அளவு = $\left(\frac{n}{2}\right)$ ஆவது உறுப்பு மற்றும் $\left(\frac{n}{2}+1\right)$ ஆவது உறுப்பு ஆகியவற்றின் சராசரி ஆகும்.

எடுத்துக்காட்டு 11.10

கீழ்க்காணும் எண்களின் இடைநிலை அளவு காண்க

(i) 24, 22, 23, 14, 15, 7, 21 (ii) 17, 15, 9, 13, 21, 32, 42, 7, 12, 10.

தீர்வு

(i) கொடுக்கப்பட்ட எண்களை ஏறு வரிசையில் கீழ்க்கண்டவாறு எழுதுவோம்.

7, 14, 15, 21, 22, 23, 24

உறுப்புகளின் எண்ணிக்கை $n = 7$

இடைநிலை அளவு $= \left(\frac{n+1}{2}\right)$ ஆவது உறுப்பு (*n* ஒரு ஒற்றைப்படை எண்)

$= \left(\frac{7+1}{2}\right)$ ஆவது உறுப்பு

$= 4$ ஆவது உறுப்பு $= 21$

(ii) கொடுக்கப்பட்ட எண்களைக் கீழ்க்கண்டவாறு ஏறு வரிசையில் அமைப்போம்.

7, 9, 10, 12, 13, 15, 17, 21, 32, 42.

உறுப்புகளின் எண்ணிக்கை $n = 10$ (*n* ஒரு இரட்டைப்படை எண்)

$\left(\frac{n}{2}\right)$ ஆவது உறுப்பு மற்றும் $\left(\frac{n}{2}+1\right)$ ஆவது உறுப்பு ஆகியவற்றின் சராசரியே இடைநிலை அளவாகும்.

$\left(\frac{n}{2}\right)$ ஆவது உறுப்பு $= \left(\frac{10}{2}\right)$ ஆவது உறுப்பு

$= 5$ ஆவது உறுப்பு

$= 13$

$\left(\frac{n}{2}+1\right)$ ஆவது உறுப்பு $= \left(\frac{10}{2}+1\right)$ ஆவது உறுப்பு

$= 6$ ஆவது உறுப்பு

$= 15.$

எனவே, இடைநிலை அளவு $= \frac{13+15}{2} = 14$

11.4.2 இடைநிலை அளவு – வகைப்படுத்தப்படாத நிகழ்வெண் பரவல்

இடைநிலை அளவு காண்பதற்கான படிகள் :

(i) கொடுக்கப்பட்ட *n* எண்களை ஏறு அல்லது இறங்கு வரிசையில் எழுதவும்.

(ii) குவிவு நிகழ்வெண் பரவலைக் கணக்கிடவும்.

(iii) *n* ஒரு ஒற்றைப்படை எண்ணாக இருந்தால், $\frac{n+1}{2}$ ஆவது உறுப்பே இடைநிலை அளவாகும்.

(iv) *n* ஒரு இரட்டைப்படை எண்ணாக இருந்தால் இடைநிலை அளவு

$$= \frac{\left(\frac{n}{2}\right)\text{வது உறுப்பு} + \left(\frac{n}{2}+1\right)\text{வது உறுப்பு}}{2}$$

எடுத்துக்காட்டு 11.11

கீழ்க்காணும் புள்ளி விவரத்திற்கான இடைநிலை அளவுக் காண்க.

மதிப்பெண்கள்	20	9	25	50	40	80
மாணவர்களின் எண்ணிக்கை	6	4	16	7	8	2

தீர்வு முதலில் மதிப்பெண்களை ஏறுவரிசையில் எழுதுவோம்.

மதிப்பெண்கள்	நிகழ்வெண் f	குவிவு நிகழ்வெண் cf
9	4	4
20	6	10
25	16	26
40	8	34
50	7	41
80	2	43
	n = 43	

நிகழ்வெண்களின் மொத்தம் n = 43(ஒரு ஒற்றைப் படை எண்)

இடைநிலை அளவு $= \left(\frac{n+1}{2}\right)$ ஆவது உறுப்பு

$= \left(\frac{43+1}{2}\right)$ ஆவது உறுப்பு

= 22 ஆவது உறுப்பு.

பட்டியலில் கண்டுள்ளபடி, 11-ல் இருந்து 26 வரை உள்ள உறுப்புகள் 25 ஆகும் .

எனவே, 22-வது உறுப்பு 25 ஆகும்.

$\therefore$ இடைநிலை அளவு = 25.

எடுத்துக்காட்டு 11.12

கீழ்காணும் பரவலின் இடைநிலை அளவுக் காண்க.

மதிப்பு	1	2	3	4	5	6
நிகழ்வெண்	1	3	2	4	8	2

தீர்வு

மதிப்பு	நிகழ்வெண் f	குவிவு நிகழ்வெண் cf
1	1	1
2	3	4
3	2	6
4	4	10
5	8	18
6	2	20
	n = 20	

n = 20 (இரட்டை படை எண்)

n ஒரு இரட்டைப்படை எண்ணாக இருந்தால் இடைநிலை அளவு

$$= \frac{\left(\frac{n}{2}\right)\text{வது உறுப்பு} + \left(\frac{n}{2}+1\right)\text{வது உறுப்பு}}{2}$$

$$= \frac{10\text{ஆவது உறுப்பு} + 11\text{ஆவது உறுப்பு}}{2}$$

$\therefore$ இடைநிலை அளவு $= \dfrac{4+5}{2} = \dfrac{9}{2} = 4.5$

11.4.3 இடைநிலை அளவு – வகைப்படுத்தப்பட்ட நிகழ்வெண் பரவல்

வகைப்படுத்தப்பட்ட நிகழ்வெண் பரவலின் இடைநிலை அளவின் கணக்கீடு கீழ்க்காணும் படிகளைக் கொண்டது.

(i) குவிவு நிகழ்வெண்களைக் கணக்கிடவும்.

(ii) N என்பது நிகழ்வெண்களின் கூடுதல் எனில், $\dfrac{N}{2}$ -ன் மதிப்பைக் காண்க

(iii) குவிவு நிகழ்வெண் $\dfrac{N}{2}$ ஐ உறுப்பாகக் கொண்டிருக்கும் பிரிவு இடைவெளி, இடைநிலை அளவு பிரிவு என்று அழைக்கப்படும்.

(iv) இடைநிலை அளவு $= l + \dfrac{\frac{N}{2} - m}{f} \times c$ என்ற சூத்திரத்தை பயன்படுத்திக் காணலாம்.

l = இடைநிலை அளவு பிரிவின் கீழ்எல்லை f = இடைநிலை அளவு பிரிவின் நிகழ்வெண்

c = இடைநிலை அளவு பிரிவின் நீளம் N = நிகழ்வெண்களின் கூடுதல்

m = இடைநிலை அளவு பிரிவின் குவிவு நிகழ்வெண்ணுக்கு உடனடியான முந்தைய குவிவு நிகழ்வெண்

எடுத்துக்காட்டு 11.13

கீழ்க்காணும் பரவலின் இடைநிலை அளவு காண்.

சம்பளம் (₹100-ல்)	0-10	10-20	20-30	30-40	40-50
தொழிலாளர்கள் எண்ணிக்கை	22	38	46	35	20

தீர்வு

சம்பளம்	நிகழ்வெண் f	குவிவு நிகழ்வெண் cf
0-10	22	22
10-20	38	60
20-30	46	106
30-40	35	141
40-50	20	161
	N = 161	

$\dfrac{N}{2} = \dfrac{161}{2} = 80.5$ எனவே இடைநிலை அளவு பிரிவு 20-30.

இடைநிலை அளவு பிரிவின் கீழ்எல்லை l = 20

இடைநிலை அளவு பிரிவின் நிகழ்வெண் f = 46

இடைநிலை அளவு பிரிவின் குவிவு நிகழ்வெண்ணுக்கு உடனடியான முந்தைய குவிவு நிகழ்வெண் $m = 60$. இடைநிலை அளவு பிரிவின் நீளம் $c = 10$

$$\text{இடைநிலை அளவு} = l + \frac{\frac{N}{2} - m}{f} \times c$$

$$= 20 + \frac{80.5 - 60}{46} \times 10 = 20 + \frac{10}{46} \times 20.5$$

$$= 20 + \frac{205}{46} = 20 + 4.46 = 24.46$$

$\therefore$ இடைநிலை அளவு $= 24.46$

எடுத்துக்காட்டு 11.14

கீழ்க்காணும் புள்ளி விவரத்தின் இடைநிலை அளவைக் காண்க.

மதிப்பெண்	11-15	16-20	21-25	26-30	31-35	36-40
நிகழ்வெண்	7	10	13	26	9	5

தீர்வு

கொடுக்கப்பட்டிருக்கும் பட்டியலில், பிரிவுகள் உள்ளடக்கும் பிரிவுகளாக உள்ளமையால் அவை விலக்கும் பிரிவுகளாக பின்வருமாறு மாற்றி எழுதுவோம்.

மதிப்பெண்	நிகழ்வெண் f	குவிவு நிகழ்வெண் cf
10.5- 15.5	7	7
15.5-20.5	10	17
20.5-25.5	13	30
25.5-30.5	26	56
30.5-35.5	9	65
35.5-40.5	5	70
	N = 70	

$$N = 70, \quad \frac{N}{2} = \frac{70}{2} = 35$$

இடைநிலை அளவு பிரிவு 25.5-30.5

இடைநிலை அளவு பிரிவின் கீழ் எல்லை $l = 25.5$

இடைநிலை அளவு பிரிவின் நிகழ்வெண் $f = 26$

இடைநிலை அளவு பிரிவின் குவிவு நிகழ்வெண்ணுக்கு முந்தைய குவிவு நிகழ்வெண் $m = 30$

இடைநிலை அளவு பிரிவின் நீளம் $c = 30.5 - 25.5 = 5$

$$\text{இடைநிலை அளவு} = l + \frac{\frac{N}{2} - m}{f} \times c$$

$$= 25.5 + \frac{35 - 30}{26} \times 5 = 25.5 + \frac{25}{26} = 26.46$$

பயிற்சி 11.3

1. கீழ்க்காணும் புள்ளிவிவரத்தின் இடைநிலை அளவைக் காண்க
   (i) 18,12,51,32,106,92,58
   (ii) 28,7,15,3,14,18,46,59,1,2,9,21

2. கீழ்க்காணும் நிகழ்வெண் பரவலின் இடைநிலை அளவைக் காண்க.

மதிப்பு	12	13	15	19	22	23
நிகழ்வெண்	4	2	4	4	1	5

3. கீழ்க்காணும் புள்ளி விவரத்திற்கான இடைநிலை அளவைக் காண்க.

உயரம் (அடி)	5-10	10-15	15-20	20-25	25-30
மரங்களின் எண்ணிக்கை	4	3	10	8	5

4. கீழ்க்காணும் நிகழ்வெண் பரவலின் இடைநிலை அளவைக் காண்க.

வயது	0-9	10-19	20-29	30-39	40-49	50-59	60-69
நபர்களின் எண்ணிக்கை	4	6	10	11	12	6	1

5. கீழ்க்காணும் புள்ளிவிவரத்தின் இடைநிலை அளவைக் கணக்கிடவும்.

பிரிவு இடைவெளி	1 - 5	6 - 10	11 - 15	16 - 20	21 - 25	26 - 30	31 - 35
நிகழ்வெண்	1	18	25	26	7	2	1

6. கீழ்க்காணும் பட்டியலில் ஒரு தொழிற்சாலையின் 800 தொழிலாளர்களின் சராசரி வாரச் சம்பளத்தின் பரவல் கொடுக்கப்பட்டுள்ளது. இப்புள்ளிவிவரத்தின் இடைநிலை அளவைக் காண்க.

சம்பளம் (100 ரூபாயில்)	20 - 25	25 - 30	30 - 35	35 - 40	40 - 45	45 - 50	50 - 55	55 - 60
தொழிலாளர்களின் எண்ணிக்கை	50	70	100	180	150	120	70	60

11.5 முகடு (Mode)

ஒரு பரவலின் எந்த உறுப்பின் அருகில் மிக அதிக உறுப்புகள் அமைகிறதோ அந்த உறுப்பின் மதிப்பு முகடு என்று அழைக்கப்படும்.

11.5.1 முகடு – வகைப்படுத்தப்படாத புள்ளி விவரம்

செப்பனிடப்படாத புள்ளி விவரத்தின் உறுப்புகளை ஒரு வரிசையில் அமைத்து ஒவ்வொரு உறுப்பும் எத்தனை முறை இடம் பெற்றுள்ளது என்று கணக்கிடுவதன் மூலம், அப்புள்ளி விவரத்தின் முகடை எளிதாக அடைய முடியும். அதிக முறை இடம் பெற்றுள்ள உறுப்பின் மதிப்பே முகடு ஆகும்.

உதாரணத்திற்கு, 20,25,21,15,14,15 என்ற உறுப்புகளை கொண்ட புள்ளி விவரத்தை எடுத்துக் கொண்டால் 15 இருமுறை இடம் பெற்றுள்ளது. மற்ற அனைத்தும் ஒரு முறையே இடம் பெற்றுள்ளது. எனவே, முகடு = 15.

குறிப்புரை முகடு எண்ணாலான புள்ளிவிவரத்திற்கு மட்டுமல்லாது தரம் சார்ந்த புள்ளிவிவரத்தை அளப்பதற்கும் பயன்படும். ஒரு அச்சகம் 5 அச்சுகள் வெளியிட்டதில், அவை மிகத் தெளிவு, தெளிவு, தெளிவு மற்றும் தெளிவற்றது என்று தரம் பிரிக்கப்பட்டால், இந்த விவரத்தின் முகடு, "தெளிவு" என அறியப்படும்.

எடுத்துக்காட்டு **11.15**

கணிதத் திறமையை சோதிக்கும் தேர்வில் 10 மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் 75,72,59,62, 72,75,71,70,70,70 ஆகும். இப்புள்ளி விவரத்தின் முகடு காண்க.

தீர்வு 10 மாணவர்களின் மதிப்பெண்கள் முறையே 75, 72, 59, 62, 72, 75, 71, 70, 70, 70 இவ்விவரத்தில் 70 மூன்று முறை இடம் பெற்று, மற்றவை இரண்டு அல்லது ஒருமுறை இடம் பெற்றிருப்பதால், முகடு 70 ஆகும்.

குறிப்பு ஒரே ஒரு முகடு உள்ள பரவலை ஒற்றை முகடு பரவல் என்று அழைக்கிறோம்.

எடுத்துக்காட்டு **11.16**

482,485,483,485,487,487,489 என்ற தொகுப்பின் முகடு காண்க.

தீர்வு கொடுக்கப்பட்ட தொகுப்பில், இரண்டு எண்கள் **485** மற்றும் **487** இருமுறை இடம் பெற்று, இரண்டு எண்களும் தொகுப்பின் முகடுகள் ஆகின்றன. இவ்வாறு இரண்டு முகடுகள் உள்ள பரவல் இரட்டை முகட்டுப் பரவல் என்று அழைக்கப்படும் .

குறிப்பு
(i) இரண்டு முகடுகள் உள்ள பரவல் இரட்டை முகட்டுப் பரவல் என்று அழைக்கப்படும்.
(ii) மூன்று முகடுகள் உள்ள பரவல் மும்முகட்டுப் பரவல் என்று அழைக்கப்படும்.
(iii) மூன்று முகடுகளுக்கு மேல் உள்ள பரவல் பன்முகட்டுப் பரவல் என்று அழைக்கப்படும்.

11.5.2 முகடு – வகைப்படுத்தப்படாத நிகழ்வெண் பரவல்

வகைப்படுத்தப்படாத நிகழ்வெண் பரவலில் மிகப்பெரிய நிகழ்வெண்ணை பெற்றுள்ள உறுப்பின் மதிப்பு முகடு எனப்படும்.

எடுத்துக்காட்டு **11.17**

கீழ்க்காணும் பரவலில் சென்னையைச் சார்ந்த ஒரு காலணி கடையில் ஒரு குறிப்பிட்ட நாளில் 100 சோடி காலணிகள் விற்பனை செய்ததற்கான விவரம் தரப்பட்டு உள்ளது. இப்புள்ளி விவரத்தின் முகடு காண்க.

காலணியின் அளவு (அங்குலம்)	4	5	6	7	8	9	10
சோடிகளின் எண்ணிக்கை	2	5	3	23	39	27	1

தீர்வு மிகப்பெரிய நிகழ்வெண்ணை கொண்ட உறுப்பு முகடு ஆகும். கொடுக்கப்பட்ட விவரத்தில், மிகப்பெரிய நிகழ்வெண் 39-ஐ பெற்றிருக்கும் காலணியின் அளவு 8. எனவே முகடு 8 ஆகும்.

11.5.3 முகடு – வகைப்படுத்தப்பட்ட நிகழ்வெண் பரவல்

வகைப்படுத்தப்பட்ட நிகழ்வெண் பரவலில், உறுப்புகளின் சரியான மதிப்பு தெரியாது என்பதால் முகட்டின் சரியான மதிப்பை காண்பது மிகக் கடினமானது. எனினும், பிரிவு இடைவெளிகளின் நீளம் சமமானதாக உள்ள போது முகட்டின் தோராய மதிப்பை கீழ்வரும் சூத்திரத்தின் மூலம் காணலாம்.

$$\text{முகடு} = l + \left(\frac{f - f_1}{2f - f_1 - f_2}\right) \times c,$$

இதில், மிகப்பெரிய நிகழ்வெண்ணை பெற்றுள்ள பிரிவை முகடு பிரிவு என்று அழைப்போம்

l = முகடு பிரிவின் கீழ் எல்லை

f = முகடு பிரிவின் நிகழ்வெண்

c = முகடு பிரிவு இடைவெளியின் நீளம்

f_1 = முகடு பிரிவின் நிகழ்வெண்ணுக்கு முந்தைய நிகழ்வெண்.

f_2 = முகடு பிரிவின் நிகழ்வெண்ணுக்கு பிந்தைய நிகழ்வெண்.

எடுத்துக்காட்டு 11.18

கீழ்க்காணும் புள்ளி விவரத்திற்கு முகடு காண்க.

மதிப்பு	10-15	15-20	20-25	25-30	30-35	35-40	40-45	45-50
நிகழ்வெண்	4	8	18	30	20	10	5	2

தீர்வு

மதிப்பெண்	நிகழ்வெண் f
10-15	4
15-20	8
20-25	18
25-30	30
30-35	20
35-40	10
40-45	5
45-50	2

மிகப்பெரிய நிகழ்வெண் 30-ஐ பிரிவு 25-30 பெற்றிருப்பதால், இது முகடு பிரிவு ஆகும்.

முகடு பிரிவின் கீழ் எல்லை $l = 25$

முகடு பிரிவின் நிகழ்வெண் $f = 30$

முகடு பிரிவின் நிகழ்வெண்ணுக்கு முந்தைய நிகழ்வெண் $f_1 = 18$ மற்றும் பிந்தைய நிகழ்வெண் $f_2 = 20$

முகடு பிரிவு இடைவெளியின் நீளம் $c = 5$

$$\text{முகடு} = l + \left(\frac{f - f_1}{2f - f_1 - f_2}\right) \times c$$

$$= 25 + \left(\frac{30 - 18}{60 - 18 - 20}\right) \times 5 = 25 + \frac{12 \times 5}{22}$$

$$= 25 + \frac{60}{22} = 25 + 2.73 = 27.73$$

எனவே, முகடு $= 27.73$

பயிற்சி 11.4

1. ஒரு வகுப்பில் 15 மாணவர்கள் வாங்கிய மதிப்பெண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. 42,45,47, 49,52,65,65,71,71,72,75,82,72,47,72. இவ்விவரத்தின் முகடு காண்க.

2. கீழ்வரும் புள்ளிவிவரத்திற்கு முகடு காண்க.

காலணிகளின் அளவுகள்	4	5	6	7	8	9	10
விற்ற சோடிகளின் எண்ணிக்கை	15	17	13	21	18	16	11

3. ஒரு மாதத்தில், ஒரு மருத்துவமனைக்குச் சிகிச்சைக்கு வந்த 150 நோயாளிகளின் வயது பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இவ்விவரத்திற்கான முகடு காண்க.

வயது (வருடங்களில்)	10-20	20-30	30-40	40-50	50-60	60-70
நோயாளிகளின் எண்ணிக்கை	12	14	36	50	20	18

4. கீழ்க்காணும் புள்ளிவிவரத்தின் முகடு காண்க.

எடை (கிராம்)	21-25	26-30	31-35	36-40	41-45	46-50	51-55	56-60
மாணவர்களின் எண்ணிக்கை	5	4	3	18	20	14	8	3

5. ஒரு சாரணர் முகாமில் இருந்த குழந்தைகளின் வயது விவரம் கீழே தரப்பட்டு உள்ளது. 13, 13, 14, 15, 13, 15, 14, 15, 13, 15- வருடங்கள். கொடுக்கப்பட்ட புள்ளி விவரத்தின் சராசரி, இடைநிலை அளவு மற்றும் முகடு காண்க.

6. ஒரு பள்ளித் தோட்டத்தில் உள்ள மரங்களின் எண்ணிக்கை மற்றும் அம்மரங்களின் உள்ள கிளைகளின் எண்ணிக்கை பற்றிய விவரம் கீழ்க்காணும் பட்டியலில் தரப்பட்டுள்ளது.

கிளைகளின் எண்ணிக்கை	2	3	4	5	6
மரங்களின் எண்ணிக்கை	14	21	28	20	17

மேற்கண்ட விவரத்திற்கு சராசரி, இடைநிலை அளவு மற்றும் முகடு ஆகியவற்றை காண்க..

7. ஒரு வருட காலத்தில், ஒரு நகரத்தில் ஒருவித வியாதியால் பாதிக்கப்பட்டது பற்றி பதிவு செய்தவர்களின் வயது பற்றிய விவரம் கிழே தரப்பட்டு உள்ளது.

வயது (வருடங்களில்)	5 - 14	15 - 24	25 - 34	35 - 44	45 - 54	55 - 64
பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை	6	11	12	10	7	4

மேற்கண்ட புள்ளி விவரத்தின் சராசரி, இடைநிலை அளவு மற்றும் முகடு காண்க.

8. ஒரு தேர்வில் **20** மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களுக்கு சராசரி, முகடு மற்றும் இடைநிலை அளவுக் காண்க.

மதிப்பெண்	0 - 10	10 - 20	20 - 30	30 - 40	40 - 50
மாணவர்களின் எண்ணிக்கை	1	4	5	8	2

செயல்முறைப் பயிற்சி

1. 10,20,30,40 மற்றும் 50 ஆகியவற்றின் சராசரி காண்க.
    * ஒவ்வொரு எண்ணோடும் 10 ஐக் கூட்டி, வரும் எண்களின் சராசரி காண்க.
    * ஒவ்வொரு எண்ணிலிருந்தும் 10 ஐக் கழித்து வரும் எண்களின் சராசரி காண்க.
    * ஒவ்வொரு எண்ணையும்10 ஆல் பெருக்கி, வரும் எண்களின் சராசரி காண்க.
    * ஒவ்வொரு எண்ணையும் 10 ஆல் வகுத்து, வரும் எண்களின் சராசரி காண்க.
    * ஒவ்வொரு செயல் முறைக்கும் பொதுவான தீர்வு எழுதி அதனை சராசரியின் தன்மைகளோடு ஒப்பிடுக.
2. நீங்கள் சொந்தமாக உதாரணம் கொடுக்கவும்.
    (i) சராசரியை விட இடைநிலை அளவு ஏற்கத்தக்கது.
    (ii) இடைநிலை அளவை விட முகடு ஏற்கத்தக்கது.
    (iii) முகடை விட இடைநிலை அளவு ஏற்கத்தக்கது.

நினைவில் கொள்க

வகைப்படுத்தப்பட்ட விவரத்தின் சராசரிக்கான சூத்திரம் :

- நேர்வழிமுறை $\overline{x} = \dfrac{\sum fx}{\sum f}$
- உத்தேச சராசரி வழிமுறை
  $\overline{x} = A + \dfrac{\sum fd}{\sum f}$
- படிவிலகல் வழிமுறை $\overline{x} = A + \dfrac{\sum fd}{\sum f} \times C$
- ஒரு பிரிவின் குவிவு நிகழ்வெண், அந்த பிரிவின் நிகழ்வெண்ணோடு, அதற்கு முந்தைய பிரிவுகளின் நிகழ்வெண்களைக் கூட்டுவதால் கிடைக்கப் பெறுவது.
- வகைப்படுத்தப்பட்ட புள்ளி விவரத்தின் இடைநிலை அளவு காணும் சூத்திரம்
  இடைநிலை அளவு $= l + \dfrac{\frac{N}{2} - m}{f} \times c$
- வகைப்படுத்தப்பட்ட புள்ளி விவரத்தின் முகடு காணும் சூத்திரம்
  முகடு $= l + \left(\dfrac{f - f_1}{2f - f_1 - f_2}\right) \times c$

12 நிகழ்தகவு

All business proceeds on beliefs, or judgments of probabilities, and not on certainty

- CHARLES ELIOT

முதன்மைக் குறிக்கோள்கள்

- திரும்பத் திரும்ப வரும் சோதனைகள் மற்றும் ஒப்பீட்டு நிகழ்வெண் நிகழ்தகவு ஆகியவற்றைப் புரிந்து கொள்ளுதல்
- பட்டறிவு நிகழ்தகவினைப் புரிந்து கொள்ளுதல்

ரிச்சர்டு ஃபான் மைசஸ்
(R. Von Mises)
(1883-1953)

நிகழ்தகவுக்கு அனுபவம் அல்லது புள்ளியியல் அணுகுமுறையை ஆர்.எப். ஃபிஷர் மற்றும் ஆர். ஃபான்மைசஸ் ஆகியோர் விரிவாக்கினர். ஆர். ஃபான்மைசஸ் என்பவரால் கூறுவெளியின் கருத்து அறிமுகப்படுத்தப்பட்டது. அளவுக் கொள்கையை அடிப்படையாக கொண்டு நிகழ்தகவின் கணிதக் கருத்தியலை உண்டாக்க இக்கருத்து ஏதுவாக அமைந்தது. சென்ற நூற்றாண்டில் பற்பல படைப்பாளிகளின் தூண்டுதலால் இந்த அணுகுமுறை சிறிது சிறிதாக வெளிப்பட்டது. இதன் நவீன விரிவாக்கத்தினைக் குறிக்கும் அடிகோள் வழிமுறை கோல்மோகோரோவ் என்பவரால் அளிக்கப்பட்டது.

12.1 அறிமுகம்

ஒவ்வொருவரும் அதிகாலை முதல் அந்திசாயும் வரை சில செயல்களிலாவது நிகழக் கூடிய சாத்தியக்கூறுகளுக்கான வாய்ப்புகளை வைத்து முடிவெடுக்கின்றோம். உதாரணமாக, நான் இன்று வேலைக்குச் செல்லும் போது குடை கொண்டு செல்ல வேண்டுமா? எனது செல்லிடப்பேசியின் மின்கலன் சக்தி இன்று இரவு வரை நீடித்திருக்குமா? மற்றும் நான் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மடிக்கணினி வாங்க வேண்டுமா?

நிகழ்தகவு என்பது மாறுபடக்கூடிய எல்லா செயல்களிலும் ஒரு முடிவெடுக்க நமக்கு ஒரு வழிமுறையை அளிக்கின்றது. நிகழ்தகவு என்ற கருத்து யூகத்தின் அடிப்படையிலான சூதாட்டத்திலிருந்து தோன்றியிருந்தாலும் கூட, அதனுடைய பயன்பாடுகள் இயற்பியல், வணிகவியல், உயிரியல், மருத்துவம், ஆயுட்காப்பீடு, முதலீட்டுத்துறை, வானிலை முன்னறிவிப்பு மற்றும் பல்வேறு வளரும் துறைகளில் அதிகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பின்வரும் வாக்கியங்களை கவனிப்போம்:

- எதிர்வரும் பொதுத்தேர்வில் குழலிசை அநேகமாக முதல் மதிப்பெண் பெறுவாள்.
- ஒருவேளை தமிழிசை இன்று தொடர்வண்டியைப் பிடிப்பாள்.
- அத்தியாவசியப் பொருட்களின் விலை மாற்றமில்லாமல் இருக்கக்கூடும்.
- இன்றைய டென்னிஸ் போட்டியில் லீலா வெற்றி பெற வாய்ப்பு உள்ளது.

அநேகமாக, ஒருவேளை, இருக்கக்கூடும், வாய்ப்பு போன்ற சொற்கள் உறுதிப்பாடற்றத் தன்மையையே உணர்த்துகின்றன. உறுதித்தன்மை அல்லது உறுதிப்பாடற்றத் தன்மையை அளவிட சரியான அளவுகோல் ஏதும் இல்லை. ஆனாலும் ஒரு செயல் நிகழ்வதற்கான சாத்தியக்கூறுகளை யூகங்களின் அடிப்படையில் உறுதிப்பாடற்றத் தன்மையினை கணித வடிவில் அளவிடலாம். இவ்வாறு அளவிடும் எண் மதிப்பை நிகழ்தகவு என்கிறோம். அனுபவங்கள் மற்றும் மாற்றங்களின் அடிப்படையில் முடிவெடுப்பதற்கு நிகழ்தகவு ஒரு சிறந்த பயனுள்ள முறையாகும். எனவே, நிகழ்தகவு என்பது ஒரே ஒரு எண் மதிப்பாக இல்லாத போதும் அது மிகவும் பயனுள்ளதாகும்.

12.2 அடிப்படைக் கருத்துகள் மற்றும் வரையறைகள்

நிகழ்தகவு கருத்தியலை தொடங்குவதற்கு முன் நமக்குத் தேவையான சில அடிப்படைக் கருத்துக்களை வரையறை செய்வோம்.

- சோதனை(Experiment)
- சமவாய்ப்புச் சோதனை(Random Experiment)
- முயற்சி (Trial)
- கூறுவெளி (Sample space)
- கூறுபுள்ளி (Sample point)
- நிகழ்ச்சி (Event)

முக்கிய கருத்து	சோதனை
நன்கு வரையறுக்கப்பட்ட விளைவுகளை உருவாக்கும் ஒரு செயல் சோதனை எனப்படும்.	

சோதனைகளை பின்வரும் இரு பரந்த முறைகளில் வகைப்படுத்தலாம்.

சோதனை

உறுதியான சோதனை

வாய்ப்புச் சோதனை

1. உறுதியான சோதனை (அ) தீர்மானமான சோதனை (*Deterministic experiment*) **:**

ஒத்த நிபந்தனைகளின் அடிப்படையில் முடிவுகளை முன்னரே அறியக்கூடியச் சோதனை தீர்மானமான சோதனை (அ) உறுதியான சோதனை எனப்படும்.

எடுத்துக்காட்டாக, நீரை கொதிக்க வைக்கும் போது அது ஆவியாக மாறுதல், குளிர்சாதனப் பெட்டியில் நீரை வைக்கும் போது அது பனிக்கட்டியாக உறைதல் மற்றும் இருபுறமும் தலையையுடைய ஒரு மாறுபட்ட நாணயத்தை சுண்டும் போது தலை கிடைப்பது போன்ற சோதனைகளில் முடிவுகளை நாம் முன்னரே அறிய முடியும். எனவே இவையனைத்தும் உறுதியான (அ) தீர்மானமான சோதனைகள் ஆகும்.

2. சமவாய்ப்புச் சோதனை (*Random experiment*) **:** ஒரு சோதனையில் நிகழக்கூடிய அனைத்து விளைவுகளும் முன்னரே தெரிந்திருந்தாலும் அவற்றில் எந்த விளைவு நிகழப்போகிறது என்பதை முன்னரே சரியாகச் சொல்ல முடியாது எனில், அச்சோதனை சமவாய்ப்புச் சோதனை எனப்படும்.

எடுத்துக்காட்டாக, பின்வரும் சோதனைகளைக் கருதுவோம்:

(i) ஒரு நாணயத்தை சுண்டுதல்

(ii) ஒரு பகடையை உருட்டுதல்.



இச்சோதனைகள் சமவாய்ப்புச் சோதனைகள் ஆகும். ஏனெனில், இவற்றில் நிகழப்போகும் விளைவினை முன்னரே அறிய இயலாது.

முக்கிய கருத்து		
முயற்சி (Trial)	ஒன்று அல்லது பல விளைவுகளை உருவாக்கும் ஒரு செயல் முயற்சி எனப்படும்.	உதாரணமாக, நாணயத்தை “சுண்டுதல்” பகடையை “உருட்டுதல்” ஆகியவை முயற்சிகள் ஆகும்.
கூறுவெளி (Sample Space)	சம வாய்ப்புச் சோதனையின் எல்லா விளைவுகளின் கணம் கூறுவெளி எனப்படும். இதனை S எனக் குறிப்பிடலாம்.	உதாரணமாக, ஒரு நாணயத்தைச் சுண்டும் போது கூறுவெளி S = { தலை, பூ } ஒரு பகடையை உருட்டும் போது கூறுவெளி $S = \{1, 2, 3, 4, 5, 6\}$
கூறுபுள்ளி (Sample Point)	சோதனையின் ஒவ்வொரு விளைவும் கூறுபுள்ளி எனப்படும்.	ஒரு நாணயத்தை சுண்டும் போது தலை, பூ ஆகியவை கூறுபுள்ளிகளாகும் . ஒரு பகடையை உருட்டும் போது 1, 2, 3, 4, 5 மற்றும் 6 ஆகியவை கூறுபுள்ளிகளாகும்.
நிகழ்ச்சி (Event)	கூறுவெளியின் எந்த ஒரு உட்கணமும் நிகழ்ச்சி எனப்படும்.	உதாரணமாக, ஒரு பகடையை உருட்டும் போது கிடைக்கும் சாதகமான நிகழ்ச்சிகளில் சில $\{1, 2, 3\}, \{1, 3\}, \{2, 3, 5, 6\}$.



12.3 நிகழ்தகவு

நிகழ்தகவின் பல்வேறு கருத்துக்களிலிருந்து, நிகழ்தகவினை மூன்று வகைகளாக பிரிக்கலாம்:

(1) அகநிலை நிகழ்தகவு *(Subjective probability)*

(2) தொன்மை நிகழ்தகவு *(Classical probability)*

(3) பட்டறி நிகழ்தகவு *(Empirical probability)*

12.3.1 அகநிலை நிகழ்தகவு

உறுதிப்பாடற்றத் தன்மையை பற்றிய ஒருவருடைய நம்பிக்கையின் வலிமையை அகநிலை நிகழ்தகவு வெளிப்படுத்துகிறது. நாம் எதிர்பார்க்கும் விளைவுகளுக்கு நேரடியான சான்றுகள் மிகக் குறைந்த அளவே உள்ள அல்லது முழுமையாக இல்லாத தருணங்களில் மறைமுகமான சான்றுகளையோ, அறிவின்பால்பட்ட யூகத்திலோ, உள்ளுணர்வு மூலமோ மற்றும் அகநிலை காரணிகள் மூலமோ நிகழ்தகவினைக் கணக்கிடலாம்.

12.3.2 தொன்மை நிகழ்தகவு

தொன்மை நிகழ்தகவு எனும் கருத்து வாய்ப்பு விளையாட்டுகளிலிருந்து பெறப்பட்டது. சோதனையின் விளைவுகள் அனைத்தும் சமவாய்ப்பைப் பெற்றிருக்கும் போது இது பொருந்துகிறது. ஒத்த சமவாய்ப்புள்ள n நிகழ்வுகளில் ஒரு நிகழ்வு நிகழ சாதகமான s வாய்ப்புகள் இருப்பின் அந்நிகழ்ச்சியின் நிகழ்தகவு $\frac{s}{n}$ எனக் கொடுக்கப்படுகிறது.

12.3.3 பட்டறி நிகழ்தகவு

நேரடியான அனுபவங்கள் மூலம் விளைவுகளின் நிகழ்தகவினைக் காண்பது பட்டறி நிகழ்தகவு ஆகும்

12.4 நிகழ்தகவு – ஓர் அனுபவ முறை (பட்டறி முறை)

இத்தலைப்பில் நாம் பட்டறி நிகழ்தகவினைப் பற்றி மட்டுமே விவாதிக்கப்போகிறோம். மற்ற இரு நிகழ்தகவுகளைப் பற்றி மேல் வகுப்புகளில் படிப்போம். பட்டறி அல்லது சோதனை அல்லது ஒப்பீட்டு நிகழ்வெண் நிகழ்தகவு என்பது நேரடியான அனுபவங்கள்

மூலம் விளைவுகளின் நிகழ்தகவினைக் காண்பது ஆகும். பட்டறிவு நிகழ்தகவினை, சோதனைகளை பலமுறை செய்து அதன் முடிவுகளைக் கண்டறியலாம். பட்டறி நிகழ்தகவு என்பது ஒரு விளைவுச் சோதனையின் முடிவுகளின் அடிப்படையில் அறிவியல் பூர்வமாக மிகவும் சரியாக யூகிப்பது ஆகும்.

உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் சலவைக்கட்டியினை மக்கள் விரும்பும் முடிவை அறிய தொன்மை நிகழ்தகவினைப் பயன்படுத்த இயலாது. ஏனெனில், இச்சோதனையின் முடிவுகள் சமவாய்ப்பைப் பெற்றிருக்கவில்லை. இம்மாதிரியான சோதனையில் நிகழ்தகவினை அறிய, நாம் ஒரு கணக்கெடுப்பு நடத்த வேண்டும். இதனை சோதனையின் புள்ளிவிவரங்களைச் சேகரித்தல் எனலாம். அதிகமான விவரங்களைச் சேகரிக்கும் போது நாம் மிகச் சிறந்த மதிப்பீடுகளைப் பெறலாம்.

முக்கிய கருத்து **பட்டறி நிகழ்தகவு**

m என்பது E என்ற நிகழ்ச்சியின் சாதகமான முயற்சிகளின் எண்ணிக்கை என்றும் n என்பது மொத்த முயற்சிகளின் எண்ணிக்கை என்றும் கொண்டால், E-ன் பட்டறி நிகழ்தகவு என்பதை பின்வருமாறு வரையறுக்கலாம். இதனை $P(E)$ எனக் குறிப்பிடலாம்.

$$P(E) = \frac{\text{நிகழ்வு ஏற்பட்ட முயற்சிகளின் எண்ணிக்கை}}{\text{முயற்சிகளின் மொத்த எண்ணிக்கை}}$$

(அல்லது)

$$P(E) = \frac{\text{கண்டறிந்த சாதகமான நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை}}{\text{கண்டறிந்த மொத்த நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை}}$$

எனவே, $P(E) = \frac{m}{n}$

இங்கு $0 \leq m \leq n \implies 0 \leq \frac{m}{n} \leq 1$, ஆகவே $0 \leq P(E) \leq 1$.

$$\boxed{0 \leq P(E) \leq 1}$$

அதாவது, ஒரு நிகழ்ச்சி நிகழ்வதற்கான நிகழ்தகவு எப்பொழுதும் 0 விலிருந்து 1 முடிய உள்ள ஏதேனும் ஒரு எண் ஆகும்.

ஒரு நிகழ்ச்சி நிகழ்வதற்கான உறுதித்தன்மையை அறிய நிகழ்தகவு பெரிதும் பயன்படுகிறது. நிகழ்தகவு 1 எனில், அந்நிகழ்வு உறுதியாக நிகழும் எனவும், நிகழ்தகவு 0.9 எனில், நிகழ்ச்சி பெரும்பாலும் நிகழும் எனவும், நிகழ்தகவு 0.5 எனில், நிகழ்ச்சி நிகழ்வதற்கும் நிகழாமல் போவதற்கும் வாய்ப்புண்டு எனவும், நிகழ்தகவு 0 எனில், நிகழ்ச்சி உறுதியாக நிகழாது எனவும் அறியலாம்.

குறிப்புரை

மேற்காணும் விளக்கத்திலிருந்து நாம் அறிவது

(i) $P(E) = 1$ எனில், E என்பது உறுதியான நிகழ்ச்சி

(ii) $P(E) = 0$ எனில், E என்பது நடைபெற இயலாத நிகழ்ச்சி.

ஒரு நிகழ்ச்சியின் நிகழ்தகவு $P(E)$ எனில், அந்நிகழ்ச்சி நடைபெறாமல் இருப்பதற்கான நிகழ்தகவை $P(E')$ அல்லது $P(\overline{E})$ என எழுதலாம்.

$P(E) + P(E') = 1$ என நமக்குத் தெரியும். எனவே, $P(E') = 1 - P(E)$

$$\boxed{P(E') = 1 - P(E)}$$

நாம் சில நிகழ்தகவுகளைக் கணக்கிடும் போது கணக்கீடுகளை மட்டும் மனதில் கொள்ளக்கூடாது. நம்முடைய நோக்கம் நிகழ்தகவின் அடிப்படைக் கோட்பாடுகளையும், விதிகளையும், கொள்கைகளையும் அறிந்து கொள்வதாக இருக்க வேண்டும்.

உதாரணம் :

ஒரு நாணயத்தை பலமுறை சுண்டும்போது, எத்தனை முறை தலை மற்றும் பூ விழுகின்றன என்பதற்கும், மொத்த சுண்டுதல்களுக்குமான விகிதங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

சுண்டுதலின் எண்ணிக்கை (n)	கிடைத்த தலைகளின் (H) எண்ணிக்கை (m_1)	$P(H) = \frac{m_1}{n}$	கிடைத்த பூக்களின் (T) எண்ணிக்கை (m_2)	$P(T) = \frac{m_2}{n}$
50	29	$\frac{29}{50}$	21	$\frac{21}{50}$
60	34	$\frac{34}{60}$	26	$\frac{26}{60}$
70	41	$\frac{41}{70}$	29	$\frac{29}{70}$
80	44	$\frac{44}{80}$	36	$\frac{36}{80}$
90	48	$\frac{48}{90}$	42	$\frac{42}{90}$
100	52	$\frac{52}{100}$	48	$\frac{48}{100}$

மேற்கண்ட அட்டவணையிலிருந்து நாம் சுண்டுதலின் எண்ணிக்கையை அதிகரிக்க அதிகரிக்க தலை கிடைப்பதற்கான நிகழ்தகவும், பூ கிடைப்பதற்கான நிகழ்தகவும் ஒன்றையொன்று நெருங்கி வருவதைக் காணலாம்.

செயல் (1): ஒரு நாணயத்தைச் சுண்டுதல்

ஒவ்வொரு மாணவனையும் ஒரு நாணயத்தை 10 முறை சுண்டச்செய்து, எத்தனை முறை தலை கிடைக்கிறது என்பதையும், எத்தனை முறை பூ கிடைக்கிறது என்பதையும் கவனித்து கீழே உள்ள அட்டவணையில் உள்ளவாறு குறிக்கச் சொல்லலாம்.

விளைவு	நேர்க்கோட்டுக் குறிகள்	10 சுண்டுதலில் விழுந்த தலைகள்/ பூக்களின் எண்ணிக்கை
தலை		
பூ		

இதே போல ஒரு நாணயத்தை 20, 30, 40, 50 முறை சுண்டச்செய்து மேற்கூறிய முறையிலேயே அட்டவணைப்படுத்த வேண்டும். பின்வரும் பின்னங்களின் மதிப்புகளை எழுதுக.

$$\frac{\text{தலை கிடைத்த சுண்டுதலின் எண்ணிக்கை}}{\text{சுண்டுதலின் மொத்த எண்ணிக்கை}} = \frac{\square}{\square}$$

$$\frac{\text{பூ கிடைத்த சுண்டுதலின் எண்ணிக்கை}}{\text{சுண்டுதலின் மொத்த எண்ணிக்கை}} = \frac{\square}{\square}$$

செயல் (2): ஒரு பகடையை உருட்டுதல்

ஒரு பகடையை 20 முறை உருட்டி அதன் ஆறு விளைவுகளுக்கும் நிகழ்தகவைக் கணக்கிடுக.

விளைவு	நேர்க்கோட்டுக் குறிகள்	20 முறை உருட்டும் போது கிடைக்கும் விளைவுகளின் எண்ணிக்கை	**கிடைத்த தொடர்புடைய விளைவுகளின் எண்ணிக்கை / பகடை உருட்டுதலின் மொத்த எண்ணிக்கை**
1			
2			
3			
4			
5			
6			

இச்சோதனையை 50, 100 முறை செய்து அவற்றின் முடிவுகளை இம்முறையிலேயே அட்டவணைப்படுத்தலாம்.

செயல் (3): இரு நாணயங்களைச் சுண்டுதல்

இரு நாணயங்களை சேர்ந்தாற்போல் 10 முறை சுண்டி அதன் நிகழ்வுகளைக் கவனித்து பின்வருமாறு அட்டவணைப்படுத்துக.

விளைவு	நேர்க் கோட்டுக் குறிகள்	10 முறை சுண்டும் போது கிடைக்கும் விளைவுகள்	**கிடைத்த தொடர்புடைய விளைவுகளின் எண்ணிக்கை / இரு நாணயங்கள் சுண்டுதலின் மொத்த எண்ணிக்கை**
இரண்டு தலைகள்			
ஒரு தலை மற்றும் ஒரு பூ			
தலை தவிர்த்து			

செயல் (1)-ல் ஒவ்வொரு முறையும் ஒரு நாணயத்தை சுண்டுவதை முயற்சி என்கிறோம். இதைப் போலவே செயல் (2)-ல் ஒவ்வொரு முறையும் பகடையை உருட்டுதலை முயற்சி என்றும், செயல் (3)-ல் இரு நாணயங்களை ஒரே நேரத்தில் சுண்டுதலையும் முயற்சி என்றும் அழைக்கிறோம்.

செயல் (1)-ல் ஒரு குறிப்பிட்ட சுண்டுதல் நிகழ்ச்சியில் தலை கிடைப்பதை விளைவு என்கிறோம், அதைப் போலவே பூ கிடைப்பதையும் அந்நிகழ்ச்சியின் மற்றொரு விளைவு என்கிறோம்.

செயல் (2)-ல் 5 என்ற குறிப்பிட்ட எண் கிடைப்பது என்பதை ஒரு விளைவு என்கிறோம்.

$$\frac{\text{தலை கிடைத்த சுண்டுதலின் எண்ணிக்கை}}{\text{சுண்டுதலின் மொத்த எண்ணிக்கை}}$$ -ன் மதிப்பை பட்டறி நிகழ்தகவு அல்லது சோதனை நிகழ்தகவு என்கிறோம் .

எடுத்துக்காட்டு 12.1

ஒரு உற்பத்தியாளர் உற்பத்தியான செல்லிடப்பேசிகளிலிருந்து (Cellphone) 1000 செல்லிடப்பேசிகளை சமவாய்ப்பு முறையில் தேர்ந்தெடுத்து சோதித்துப் பார்த்ததில் 25 செல்லிடப்பேசிகள் குறைபாடுடையன என்று கண்டுபிடிக்கப்பட்டது எனில், சமவாய்ப்பு முறையில் தேர்ந்தெடுக்கும் ஒரு செல்லிடப்பேசி குறைபாடுடையதாக இருக்க நிகழ்தகவு என்ன.

தீர்வு சோதனை செய்த செல்லிடப்பேசிகளின் எண்ணிக்கை = 1000 அதாவது, $n = 1000$

E என்பது குறைபாடுள்ள செல்லிடைப்பேசிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான நிகழ்ச்சி என்க.

$n(E) = 25$ அதாவது, $m = 25$

$$P(E) = \frac{\text{குறைபாடுகளுடைய செல்லிடப்பேசிகளின் எண்ணிக்கை}}{\text{சோதனை செய்த செல்லிடப்பேசிகளின் மொத்த எண்ணிக்கை}}$$

$$= \frac{m}{n} = \frac{25}{1000} = \frac{1}{40}$$

எடுத்துக்காட்டு 12.2

T20 மட்டைப்பந்து போட்டியில் (cricket) ராசு 50 பந்துகளை எதிர்கொண்டு 10 முறை ஆறு ஓட்டங்களை எடுத்தார். அவர் எதிர்கொண்ட பந்துகளில் ஒரு பந்தை சமவாய்ப்பு முறையில் தேர்ந்தெடுக்கும் போது அதில் அவர் ஆறு ஓட்டங்கள் எடுக்காமல் இருப்பதற்கான நிகழ்தகவு என்ன?

தீர்வு ராசு எதிர்கொண்ட மொத்த பந்துகளின் எண்ணிக்கை = 50. அதாவது, $n = 50$

E என்பது ராசு ஆறு ஓட்டங்கள் எடுப்பதற்கான நிகழ்ச்சி எனில்,

E' என்பது ராசு ஆறு ஓட்டங்கள் எடுக்காமல் இருப்பதற்கான நிகழ்ச்சி ஆகும்.

$n(E) = 10$ அதாவது, $m=10$

$$P(E) = \frac{\text{ராசு அடித்த ஆறு ஓட்டங்களின் எண்ணிக்கை}}{\text{எதிர்கொண்ட பந்துகளின் மொத்த எண்ணிக்கை}}$$

$$= \frac{m}{n} = \frac{10}{50} = \frac{1}{5}$$

P (ராசு ஆறு ஓட்டங்கள் எடுக்காமல் இருப்பதற்கான) $= P(E') = 1 - P(E)$

$$= 1 - \frac{1}{5} = \frac{4}{5}$$

எடுத்துக்காட்டு 12.3

மட்டைப்பந்து குழுவை தேர்ந்தெடுக்கும் தேர்வுக்குழு, வீரர்களை தேர்வு செய்ய வீரர்களின் முந்தைய போட்டிகளில் 40 ஓட்டங்களுக்கு மேல் எத்தனை போட்டிகளில் எடுத்தனர் என்பதை தகுதியாகக் கொண்டு தேர்வு செய்தனர். குமார் மற்றும் கிருபா ஆகிய இரு வீரர்களின் திறன் கடந்த 30 போட்டிகளில் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

வீரர்களின் பெயர்	40-க்கு மேற்பட்ட ஓட்டங்கள் எடுத்த போட்டிகளின் எண்ணிக்கை
குமார்	20
கிருபா	12

இவ்வீரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான நிகழ்தகவுகளைக் காண்க.

தீர்வு உற்றுநோக்கிய போட்டிகளின் எண்ணிக்கை = 30 அதாவது, n = 30

E_1 என்பது குமார் 40 ஓட்டங்களுக்கு மேல் எடுப்பதற்கான நிகழ்ச்சி என்க,

$n(E_1) = 20$ அதாவது, $m_1 = 20$

E_2 என்பது கிருபா 40 ஓட்டங்களுக்கு மேல் எடுப்பதற்கான நிகழ்ச்சி என்க,

$n(E_2) = 12$ அதாவது, $m_2 = 12$

$$P(E_1) = \frac{m_1}{n} = \frac{20}{30}$$

$$P(E_2) = \frac{m_2}{n} = \frac{12}{30}$$

குமார் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான நிகழ்தகவு $= \frac{20}{30} = \frac{2}{3}$

கிருபா தேர்ந்தெடுக்கப்படுவதற்கான நிகழ்தகவு $= \frac{12}{30} = \frac{2}{5}$

எடுத்துக்காட்டு 12.4

ஒரு இருவழிச் சாலையில் குறிப்பிட்ட ஒரு நாளில் ஒரு காவலர் வாகனங்களின் வேகத்தை சோதனை செய்தார். அவர் சோதனை செய்த 160 வாகனங்களின் வேகங்களின் நிகழ்வெண் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வேகம்(கி.மீ/மணி)	20-29	30-39	40-49	50-59	60-69	70 ம் அதற்கு மேலும்
வாகனங்களின் எண்ணிக்கை	14	23	28	35	52	8

ஒரு வாகனத்தை சமவாய்ப்பு முறையில் தேர்ந்தெடுக்கும் போது அதன் வேகம்

(i) 69 கி.மீ/மணி- ஐ விட அதிகமாக (ii) 20 கி.மீ/மணியிலிருந்து 39 கி.மீ/மணி வரை

(iii) 60 கி.மீ/மணி-க்கும் குறைவாக (iv) 40 கி.மீ/மணியிலிருந்து 69 கி.மீ/மணி வரை

இருக்க நிகழ்தகவு என்ன?

தீர்வு

(i) நிகழ்ச்சி E_1 என்பது வாகனத்தின் வேகம் 69 கி.மீ/மணி-ஐ விட அதிகமாக இருப்பதற்கான நிகழ்ச்சி என்க.

$n(E_1) = 8$ அதாவது, $m_1 = 8$

சோதனை செய்த மொத்த வாகனங்கள் = 160. அதாவது, $n = 160$

$$P(E_1) = \frac{m_1}{n} = \frac{8}{160} = \frac{1}{20}$$

(ii) நிகழ்ச்சி E_2 என்பது வாகனத்தின் வேகம் 20 கி.மீ/மணியிலிருந்து 39 கி.மீ/மணி வரை இருப்பதற்கான நிகழ்ச்சி என்க

$n(E_2) = 14+23 = 37$ அதாவது, $m_2 = 37$

$$P(E_2) = \frac{m_2}{n} = \frac{37}{160}$$

(iii) நிகழ்ச்சி E_3 என்பது வாகனத்தின் வேகம் மணிக்கு 60 கி.மீ ஐவிடக் குறைவாக இருப்பதற்கான நிகழ்ச்சி என்க.

$n(E_3) = 14+23+28+35 = 100$ அதாவது, $m_3 = 100$

$$P(E_3) = \frac{m_3}{n} = \frac{100}{160} = \frac{5}{8}$$

(iv) நிகழ்ச்சி E_4 என்பது வாகனத்தின் வேகம் 40 கி.மீ/மணியிலிருந்து 69 கி.மீ/மணி வரை இருப்பதற்கான நிகழ்ச்சி என்க.

$n(E_4) = 28+35+52 = 115$ அதாவது, $m_4 = 115$

$$P(E_4) = \frac{m_4}{n} = \frac{115}{160} = \frac{23}{32}$$

எடுத்துக்காட்டு 12.5

ஒரு ஆராய்ச்சியாளர் மாணவர்களின் கணித திறமைக்கும், புள்ளியியல் ஆர்வத்திற்கும் இடையே உள்ள தொடர்பைக் கண்டறிய விரும்பினார். சோதனைக்காக 200 மாணவர்களை சமவாய்ப்பு முறையில் தேர்ந்தெடுத்து அவர்களிடம் கணிதத் திறமை மற்றும் புள்ளியியல் ஆர்வம் ஆகியவற்றை குறைவு, சராசரி, அதிகம் எனக் குறிப்பிடுமாறு கூறி சேகரிக்கப்பட்ட புள்ளிவிவரப் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

		கணிதத்தில் திறமை		
		குறைவு	சராசரி	அதிகம்
புள்ளியியலில் ஆர்வம்	குறைவு	60	15	15
	சராசரி	15	45	10
	அதிகம்	5	10	25

ஒரு மாணவரை சமவாய்ப்பு முறையில் தேர்ந்தெடுக்கும்போது அவர்

(i) கணிதத்தில் அதிக திறமை

(ii) புள்ளியியலில் சராசரி ஆர்வம்

(iii) புள்ளியியலில் அதிக ஆர்வம்

(iv) கணிதத்தில் அதிக திறமை மற்றும் புள்ளியியலில் அதிக ஆர்வம் மற்றும்

(v) கணிதத்தில் சராசரி திறமை மற்றும் புள்ளியியலில் குறைந்த ஆர்வம்,

உடையவராக இருக்க நிகழ்தகவு என்ன?

தீர்வு

மொத்த மாணவர்களின் எண்ணிக்கை = 80+70+50=200 அதாவது, $n = 200$

(i) நிகழ்ச்சி E_1 என்பது கணிதத்தில் அதிக திறமை உடையோர் என்க.

$$n(E_1) = 15+10+25= 50 \qquad \text{அதாவது, } m_1 = 50$$

$$P(E_1) = \frac{m_1}{n} = \frac{50}{200} = \frac{1}{4}$$

(ii) நிகழ்ச்சி E_2 என்பது புள்ளியியலில் சராசரி ஆர்வம் உடையோர் என்க.

$$n(E_2) = 15+45+10 = 70 \qquad \text{அதாவது, } m_2 = 70$$

$$P(E_2) = \frac{m_2}{n} = \frac{70}{200} = \frac{7}{20}$$

(iii) நிகழ்ச்சி E_3 என்பது புள்ளியியலில் அதிக ஆர்வம் உடையோர் என்க.

$$n(E_3) = 5+10+25 = 40 \qquad \text{அதாவது, } m_3 = 40$$

$$P(E_3) = \frac{m_3}{n} = \frac{40}{200} = \frac{1}{5}$$

(iv) நிகழ்ச்சி E_4 என்பது கணிதத்தில் அதிக திறமை மற்றும் புள்ளியியலில் அதிக ஆர்வம் உடையோர் என்க.

$$n(E_4) = 25 \qquad \text{அதாவது, } m_4 = 25$$

$$P(E_4) = \frac{m_4}{n} = \frac{25}{200} = \frac{1}{8}$$

(v) நிகழ்ச்சி E_5 என்பது கணிதத்தில் சராசரி திறமை மற்றும் புள்ளியியலில் குறைந்த ஆர்வம் உடையோர் என்க.

$$n(E_5) = 15 \qquad \text{அதாவது, } m_5 = 15$$

$$P(E_5) = \frac{m_5}{n} = \frac{15}{200} = \frac{3}{40}$$

எடுத்துக்காட்டு 12.6

ஒரு மருத்துவமனை பதிவேட்டில் மகப்பேற்றிற்காக மகளிர் தங்கியிருந்த நாட்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

தங்கியிருந்த நாட்களின் எண்ணிக்கை	3	4	5	6	6 நாட்களை விட அதிகம்
மகளிர் எண்ணிக்கை	15	32	56	19	5

எவரேனும் ஒருவரை சமவாய்ப்பு முறையில் தேர்தெடுக்கும் போது அவர்

(i) சரியாக 5 நாட்கள் (ii) 6 நாட்களுக்கும் குறைவாக

(iii) அதிக பட்சம் 4 நாட்கள் (iv) குறைந்தபட்சம் 5 நாட்கள்

தங்கியிருக்க நிகழ்தகவு என்ன?

தீர்வு மகப்பேற்றிற்காக மருத்துவமனையில் தங்கியிருந்தவர்களின் எண்ணிக்கை $= 127$

அதாவது, $n = 127$

(i) E_1 என்பது சரியாக 5 நாட்கள் தங்கியிருப்பதற்கான நிகழ்ச்சி என்க.

$n(E_1) = 56$ அதாவது, $m_1 = 56$

$$P(E_1) = \frac{m_1}{n} = \frac{56}{127}$$

(ii) E_2 என்பது 6 நாட்களுக்கும் குறைவாக தங்கியிருப்பதற்கான நிகழ்ச்சி என்க.

$n(E_2) = 15 + 32 + 56 = 103$ அதாவது, $m_2 = 103$

$$P(E_2) = \frac{m_2}{n} = \frac{103}{127}$$

(iii) E_3 என்பது அதிக பட்சம் 4 நாட்கள் தங்கியிருப்பதற்கான நிகழ்ச்சி என்க. (3 மற்றும் 4 நாட்கள் மட்டும்)

$n(E_3) = 15 + 32 = 47$ அதாவது, $m_3 = 47$

$$P(E_3) = \frac{m_3}{n} = \frac{47}{127}$$

(iv) E_4 என்பது குறைந்தபட்சம் 5 நாட்கள் தங்கியிருப்பதற்கான நிகழ்ச்சி என்க.(5,6 மற்றும் 7 நாட்கள் மட்டும்)

$n(E_4) = 56 + 19 + 5 = 80$ அதாவது, $m_4 = 80$

$$P(E_4) = \frac{m_4}{n} = \frac{80}{127}$$

பயிற்சி 12.1

1. கீழ்கண்டவற்றுள் எவை நிகழ்தகவின் மதிப்பாக இருக்க முடியாது.

   i) 1/3 ii) – 1/5 iii) 0.80 iv) – 0.78 v) 0
   vi) 1.45 vii) 1 viii) 33% ix) 112%

2. வரையறு: i) சோதனை ii) உறுதியான சோதனை iii) சமவாய்ப்புச் சோதனை iv) கூறுவெளி v) நிகழ்ச்சி vi) முயற்சி

3. வரையறு : பட்டறி நிகழ்தகவு

4. சங்கீத் என்பவர் கடந்த 20 கூடைப்பந்து போட்டிகளில் இலக்கை நோக்கி தடையின்றி எறியும் வாய்ப்புகளில் 65 முறை இலக்கை நோக்கி எறிந்தார் மற்றும் 35 முறை தவறவிட்டார் எனில், அவர் எறிந்த பந்துகளில் ஒரு பந்தை சமவாய்ப்பு முறையில் தேர்ந்தெடுத்தால் அப்பந்து இலக்கை அடைவதற்கான சோதனை நிகழ்தகவு என்ன?

5. வானிலை ஆராய்ச்சி மையத்தில் கடந்த 300 நாட்களில் பதிவுசெய்யப்பட்டு வெளியிடப்பட்ட வானிலை அறிக்கைகளில் 195 முறை சரியாக இருந்தது. கொடுக்கப்பட்ட நாளில் வெளியிடப்பட்ட வானிலை அறிக்கை (i) சரியாக (ii) தவறாக இருப்பதற்கான நிகழ்தகவு என்ன?

6. ஒரு புதிய ஊட்டச்சத்து பானத்தின் சுவையைப் பற்றி கௌரி, 25 மாணவர்களிடம் கருத்துகளைக் கேட்டறிந்தார். கிடைத்த பதில்கள் பின்வருமாறு

பதில்கள்	விரும்புவோர்	விரும்பாதோர்	முடிவெடுக்காதோர்
மொத்த நபர்கள்	15	8	2

ஒரு மாணவரை சமவாய்ப்பு முறையில் தேர்தெடுக்கும் போது அவர் சுவையை

(i) விரும்புபவராக (ii) விரும்பாதவராக (iii) முடிவெடுக்காதவராக

இருக்க நிகழ்தகவு என்ன?

7. தேர்ந்தெடுக்கப்பட்ட 50 நபர்களில் 21 பேர் “O” வகை இரத்தமும் ,22 பேர் “A” வகை இரத்தமும், 5 பேர் “B” வகை இரத்தமும், 2 பேர் “AB” வகை இரத்தமும், உடையவராக இருந்தனர்.

ஒருவரை சமவாய்ப்பு முறையில் தேர்தெடுக்கும் போது அவர்

(i) “O” வகை இரத்தம் உடையவராக (ii) “B” வகை இரத்தம் இல்லாதவராக

(iii) “A” வகை இரத்தம் உடையவராக (iv) “AB” வகை இரத்தம் இல்லாதவராக.

இருக்க நிகழ்தகவு என்ன?

8. ஒரு பகடையை 500 முறை உருட்டிய போது கிடைத்த விளைவுகள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

விளைவுகள்	1	2	3	4	5	6
நிகழ்வெண்கள்	80	75	90	75	85	95

ஒரு விளைவு

(i) 4 ஐ விடக் குறைவாக (ii) 2 ஐ விடக் குறைவாக (iii) 2 ஐ விட அதிகமாக

(iv) 6 ஆக (v) 6 ஆக இல்லாமல்.

இருக்க நிகழ்தகவு என்ன?

9. தேர்ந்தெடுக்கப்பட்ட 2000 குடும்பங்களில் இரு குழந்தைகள் வரை உள்ள குடும்பங்களின் விவரம் பின்வருமாறு

ஒரு குடும்பத்தில் உள்ள பெண் குழந்தைகளின் எண்ணிக்கை	2	1	0
குடும்பங்களின் எண்ணிக்கை	624	900	476

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குடும்பத்தில்

(i) 2 பெண் குழந்தைகள் (ii) ஒரு பெண் குழந்தை (iii) பெண் குழந்தை இல்லாமல்

இருக்க நிகழ்தகவு என்ன?

10. 500 சிறு குழல் விளக்குகளின் வாழ்நாள் விவரம் கீழே தரப்பட்டுள்ளன.

வாழ்நாள்(மாதங்களில்)	9	10	11	12	13	14	14 ஐ விட அதிகம்
விளக்குகளின் எண்ணிக்கை	26	71	82	102	89	77	53

ஒரு சிறுகுழல் விளக்கு தேர்ந்தெடுக்கும் போது, கீழ்க்காணும் வாழ்நாள் பயன்பாட்டிற்கான நிகழ்தகவினைக் காண்க.

(i) 12 மாதங்களுக்குக் குறைவாக (ii) 14 மாதங்களுக்கு அதிகமாக

(iii) அதிகபட்சம் 12 மாதங்கள் (iv) குறைந்தபட்சம் 13 மாதங்கள்

11. பரபரப்பான ஒரு நாளில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில், மகிழ்வுந்தில் அமர்ந்திருந்தோரின் எண்ணிக்கை பதிவு செய்யப்பட்டது. 60 மகிழ்வுந்துகளில் சென்ற நபர்களின் எண்ணிக்கை கீழ்க்கண்ட அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

மகிழ்வுந்தில் அமர்ந்திருந்தோரின் எண்ணிக்கை	1	2	3	4	5
மகிழ்வுந்துகளின் எண்ணிக்கை	22	16	12	6	4

குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பிறகு இவ்விடத்தை ஒரு மகிழ்வுந்தானது கடந்து சென்றால், அதில் அமர்ந்திருக்கும் நபர்களின் எண்ணிக்கை.

(i) 2 மட்டும் (ii) 3-ஐ விடக் குறைவாக

(iii) 2-ஐ விடக் குறைவாக (iv) குறைந்தபட்சம் 4 ஆக

இருக்க நிகழ்தகவினைக் காண்க.

12. இன்சுவை என்ற மாணவி கணிதத்தில் நடத்தப்பட்ட அலகுத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்கள் பின்வருமாறு

அலகுத் தேர்வு	I	II	III	IV	V	VI	VII	VIII	IX	X
பெற்ற மதிப்பெண்கள் (%)	89	93	98	99	98	97	96	90	98	99

இவ்விவரங்களைக் கொண்டு அலகுத்தேர்வில்

(i) 95% க்கும் அதிகமாக (ii) 95% க்கு குறைவாக (iii) 98% க்கும் அதிகமாக மதிப்பெண் பெற நிகழ்தகவினைக் காண்க.

13. கீழ்க்கண்ட அட்டவணையானது ஒரு குடியிருப்பில் தங்கியுள்ளோரின் நிலையைக் காட்டுகிறது

வகை / பாலினம்	கல்லூரி மாணவர்	பணியாளர்
ஆண்	5	3
பெண்	4	8

குடியிருப்போர் ஒருவரை சமவாய்ப்பு முறையில் தேர்ந்தெடுக்கும் போது அவர்

(i) பெண்ணாக இருக்க (ii) கல்லூரி மாணவராக இருக்க
(iii) கல்லூரி மாணவியாக இருக்க (iv) ஆண் பணியாளராக
இருக்க நிகழ்தகவு என்ன?

14. ஒரு குறிப்பிட்ட புதிய அல்லது பயன்படுத்தப்பட்ட மகிழுந்துகளை வாங்கிய 1000 நுகர்வோரின் களப்பணி விவரங்கள் கீழ்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

திருப்தி நிலை / வகை	திருப்தியடைந்தவர்	திருப்தியடையாதவர்
புதியது	300	100
பயன்படுத்தியது	450	150

ஒரு நுகர்வோர் சமவாய்ப்பு முறையில் தேர்ந்தெடுக்கும் போது, அவர்

(i) புதிய மகிழுந்து வாங்கியவராக இருக்க

(ii) திருப்தியடைந்தவராக இருக்க

(iii) பயன்படுத்தப்பட்ட மகிழுந்து வாங்கி ஆனால் திருப்தியடையாதவராக இருக்க நிகழ்தகவு என்ன?

15. தேர்ந்தெடுக்கப்பட்ட 1,000 நபர்களிடம் அவர்கள் ஒரு வருடத்திற்கு பிறகு செல்லிடப்பேசிகளை வாங்க திட்டமிட்டிருக்கிறார்களா என்பதைப் பற்றி விவரங்கள் சேகரிக்கப்பட்டது. ஒரு வருடம் சென்ற பிறகு அதே நபர்களிடம் மீண்டும் அவர்கள் செல்லிடப்பேசி வாங்கிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு அதன் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

	வாங்கியோர்	வாங்காதோர்
வாங்க திட்டமிட்டோர்	200	50
வாங்க திட்டமிடாதோர்	100	650

ஒரு நபரை தேர்ந்தெடுக்கும் போது அவர்
(i) செல்லிடப்பேசி வாங்க திட்டமிட்டு இருந்தவராக
(ii) செல்லிடப்பேசி வாங்க திட்டமிட்டிருந்து ஆனால் வாங்காதவராக
(iii) வாங்க திட்டமிடாமல் ஆனால் வாங்கியவராக

இருக்க நிகழ்தகவு என்ன?

16. மக்கள் குடியிருக்கும் இடத்திற்கும் வாகனம் வைத்திருப்பதற்கும் இடையே உள்ள தொடர்பை அறிய ஒரு கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் மகிழுந்து உரிமையாளர்களில் 200 பேர் மிகப்பெரிய நகரங்களிலிருந்தும், 150 பேர் புறநகரங்களிலிருந்தும், 150 பேர் கிராமப்புறங்களிலிருந்தும் சமவாய்ப்பு முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்டது.

பகுதியின் வகை / வெளிநாட்டு மகிழுந்து	பெருநகர்	புறநகர்	கிராமம்
உரிமை உள்ளவர்	90	60	25
உரிமை அல்லாதவர்	110	90	125

தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர்

(i) வெளிநாட்டு மகிழுந்து உரிமையாளராக இருக்க

(ii) புறநகரில் வசிக்கும் வெளிநாட்டு மகிழுந்து உரிமையாளராக இருக்க

(iii) பெருநகரத்தில் வசித்து வெளிநாட்டு மகிழுந்து உரிமையாளராக இல்லாமல் இருக்க

(iv) பெருநகரத்தில் உள்ள வெளிநாட்டு மகிழுந்து உரிமையாளராக இருக்க

(v) கிராமபுறத்தில் வசிப்பவராக இல்லாமலும் வெளிநாட்டு மகிழுந்து உரிமையாளராக இல்லாமலும் இருப்பவராக

இருக்க நிகழ்தகவு என்ன?

17. ஒரு அரசு மேல்நிலைப் பள்ளியில் பணிபுரியும் 100 ஆசிரியர்களின் கல்வித் தகுதிகள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

கல்வி நிலை / வயது	ஆய்வியல் நிறைஞர் (M.Phil)	முதுகலைப் பட்டம் வரை	இளங்கலைப் பட்டம் மட்டும்
30-க்கு கீழ்	5	10	10
30 - 40 வரை	15	20	15
40-ற்கு மேல்	5	5	15

ஒரு ஆசிரியரை சமவாய்ப்பு முறையில் தேர்ந்தெடுக்கும் போது அவர்

(i) முதுகலைப் பட்டம் வரை பெற்றவராக இருக்க

(ii) 30 வயதிற்கு குறைவானவரும் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றவராகவும் இருக்க

(iii) 40 வயதிற்கு மேற்பட்டவராகவும் இளங்கலைப் பட்டம் பெற்றவராகவும் இருக்க

(iv) 30 வயது முதல் 40 வயதிற்குட்பட்டவராகவும் முதுகலைப் பட்டம் பெற்றவராகவும் இருக்க

(v) 40 வயதிற்கு மேற்பட்டவராகவும் ஆய்வியல் நிறைஞர் (M.Phil) பட்டம் பெற்றவராகவும் இருக்க நிகழ்தகவு என்ன?

18. தேர்ந்தெடுக்கப்பட்ட 1,000 நபர்களின் வயது மற்றும் அவர்களுக்கு மிகவும் பிடித்தமான விளையாட்டு பற்றிய விவரங்கள் பின்வருமாறு

விளையாட்டு / வயது	கையுந்து பந்து (Volleyball)	கூடைப்பந்து (Basket ball)	வளைகோல் ஆட்டம் (Hockey)	கால்பந்து (Football)
20 க்கு கீழ்	26	47	41	36
20 - 29	38	84	80	48
30 - 39	72	68	38	22
40 - 49	96	48	30	26
50 மற்றும் அதற்கு மேல்	134	44	18	4

அவர்களில் ஒரு நபர் சமவாய்ப்பு முறையில் தேர்ந்தெடுக்கும் போது அவர்

